


SIR JOHN WALLIS.
Chief Justice, High Court, Madras.
ஸர் ஜான் வாலிஸ்.
சீப் ஜஸ்டிஸ், சென்னை ஹைகோர்ட்.



KING ALBERT OF BELGIUM.
ஆல்பர்ட், பெல்ஜியத்தின் அரசர்.




THE LATE ARCHDUKE FRANCIS FERDINAND
Crown Prince of Austria, and his family.
ஆர்ச்ட்யூக் ப்ரான்ஸிஸ் பேர்டினண்ட்.
காலஞ்சென்ற ஆஸ்ட்ரியாவின் இளவரசர்; அவர் குடும்பம்.



FRANCIS JOSEPH.
Emperor of Austria.
ப்ரான்ஸிஸ் ஜோஸப்.
ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தி.

SUPPLEMENT TO "THE PEOPLE'S FRIEND."
"ஜநுபிமானி"க்கு அனுபந்தம்




THE LATE SIR T. PALIT.
காலஞ்சென்ற ஸர் தாரகநாத் ப்லிட்.



THE TSAR OF RUSSIA AND HIS HEIR.
ரஷ்ய சக்கிரவர்த்தியும் அவருடைய இளவரசரும்.



H. H. THE NIZAM OF HYDERABAD.
ஹைதராபாத் நிஜாம் அரசர்.



THE "EMDEN,"
"எம்டன்" என்னும் ஜெர்மன் கிரூஸர்.

# ஜனாபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது)

## THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE'



ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.



புஸ்தகம் 7 Vol. 7. ஆனந்த ஸு ஐப்பசிமீ, OCTOBER 1914. ஸஞ்சிகை 2. No. 2.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy ... | 0 | 4 | 0 | ... ... | 0 | 6 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Page ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do ... | 2 | 8 | 0 | do |
| ¼ do ... | 1 | 4 | 0 | do |
| 1/10 do ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1 க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்ரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 4 | 0 | ... | 0 | 6 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 | 4 | 0 |
| 1/10 பக்கத்திற்கு | , ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**

3, & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ஆனந்தஹு ஐப்பசிமீ, [ஸஞ்சிகை 2.

## ORGANISATION OF AN ARMY.

### ஸைன்யத்தின் அமைப்பு.

ஒவ்வொரு தேசமும் வைத்துக்கொண்டிருக்கும் சேனாபலமானது தரைப்படை, கடல்படை, ஆகாயப்படை என்று மூன்று வகைகளாக இருக்கிறது. தரைப்படையிலுள்ள ஸைன்யங்களில் முக்யமாய் மூன்று பிரிவுகள் உண்டு. அவையாவன: 'இன்பண்ட்ரி' யென்று சொல்லப்படும் காலாள்படை; காவல்ரியென்று சொல்லப்படும் குதிரைப்படை; 'ஆர்ட்டிலரி' யென்று சொல்லப்படும் பீரங்கிப்படை,

### காலாள்படை.

காலாள் படையிலுள்ள ஸோல்ஜர்கள் 'பயனட்' என்று சொல்லப்படும் சனியன் வைத்திருக்கும் துப்பாக்கிகளுடன் யுத்தம் செய்வார்கள். சண்டைசெய்யும்போது ஸோல்ஜர்கள் முதலில் எதிரிகளை துப்பாக்கியால் சுட்டுத் தாக்குவார்கள். பிற்பாடு கிட்ட நெருங்கின போது சனியனால் குத்தித்தாக்குவார்கள்.

### குதிரைப்படை.

குதிரைப்படையிலுள்ள ஸோல்ஜர்களின் ஆயுதங்கள் கத்தியும், துப்பாக்கியுமாகும். 'லான்ஸர்ஸ்' என்னும் குதிரைப் படைக்கு கத்திக்குப் பதிலாக ஈட்டிகள் உண்டு. சில உத்யோகஸ்தர்களுக்கும், சில குதிரை வீரர்களுக்கும் 'ரிவால்வர்' என்னும் கைத்துப்பாக்கிகளும் உண்டு.

குதிரைப் படையின் முக்ய கடமைகளாவன:—எதிராளிகளின் ஸைன்யங்கள் இன்ன இடத்தில் இருக்கின்றன, இந்தப் பக்கம் போகின்றன என்பதைப்பற்றி தவறில்லாமல் சீக்ரம் தெரிந்துவருவதற்காக குதிரைப்படையிலுள்ள ஸோல்ஜர்கள் வெளியே சென்று, அவ்விஷயங்களைப்பற்றிய ஸமாசாரங்களை அறிந்துவந்து ராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவித்தல்; எதிரிகளோடு எதிர்த்துச் சண்டை செய்தல்; தோற்றுப்போன எதிரிகள் ஓடும்போது அவர்களைத் தாக்கி அவர்களை கலைந்தோடும்படி செய்தல் ஆகிய இவைகளே.

### பீரங்கிப்படை.

பீரங்கிப்படைக்கு இங்க்லீஷில் ஆர்ட்டிலரி என்று பெயர். ஆர்ட்டிலரியில் நான்கு விதங்கள் உண்டு. இவைகளில் 'ஹார்ஸ் ஆர்ட்டிலரி' யென்பது யுத்த காலங்களில் குதிரைப்படையோடு கூடப்போகும். இதன் பீரங்கிகளை வெகு ஸுலபமாய் இடம்விட்டு இடம் மாற்றலாம்.

'பீல்ட் ஆர்ட்டிலரி' என்னும் பிரிவுகள் யுத்தகாலங்களில் காலாள் படையின் பின்பக்கமிருந்துகொண்டு எதிரிகளைத் தாக்கும். பீரங்கிகளால் எதிரிகளைத் தாக்கி அவர்களைக் களைக்கச் செய்தபிறகு காலாள்படை எதிரிகளைத்தாக்கும். சிலஸமயங்களில் புறங்காட்டியோடும் எதிரிகளின்மேல் குண்டுகள்விட்டு அவர்களை அலமலங்கச் செய்வதுமுண்டு. 'மௌண்டன் ஆர்ட்டிலரி' யென்பது மலைப்ராந்தியங்களில் உபயோகப்படும் பீரங்கிப் படையின் பிரிவுகள். இந்தப் படையிலுள்ள பீரங்கிகள் அவைகளைப் பாகம் பாகமாகப் பிரித்து ம்ருகங்களின்மேல் ஏற்றி செங்குத்தான இடங்களுக்கும் ஏற்றிப் போகும்படி அமைக்கப்பட்டிருக்கும்.

'காரிஸன் ஆர்ட்டிலரி' என்னும் பீரங்கிப் படைகள் கோட்டைகளைக் காப்பதற்கு ஏற்பட்டிருப்பனவை,

### இஞ்ஜினீயர்கள்.

ஸைன்யத்தில் 'இஞ்ஜினியர்கள்' என்று ஒரு பிரிவு இருக்கிறது. இந்த 'இஞ்ஜினியர்'களின் வேலைகள் பின் வருமாறு :—

ரோடுகள் போடுதல், பாலங்கள் கட்டுதல், ரெயில்வே ரோடுகள் போடுதல், தந்திக் கம்பிகள் போட்டும், டெலிபோன்கள் போட்டும் அவைகளை நடத்தி வருதல், ஸைன்யங்கள் தங்குவதற்கு இடங்களை செப்பனிடுதல்; கோட்டைகளைக் காத்துக்கொள்ளுதலையும், எதிரிகளின் கோட்டைகளைத் தாக்குவதையும் மேற்பார்வை பார்த்தல், இடிக்கவேண்டிய கட்டிடங்கள், பாலங்கள் முதலியவைகளை இடித்தல், ஸாவேக்கள் செய்தல் ஆகிய இவைகளாகும். இந்த ஸைன்யத்திலுள்ளவர்கள் மராமத்து வேலையில் தேர்ந்திருப்பதோடு யுத்தத்திலும் தேர்ந்தவர்கள். இவர்களுக்கு மற்ற ஸோல்ஜர்களைப்போல் துப்பாக்கிகளும் உண்டு.

இவர்களுக்கு இன்னொரு முக்யமான வேலையுண்டு. யுத்தம் நடக்குமிடங்களில் உள்ள பற்பல சேனைப் பிரிவுகளுக்கும் ஸமாச்சாரப் போக்கு வரத்துகள் நடப்பதற்காக தந்தி ஏற்பாடும், கம்பியில்லாததந்தி ஏற்பாடும் அமைத்து தந்தி ஸமாசாரங்கள் அனுப்புவதுண்டு. மேலும் இவர்கள் யுத்தத்தில் வேண்டிய மாப்புகள், ப்ளான்கள் முதலியவைகளும் ராணுவ உத்தரவுகளும் அச்சடிப்பதும், போட்டகிராப் படங்கள் எடுப்பதும் உண்டு.

### ஆர்மி ஸேர்விஸ் கோர்.

இந்தப் பிரிவைச் சேர்ந்த கம்பெனிகள் ஸைன்யங்களின் ஸாமான்களை ஓரிடத்திலிருந்து மற்ற விடத்துக் கொண்டுபோவதற்கும், ஸைன்யங்களுக்கு ஆகாரம் தயார் செய்து கொடுப்பதற்கும் இன்னும் ஸைன்யம் ஸம்பந்தமான மற்ற வேலைகளைச் செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு இரண்டு குதிரைகள் கட்டி இழுக்கப்படும் பெரிய வண்டிகள் உண்டு. இவைகளில் ஸைன்யங்களின் ஸாமான்கள், சாப்பாட்டு ஸாமான்கள் முதலியவைகளைப் போட்டுக் கொண்டு ஓரிடத்திலிருந்து மற்ற விடத்துக்குக் கொண்டுபோவார்கள்.

### ஆர்மி மெடிகல் கோர்.

ஸைன்யங்களுக்கு வைத்ய உதவிசெய்வதற்காக ஏற்பட்டிருக்கும் ஜனங்களுக்கு 'ஆர்மி மெடிகல் கோர்' என்று பெயர். இவர்கள் குதிரைப்படை, காலாள்படை, பீரங்கிப்படை ஆகிய இவைகளோடு கூடப்போய், அந்தந்தப் படையில் காயமடைந்தவர்களுக்கு சிகித்ஸை செய்வார்கள்.

### மற்ற டிபார்ட்மெண்டுகள்.

'ஆர்மி ஆர்ட்னன்ஸ் டிபார்ட்மெண்டு' யுத்தத்துக்குவேண்டிய ஸாமான்கள் ஸப்ளை செய்வதற்காக ஏற்பட்டிருக்கிறது. 'ஆர்மி பே டிபார்ட்மெண்டு' ஸைன்யங்களுக்கு சம்பளம் பட்வாடா செய்வதற்கு ஏற்பட்டிருக்கிறது. 'ஆர்மி வெடிரினரி டிபார்ட்மெண்டு' ஸைன்யங்களின் குதிரைகளையும் மற்ற ம்ருகங்களையும் பராமரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

---

## THE ARMIES OF BELLIGERENT POWERS.

## யுத்தம்செய்யும் அரசுகளின் ஸைன்யங்கள்.

### THE BRITISH EMPIRE.

### ப்ரிட்டிஷ் ராஜ்யம்.

ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் ஸைன்யங்கள்

(1) இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட் ஆகிய இவைகளிலும், இங்க்லண்டின் ஆதீனத்துக்குள்பட்ட ப்ரதேசங்களிலும் உள்ள ப்ரிட்டிஷ் யுத்த ஆபீஸுக்குள்பட்ட ஸைன்யங்கள் ;

(2) இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள்; இந்திய ஸைன்யங்கள்;

(3) கனடா, ஆஸ்ட்ரேலியா, ந்யூ ஸீலண்ட், தென் ஆப்ரிக்கா ஆகிய இந்த நாடுகளின் ஸைன்யங்கள் ஆகிய இவைகளாகும்.

ப்ரிட்டிஷ் ஸைன்யம்.

ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள் மூன்றுவகைப் படும். அவையாவன.

(1) 'ரெகுலர் ஆர்மி' என்று சொல்லப்படும் க்ரமமான ஸைன்யங்கள்.

(2) 'டெரிடோரியல் ஆர்மி.'

(3) மற்ற சில்லரை ஸைன்யங்கள்.

ராணுவத்தில் சேரும் ஸோல்ஜர்கள் மொத்தம் 12-வர்ஷகாலம் வேலையிலிருக்கவேண்டும். பென்ஷன் வேண்டுமென்பவர்கள் 21-வர்ஷம் வேலையிலிருக்கவேண்டும்.

முன் சொன்ன 12-வர்ஷகாலத்தில் சில வர்ஷங்கள் பட்டாளத்திலேயே சேர்ந்திருக்க வேண்டும். பிறகு பாக்கி வர்ஷங்களில் தங்களுக் கிஷ்டமான வேறு வேலைகளில் அமர்ந்திருக்கலாம். யுத்த காலங்களில் ஸைன்யத்தில் சேரும்படி உத்தரவு வந்தவுடன் ஸைன்யங்களில் சேர்ந்து கொள்ளவேண்டும். இப்படி யுத்தத்தில் பழகி ரெஜிமெண்டை விட்டு விலகியிருப்பவர்களுக்கு 'ரிஸர்வ்' என்று பெயர்.

க்ரமமான ஸைன்யத்தில் ரெஜிமெண்டுகளில் சேர்ந்திருக்கும் துருப்புகளும் 'ஆர்மி ரிஸர்வ்' என்று சொல்லப்படும் துருப்புகளும் இருக்கின்றன.

க்ரமமான ஸைன்யத்தில் உள்ள பல பிரிவுகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| காலாள் படை | ... | 1,49,656 |
| குதிரைப்படை | ... | 21,228 |
| பீரங்கிப்படை | ... | 49,785 |
| இஞ்ஜினீயர்கள் | ... | 9,°48 |
| மற்ற டிபார்ட்மெண்ட் விப்பந்திகள் | ... | 15,122 |
| குடியேற்ற நாட்டுத் துருப்புகள் | ... | 3,977 |
| இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகள் | ... | 4,833 |
| மொத்தம் | ... | 2,54,249 |
| 'ஆர்மி ரிஸர்வ்' துருப்புகள் | ... | 1,46,756 |

இவைகளைத் தவிர 'ஸ்பெஷல்' ரிஸர்வ் என்று சில ஸைன்யங்கள் இருக்கின்றன. இவைகளின் ஸங்க்யை 67,586. இந்த ஸைன்யத்திலுள்ளவர்கள் க்ரமமான ஸைன்யங்களைப்போல் பயிற்சி செய்யப்படாமல் முதலில் ஆறுமாஸம் தொடர்ச்சியாய் யுத்தப் பயிற்சி செய்து, பிறகு வர்ஷந்தோறும் 15 நாள் பயிற்சி செய்யப்படுவார்கள். இவர்களை யுத்தகாலங்களில் தேவையானபோது க்ரமமான ஸைன்யங்களில் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

படை வெடுப்பு ஸைன்யம்

ஐரோப்பிய யுத்தகாலங்களில் இங்க்லண்டிலிருந்து ஏதாவது ஸைன்யங்கள் அனுப்ப வேண்டியிருக்குமென்பதை உத்தேசித்து சில வர்ஷங்களுக்கு முன்னுல் இத்தனை ஸைன்யம் அனுப்புவதென்று தீர்மானித்து வைத்திருக்கிறார்கள். இந்தப் படையெடுப்பு ஸைன்யத்தில் ஆபீஸர்களும் ஸோல்ஜர்களும் மற்ற விப்பந்திகளும் சேர்ந்து 1,63,331 பேர் இருப்பார்கள். இதில் குதிரைப்படையைச் சேர்ந்தவர்கள் 9,344. பீரங்கிப்படையைச் சேர்ந்தயர்கள் 28,520; காலாள்படையைச் சேர்ந்தவர்கள் 91,022; இஞ்சினீயர்கள் 6,507. இப்படிப்பட்ட ஸைன்யத்துக்கு வைத்யம் செய்பவர்கள், ஸப்ளைசெய்பவர்கள் முதலியவர்கள் 25,640; இப்படிப்பட்ட படையெடுப்பு ஸைன்யத்துடன்தான் ஜெனரல் ஸர் ஜான் ப்ரெஞ்ச் ப்ரான்ஸில்போய் யுத்தம்செய்துகொண்டிருக்கிறார்.

டெரிடோரியல் ஆர்மி.

இது தேச பாதுகாப்புக்காக ஜனங்கள் ஸ்வதர்வாகச் சேர்ந்துகொண்டிருக்கும் ஸைன்யங்களாகும். இதில் குதிரைப் படையும் காலாள்

படையும், பீரங்கிப் படையும், க்ரமமான ஸைன்யங்களுக்குள்ள மற்ற உபகரணங்களும் உண்டு. இதிலுள்ள ஸோல்ஜர்களுக்கு தொடர்ச்சியாக க்ரமமான ராணுவப் பயிற்சி ஒன்றும் கிடையாது. இவர்கள் வர்ஷத்தில் 8-முதல் 15-நாள் ராணுவ விஷயங்களில் பயிற்சி பெறுவார்கள். இந்த ஸைன்யத்தில் உள்ள பல பிரிவுகளின் ஸங்க்யை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| குதிரைப்படை | ... | 24,423 |
| 'ஹார்ஸ் ஆர்ட்டிலரி' யென்னும் குதிரை பீரங்கிப்படையும், 'பீல்ட் ஆர்ட்டிலரி' யென்னும் காலாட்படையுடன் கூடப் போகும் பீரங்கிப்படையும் | ... | 30,123 |
| 'காரிஸன் ஆர்ட்டிலரி' யென்னும் கோட்டைகளைக் காக்கும் பீரங்கிப் படை | ... | 9,484 |
| இஞ்ஜினியர்கள் | ... | 13,105 |
| காலாள் படையும் ஸைகிள் ஏறிப்போகிறவர்களும் | ... | 168,576 |
| டிபார்ட்மெண்டல் துருப்புகள் | ... | 21,106 |
| மொத்தம் | ... | 2,66,817 |

இவர்கள் தங்கள் தேசத்திலேயே யிருந்து சண்டை செய்யக் கடமைப் பட்டவர்கள். ஆயினும் இஷ்டப்பட்டவர்களுக்கு வேறு தேசங்களிலும் போய் சண்டைசெய்ய இப்போது அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அப்படி வேறு தேசங்களுக்கு அனுப்புமுன், யுத்தம் ஆரம்பித்த பிறகு 6 மாஸகாலம் அவர்களுக்கு ராணுவத்தில் பயிற்சி செய்வித்துப் பிறகுதான் வெளியிடங்களுக்கு அனுப்புவார்கள்.

மற்றசில்லரை ஸைன்யங்கள்.

மேலே சொன்ன ஸ்பெஷல் ரிஸர்வ், டெரிடோரியல் ஆர்மிஆகிய இவைகளுக்கு வேண்டிய ஆபீஸர்களை பயிற்சி செய்விக்க 'ஆபீஸர்ஸ் ட்ரெய்னிங்கோர்' என்று ஒரு ஸைன்யம் இருக்கிறது. இதில் காலேஜுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் உள்ளமாணவர்களை ராணுவத்தில் பயிற்சி செய்விக்கிறார்கள்.

'நாஷனல் ரிஸர்வ்' என்று ஒரு ஸைன்யம் இருக்கிறது. ஸைன்யத்தில் சேர்ந்திருந்து காலக்ரமத்தில் விட்டுவிட்டவர்களில் யுத்த காலங்களில் தேசத்துக்காக சண்டை செய்யத் தயாராயிருப்பவர்களுக்குத்தான் 'நாஷனல்ரிஸர்வ்' என்று பெயர். இவைகளைத் தவிர வேறு சில சில்லரை ஸைன்யங்களும் இருக்கின்றன.

ப்ரிட்டிஷ் ஸைன்யத்தின் அமைப்பு.

ப்ரிட்டிஷ் ஸைன்யத்தில் காலாள்படையில் ஒரு பட்டாளமென்பது ஸுமார் 800-முதல் 1030-ஸோல்ஜர்கள் வரையிலுள்ள ஒரு பிரிவாகும். ஸாதாரணமாய் இரண்டு பட்டாளங்கள் சேர்ந்த ஒரு ஸைன்யத்துக்கு ஒரு ரெஜிமெண்டென்று பெயர். இரண்டு ரெஜிமெண்டுகள் சேர்ந்தால் ஒரு ப்ரிகேடாகும். இரண்டு ப்ரிகேடும், சில குதிரைப் படையின் பிரிவுகளும் பீரங்கிப் படையின் பிரிவுகளும் இஞ்ஜினியர்களும் ஸைன்யத்துக்கு உதவியாயிருக்கவேண்டியமற்ற வைத்யர்கள் முதலியவர்களும் சேர்ந்த ஒரு ஸைன்யத்துக்கு ஒரு டிவிஷன் என்று பெயர். ஒரு டிவிஷனில் உள்ள மொத்தம் ஜனங்கள் ஸுமார் 20,000. இவர்களில் ஸுமார் 16,000 பேர்கள் ஸோல்ஜர்கள்.

குதிரைப் படையில் 150 பேர் கொண்ட பிரிவுக்கு ஸ்க்வாட்ரன் என்று பெயர். 3-ஸ்க்வாட்ரன் சேர்ந்தால் ஒரு ரெஜிமெண்டாகும். மூன்று ரெஜிமெண்டுகள் சேர்ந்ததற்கு ப்ரிகேட் என்று பெயர். இரண்டு அல்லது நான்கு ப்ரிகேடுகளும், 6-முதல் 24-பீரங்கிகளும் இஞ்ஜினியர்களும் மற்ற உதவி மனிதர்களும் கொண்ட குதிரை ஸைன்யத்துக்கு ஒரு குதிரைப் படை (காவல்ரி) டிவிஷன் என்று பெயர். ஒரு குதிரைப்படை டிவிஷனில் ஸாதாரணமாய் 6000 வீரர்கள் இருப்பார்கள்.

இந்திய ஸைன்யங்கள்.

இந்திய ஸைன்யங்கள் மொத்தம் பத்து டிவிஷன்களென்னும் வகுப்புகளாக பிரிக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் இருக்குமிடம் பின்வருமாறு.

| பெயர். | | இடம். |
|---|---|---|
| 1-வது டிவிஷன் | ... | பெஷாவார். |
| 2 ,, ,, | ... | ராவில்பிண்டி. |
| 3 ,, ,, | ... | லாகூர். |
| 7 ,, ,, | ... | மீரட். |
| 8 ,, ,, | ... | லக்னௌ. |

இந்த ஐந்து டிவிஷன்களும் சேர்ந்து 'வட ஸைன்யம்' என்று பெயரிடப்படுகிறது. இந்த வடஸைன்யத்தின் தலைமைஸ்தானம் முர்ரீ யென்னும் பட்டணம்.

| | | |
|---|---|---|
| 4-வது டிவிஷன் | ... | க்வெட்டா. |
| 5 ,, ,, | ... | மௌ. |
| 6 ,, ,, | ... | பூனா. |
| 9 ,, ,, | ... | உதகமண்டலம். |

இந்த நான்கும்சேர்ந்து தென் ஸைன்யமாகும். இந்த தென்ஸைன்யத்தின் தலைமை ஸ்தானம் (ஹெட்க்வார்ட்டர்ஸ்) உதகமண்டலம்.

பாக்கி பத்தாவது டிவிஷன் பர்மாவில் மாண்டலேயிலிருக்கிறது.

இந்தியாவிலுள்ள ஸைன்யங்களின் மொத்தத்தொகை 2,52,741. இதில் 1,72,671 இந்தியர்களாகும். மற்றவர்கள் ப்ரிட்டிஷ் ஜனங்கள்.

ப்ரிட்டிஷ் குடியேற்ற நாட்டு ஸைன்யங்கள்.

(i) ஆஸ்ட்ரேலியாவில் ஸமாதானமுள்ள ஸாதாரண காலங்களில் உள்ள ஸைன்யத்தின் தொகை 1,05,000. யுத்தகாலங்களில் உபயோகப்படக்கூடிய ஸைன்யத்தின் மதிப்பு 1,50,000. ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஸைன்யத்தில் பெரும்பாகம் குதிரைமேலேறி யுத்தம் செய்யும் காலாள் படையாகும். இந்த தேசத்தில் 12-வயஸுக்குமேல் 26-வயஸு வரையிலுமுள்ள எல்லா ஆண்களும் ஸோல்ஜர்களாகப்பயிற்சி பெறவேண்டியது கட்டாயமானது.

(ii) ந்யூஸீலண்ட் என்னும் நாட்டிலுள்ள ஸைன்யத்தின் தொகை ஸமாதானகாலத்தில் 30,000. இந்த தேசத்திலும் ஆண்களுக்குக் கட்டாயப்படுத்தி ராணுவப்பயிற்சி செய்விக்கிறார்கள்.

(iii) கனடாவிலுள்ள ஸைன்யத்தின்தொகை ஸாதாரணகாலங்களில் 75,000. யுத்தகாலத்தில் 1,50,000 பேருக்குமேல் உண்டு. இந்த தேசத்தில் எல்லா ஆண்களும் கட்டாயமாய் ராணுவப் பயிற்சியடைந்து மூன்றுவர்ஷம் ஸைன்யத்தில் சேர்ந்திருக்கவேண்டும்.

(iv) தென்னாப்ரிக்காவில் உள்ள இம்பீரியல் துருப்புகளின் தொகை 6,800. ஸாதாரண ஸமாதானகாலத்தில் உள்ள அந்நாட்டின் ஸொந்த ஸைன்யங்கள் 20,000. இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் 17-வது வயதுமுதல் 60-வது வயதுவரையில் யுத்தகாலங்களில் ஸைன்யத்தில்சேர்ந்து சண்டைசெய்யக் கடமைப்பட்டவர்கள். ஒவ்வொரும் 4-வர்ஷம் ராணுவத்தில் பயிற்சியடையவேண்டும்.

## II
## FRANCE.
### ப்ரான்ஸ்.

ப்ரான்ஸிலுள்ள எல்லா ஆண்களும் ராணுவத்தில் சேரக் கடமைப்பட்டவர்கள். தேகஸுகமில்லாதவர்கள் மாத்ரம் ராணுவத்தில் சேராமல் இருக்க அனுமதி பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் 20-வது வயஸில் ராணுவத்தில் சேரவேண்டும். ராணுவத்தில் ஒவ்வொருவரும் முதலில் மூன்று வர்ஷம் க்ரமமான ஸைன்யத்தில் சேர்ந்திருக்க வேண்டும். பிறகு 11-வர்ஷம் 'ஆர்மி ரிஸர்வ்' என்ற ரிஸர்வ் ஸைன்யத்தைச் சேர்ந்தவராகிறார்.

பிறகு 7-வர்ஷம் 'டெரிட்டோரியல் ஆர்மி' என்ற ஸைன்யத்திலும் இன்னும் 7-வர்ஷம்

சாமிநாதையர் நூல் நிலையம்,

'டெரிட்டோரியல் ரிஸர்வ்' என்ற ஸைன்யத்திலும் சேர்ந்திருக்க வேண்டும்.

ப்ரான்ஸிலுள்ள ஸைன்யங்கள் இரண்டு பிரிவுகளாப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கு 'மெட்ரபாலிடன் ஆர்மி' என்று பெயர். இது ப்ரான்ஸிலேயே தயாரிக்கப்பட்ட ஸைன்யமாகும். இரண்டாவது பிரிவுக்குப் பெயர் 'கலோனியல் ஆர்மி.' அதாவது குடியேற்ற நாட்டு ஸைன்யம்.

ப்ரான்ஸில் காலாள்படையின் பிரிவுகள் பின்வருமாறு. 3 பட்டாளங்கள் சேர்ந்து ஒரு ரெஜிமெண்டாகும். இரண்டு ரெஜிமெண்டுகள் ஒரு ப்ரிகேடாகும். இரண்டு ப்ரிகேடுகள் சேர்ந்து ஒரு டிவிஷன் என்னப்படும். இரண்டு டிவிஷன் சேர்ந்த ஸைன்யத்துக்கு ஒரு ஆர்மிகோர் என்று பெயர். ஒரு ஆர்மிகோரில் 33,000 போர்வீரர்கள் இருப்பார்கள். இன்னும் ஒவ்வொரு ஆர்மிகோரிலும் மொத்தம் 144 பீரங்கிகள் கொண்ட 36 பீரங்கிப்படைகள் உண்டு. இப்படிப்பட்ட 'ஆர்மிகோர்' ப்ரான்ஸில் 21 இருக்கின்றன.

காவல்ரி யென்னும் குதிரைப்படையானது 'டிவிஷன்' களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குதிரைப்படை டிவிஷனில் மொத்தம் 4700 போர்வீரர்கள் இருப்பார்கள். இதில் 12-பீரங்கிகள் உண்டு. ப்ரான்ஸில் இப்படிப்பட்ட குதிரைப்படை டிவிஷன்கள் 10 இருக்கின்றன.

சேனபலம்.

ப்ரான்ஸில் க்ரமமான ஸைன்யத்தின் தொகை 8,00,000. ரிஸர்வ் ஸைன்யம் மொத்தம் 5 லக்ஷமிருக்கிறது. இவைகளைத்தவிர டெரிடோரியல் ஆர்மி என்றும், டெரிடோரியல் ரிஸர்வ் என்றும் ரிஸர்வ் ஸைன்யங்களும் இருக்கின்றன.

குடியேற்ற நாட்டு ஸைன்யங்களில் மொத்தம் 87,000 ஸோல்ஜர்கள் இருக்கிறார்கள். இதில் [illegible] இருக்கிறார்கள், பாக்கி 59,000 பேர்கள் குடியேற்ற நாடுகளில் இருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் ப்ரான்ஸின் ஸைன்யம் 40 லக்ஷம் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

## III
## GERMANY.
### ஜெர்மனி.

ஜெர்மனியில் ஒவ்வொருவரும் கட்டாயமாக ராணுவத்தில் சேர்ந்து வேலை செய்யக் கடமைப்பட்டவர். ஒவ்வொருவரும் தமது 17-வது வயதில் ராணுவத்தில் சேரத் தயாராக இருக்கவேண்டும். ஆனால் ஸாதாரணமாக 20-வது வயதில் தான் ராணுவத்தில் சேர்த்துக் கொள்வது வழக்கம். இருபது வயஸுள்ள எல்லாரையும் ராணுவத்தில் சேர்த்துக்கொள்வதும் கிடையாது. ஒவ்வொரு வர்ஷமும் 50,000 பேர் வீதம் ஜனங்களைத் தெரிந்தெடுத்து ஸைன்யத்தில் சேர்த்துக் கொள்வது வழக்கம். ஒவ்வொரு ஸோல்ஜரும் 7-வர்ஷம் 'ஸ்டாண்டிங் ஆர்மி' என்னும் நிலையான ஸைன்யத்தில் சேர்ந்திருக்கவேண்டும். பிறகு சில வர்ஷங்கள் ஸைன்யத்தைச் சேர்ந்த 'ரிஸர்வ்' ஆக இருக்கவேண்டும்.

இதற்குப் பிறகு ஸோல்ஜர்கள் சிலவர்ஷகாலம் லாண்ட்வேர் என்னும் ரிஸர்வ் ஸைன்யத்திலும் சிலவர்ஷங்கள் லாண்ட்ஸ்ட்ரம் என்னும் ரிஸர்வ் ஸைன்யத்திலும் சேர்ந்தவர்களாவார்கள்.

ஜெர்மன் ஸைன்யத்தில் காலாட் படையின் அமைப்பு பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 3 பட்டாளம் | ... | 1 ரெஜிமெண்ட் |
| 2 ரெஜிமெண்ட் | ... | 1 ப்ரிகேட். |
| 2 ப்ரிகேட் | ... | 1 டிவிஷன். |
| 2 டிவிஷன் | ... | 1 ஆர்மி கோர். |

ஆர்மிகோர் என்னும் ஸைன்யப் பிரிவுகளில் சிலவற்றிற்கு 3-டிவிஷன்கள் உண்டு, யுத்த

காலங்களில் எல்லா ஆர்மிகோருக்குமே 3-டிவிஷன்கள் உண்டு. அநேக டிவிஷன்களு க்கு 3-ப்ரிகேடுகள் உண்டு. ஆர்மிகோர்களில் சிலவற்றிற்கு 30,000 ஸோல்ஜர்களும், வேறு சிலவற்றிற்கு 43,000 ஸோல்ஜர்களும் இருப் பார்கள். இந்த மாதிரியான 'ஆர்மிகோர்' என் னும் ஸைன்யங்கள் ஜெர்மனியில் 25 இருக்கின் றன. இவைகளோடு 8-டிவிஷன் குதிரைப் படையும் அநேக பீரங்கிகளும் இருக்கின்றன.

ஸமாதான காலங்களில் ஜெர்மனியின் ஸைன் யங்கள் ஸுமார் 8,f0,000 ஆபீஸர்களும் ஸோல்ஜர்களுமாகும்.

லாண்ட்வெர் என்னும் ரிஸர்வில் 18-லக்ஷம் பேரும், லாண்ட்ஸ்ட்ரம் என்னும் ரிஸர்வ் ஸைன்யத்தில் 8-லக்ஷம் பேரும் இருக்கிறார் கள்.

ஜெர்மனியின் குடியேற்ற நாட்டு ஸைன்யத் தில் ஆபீஸர்களும் ஸோல்ஜர்களுமாக 6400 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 2700 பேர் சீனுவிலுள்ள கயாசௌவில் இருக்கிறார் கள். ஜெர்மன் தென் மேற்கு ஆப்ரிக்காவில் 2150 பேர்கள் இருக்கிறார்கள்.

## IV
## AUSTRIA
### ஆஸ்ட்ரியா.

ஆஸ்ட்ரியாவில் ராணுவத் தொழில் எல்லா ருக்கும் கட்டாயமானது. ஒவ்வொருவரும் 19-வயவில் ராணுவத்தில் சேரக் கடமைப் பட்டவர்கள். ஆனால் ஸாதாரணமாய் 21-வய வில்தான் ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். ஒவ்வொரு வர்ஷத்திலும் ராணு வத்தில் சேரவரும் வாலிபர்களில் ஒரு பாகத் தை ஆஸ்ட்ரியா ஹங்கேரி ராஜ்யத்தின் இம் பீரியல் ராயல் ஸைன்யத்துக்கும், இன்னொரு பாகத்தை ஆஸ்ட்ரியா ராஜ்யத்து ஸைன்யத் துக்கும், மற்ற பாகத்தை ஹங்கேரி ராஜ்யத்து ஸைன்யத்துக்கும் சேர்த்துக்கொள்வார்கள், ராணுவத்தில் சேரும் வாலிபர்கள் சில வர்ஷம் க்ரமமான ஸைன்யத்திலும், சில வர்ஷங்கள் ரிஸர்வ் ஸைன்யத்திலுமாக மொத்தம் 12-வர் ஷங்கள் ராணுவத்தில் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அதற்குப் பிறகு ஒவ் வொருவரும் தங்கள் 42-வது வயஸு வரையில் லாண்ட்ஸ்ட்ரம் என்னும் இரண்டாவது ரிஸ ர்வு வகுப்பில் இருக்கவேண்டும்.

ஸாதாரண காலங்களில் ஆஸ்ட்ரியா ஹங் கேரி ராஜ்யத்துக்கு உள்ள ஸைன்யத்தின் தொகை பின்வருமாறு.

| | |
|---|---|
| இம்பீரியல் ஸைன்யங்கள் ... | 600,000 |
| ஆஸ்ட்ரியாவுக்கும் ஹங்கேரிக்கும் ப்ரத்யேகமாயுள்ள ஸைன்யங்களின் மொத்தமதிப்பு. ... | 230,000 |

யுத்தம் நேர்ந்தபோது மற்ற ரிஸர்வுகளை யெல்லாம் சேர்த்தால் கிடைக்கக்கூடிய மொ த்த ஸைன்யத்தின் மதிப்பு 18 லக்ஷமாகும்.

ஆஸ்ட்ரிய ஸைன்ய ஏற்பாட்டில் ஒரு ஆர்மி கோருக்கு 34,000 போர்வீரர்கள் இருப்பார் கள். ஒரு ஆர்மிகோரில் 32 பட்டாளங்களும், அதற்குவேண்டிய பீரங்கிகளும் மற்ற உதவி ஆள்களும் உண்டு. ஆஸ்ட்ரியா-ஹங்கேரியில் 16-ஆர்மி கோர்கள் இருக்கின்றன.

ஆஸ்ட்ரியா-ஹங்கேரிக்கு 6-டிவிஷன் குதி ரைப்படைகள் இருக்கின்றன. ஒரு குதிரைப் படை டிவிஷனில் 4,000 வீரர்கள் இருப்பார் கள்.

## V.
## RUSSIA.
### ரஷ்யா.

ரஷ்யாவில் எல்லாரும் ராணுவத்தில் சேரக் கடமைப்பட்டவர்கள். ஒவ்வொரு வாலிபரும் 20-வது வயவில் ராணுவத்தில்சேர்ந்து 3-வர் ஷம் அதில் வேலை செய்யவேண்டும். பிறகு 15-வர்ஷம் க்ரமமான ஸைன்யங்களைச்சேர்ந்த ரிஸர்வாக இருக்கவேண்டும், பிறகு தமது

43-வது வயஸுவரையில் இரண்டாவது 'ரிஸர்வாக' இருந்து தேச பாது காப்புக்காகக் கூப்பிடும்போது ராணுவத்தில்சேரத் தயாராயிருக்கவேண்டும்.

ரஷ்யாவில் 37-ஆர்மிகோர் என்னும்சேனைப் பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆர்மி கோரிலும் 36,000 காலாள்களும், 4000 குதிரை வீரர்களுமாக 40,000 பேர்கள் உண்டு. மொத்தமுள்ள 37-ஆர்மி கோர்களில் 27-ஐரோப்பிய ரஷ்யாவிலும், 3 காகஸஸ் ப்ரதேசத்திலும், 2 துருக்கிஸ்தானத்திலும், 5 ஸைபீரியாவிலும் இருக்கின்றன.

இவைகளைத்தவிர 'காஸாக்ஸ்' என்னும் ஜாதியைச்சேர்ந்த குதிரைப்படைகள் இருக்கின்றன. இந்த ஸைன்யங்களின் மொத்த மதிப்பு 150,000 பேராகும். ஸாதாரண ஸமாதானகாலங்களில் உள்ள ஸைன்யங்களின் மதிப்பு பின்வருமாறு.

| | ஐரோப்பாவும் காகஸஸ் ப்ரதேசமும். | ஆசியா. |
|---|---|---|
| காலாள்படை | 627,000 | 83,000 |
| குதிரைப்படை | 116,000 | 14,000 |
| பீரங்கிப்படை | 138,000 | 15,000 |
| இஞ்ஜினியர்கள் | 34,000 | 8,000 |
| மற்ற ராணுவ ஸிப்பந்திகள் | 34,000 | 5,000 |
| மொத்தம் | 949,000 | 1,25,000 |

யுத்தகாலங்களில் ரஷ்யாவுக்கு 50 லக்ஷம் வீரர்கள் கிடைக்கக்கூடுமாம்.

## VI.
## BELGIUM.
## பெல்ஜியம்.

பெல்ஜியத்தில் ஸமாதானகாலத்தில் உள்ள ஸைன்யத்தின் மொத்த தொகை 50,300. ஆனால் யுத்தகாலத்தில் கிடைக்கக்கூடிய மொத்தம் ஸைன்யம் 3,50,000. அங்கே யுத்தத்தில் சேருபவர்கள் முதலில் 5-வர்ஷம் க்ரமமான ஸைன்யத்தில் சேர்ந்திருக்கவேண்டும். பிறகு 3-வர்ஷம் அந்த ஸைன்யத்தைச் சேர்ந்த ரிஸர்வாக இருக்கவேண்டும். இந்த ரிஸர்வுக்கு முதல் ரிஸர்வ் என்று பெயர். க்ரமமான ஸைன்யமும் அதைச் சேர்ந்த முதல் ரிஸர்வும் சேர்ந்து ஆக்டிவ் ஆர்மி என்று பெயர். இதற்குப் பிறகு ஸோல்ஜர்கள் 5-வர்ஷம் இரண்டாவது ரிஸர்வாக இருக்கவேண்டும். யுத்தம் நேர்ந்தால் உடனே அனுப்பக்கூடிய ஸைன்யத்தின் தொகை 6 காலாள் படை டிவிஷனும், 2 குதிரைப்படைடிவிஷனுமாகும். ஒரு காலாள் படை டிவிஷனில் ஸுமார் 22000 போர் வீரர்கள் இருப்பார்கள். ஒரு குதிரைப்படை டிவிஷனில் 4000 போர் வீரர்கள் இருப்பார்கள்.

6 காலாள் படை டிவிஷனிலும் 2 குதிரைப் படை டிவிஷனிலும் உள்ள போர் வீரர்களும் மற்ற ஸிப்பந்தி மனிதர்களும் சேர்ந்து மொத்தம் 1,70,000 பேர் இருப்பார்கள். பெல்ஜியத்தில் கோட்டைகள் அதிகம். தேசத்தைக் காக்கவேண்டுமென்றால் முக்யமாய்க் கோட்டைகளைத்தான் காக்கவேண்டியது. இந்த ஸைன்யத்தில் ஸுமார் 1,40,000 பேர் கோட்டைகளைக்காக்க நியமிக்கப்படுவார்கள்.

ஸாதாரண ஸைன்யங்களைத் தவிர 'ஸான்டேர்மரி' யென்று ஒரு ஸைன்யம் இருக்கிறது. இதில் மொத்தம் 3800 பேர்கள் இருக்கிறார்கள். கார்ட் ஸிவிக் என்ற இன்னொரு ஸைன்யத்தில் 46,000 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு ஸைன்யங்களும் ராணுவத்தைச் சேர்ந்தவைகளென்றாவது ஸிவில் அதிகாரத்தைச் சேர்ந்தவைகளென்றாவது சொல்வதற்கில்லாமல் நடுத்தரமான ஸைன்யங்களாக இருக்கின்றன.

## VII.
## SERVIA.
## ஸெர்வியா.

ஸெர்வியாவில் ஒவ்வொருவரும் ராணுவத்தில் சேரவேண்டியது கட்டாயமானது. - ஸ்ரீ

பர்கள் 21-வது வயஸில் ராணுவத்தில் சேர்ந்து 1½-அல்லது 2 வர்ஷம் ஸைன்யத்தில் வேலைசெய்துகொண்டிருந்து, பிறகு 10-வர்ஷம் முதல் ரிஸர்விலும், 6-வர்ஷம் இரண்டாவது ரிஸர்விலும், 7-வர்ஷம் மூன்றாவது ரிஸர்விலும் இருப்பார்கள். ஸெர்வியாவுக்கு 5 டிவிஷன் காலாள் படையும், 1 டிவிஷன் குதிரைப்படையும் இருக்கின்றன. பால்கன் யுத்தம் நடப்பதற்கு முன்னால் 1911-ம் வர்ஷத்தில் ஸெர்வியாவுக்கு 3,60,000 ஸோல்ஜர்கள் இருந்தார்கள் என்று தெரிகிறது. இது ஸமாதானகால ஸைன்யத்தின் மதிப்பாகும். யுத்த காலங்களில் அதிகம் கிடைக்கலாம்.

## MANURE

BY

M. VAIDYANADHAN.

### உரம்.

தக்கபடி சாஸ்த்ர மறிந்து உரமிடுதலே ச்லாக்யம். உரமிடுவதற்கு முன் வயலில் இன்ன ஸத்து குறைவாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டிய தவச்யம். நெல்லுக்கு மூன்றுவிதமான ஸத்துக்கள் வேண்டும். சில நிலங்களில் பயிர் ஸத்தாகிய 'நைட்ஜின்' அதிகமாயிருக்கும். வேறு நிலத்தில் தாள் ஸத்தாகிய சாம்பல் காரம் (பொடாஷ்) அதிகமாயிருக்கும். மற்றொரு நிலத்தில் தான்ய ஸத்தாகிய 'பாஸ்பாரிக் ஆஸிட்' என்று சொல்லப்படும் ப்ரகாசதமிலம் அதிகமாய் இருக்கும். அநேகமாய் மூன்றாவது சொன்னதைவிட முதல் இரண்டாவதுதான் அதிகமாயிருக்கும். அநேக இடங்களில் ப்ரகாசதமிலம் கொஞ்சமாகவே யிருக்கும். இவற்றை யெல்லாம் அநுபோகத்தால் ஸாதாரணமா யறிந்துகொள்ளலாம். பயிர் கருப்பாயும், ஓங்கியும், கதிர் காணும் முந்தியே நல்ல கீழாய் சாய்ந்து விடக் கூடியதும், சாயாமல் இருந்து நெல்குறைவாக காண்கிறதுமான புலங்கள், முறையே நைட்ரஜினும் பொடாஷும் அதிகரித்தவையென்று கண்டுகொள்ள வேண்டும். பயிர்கள் வெளுத்தும் வைத்ததுமுதல் கிளைவெடிக்காமலும், நெல்காணுமலும் இருந்தால் அந்த ஸ்தலத்தில மூன்று ஸத்துக்களும் குறைவாகவே யிருக்கின்றனவென்று ஊகித்துக் கொள்ளவேண்டும். சில இடங்களில் வைக்கோல் குறைவாகவும் தான்யம் மதிப்புக்குமேல் மிகுதியாகவும் காண்பதுண்டு; அந்நிலத்தில் தான்ய ஸத்து சற்று அதிகமாய் அமைந்திருக்கும். ஆகவே குறைகளை அறிந்து நிறை செய்யவேண்டும்.

பெரும்பாலும் நமது ராஜதானியில் தொழு எரு, சாம்பல், தழை ஆகிய இவைகளையே உபயோகப் படுத்துவதால், மூன்றாவதாகிய தான்ய ஸத்து (ப்ரகாசதமிலம்) குறைவாகவே யிருக்கிறது.

தான்யத்தை அதிகரிக்க வேண்டுமானால் ப்ரகாசதமிலத்தை (பாஸ்பாரிக் ஆஸிட்) ஜாஸ்தியாகப் போடவேண்டும். இந்த எருவை ரஸாயன உரக்கிடங்குகளிலிருந்து தருவித்துக் கொள்ளலாம். ஆனால் விலை அதிகரிக்கும். சிறிது பணச்செலவுகளில் எரு சேர்க்கவேண்டுமானால் எலும்புத்தூள், இரும்பு சுட்டகரி, பக்ஷிகளின் மலம் ஆகிய இவைகளை உபயோகிக்கவேண்டும். எருக்கந் தழையும் ப்ரயோஜன முண்டு.

அதிக கொழுமை யடைந்த நிலங்களில் சற்று சுண்ணாம்பு சேர்க்கலாம். சாதாரண நிலங்களுக்கு சுண்ணாம்பு சேர்க்க கூடாது. "சுண்ணாம்பு வண்டியின் எருவண்டி போக வேண்டும்", "பிதாவை ப்ரபுவாக்கும், பிள்ளையை தரித்ரனாக்கும் சுண்ணாம்பு" என்ற வாக்யங்களால் சுண்ணாம்பை உபயோகப் படுத்தக் கூடாதென்று தோன்றுகிறது. உரம் பலவிதத்திலும் சேர்க்கவேண்டும். தொழு எரு தகுந்த விதமாய் நீருடன் சேர்க்கப்பட்டால் ச்லாக்யமானதுதான். கோஜலம்

வினில் பூமியில் ஊறிவிடாதபடி காய்ந்த மணலை தினமும் மாடுகட்டுவதற்கு முந்தி தொழுவத்தில் இறைத்து மாடுகட்டி. காலையில் மணலுடன் சேர்த்து குழியில் கொட்ட வேண்டும். தொழு எருவை குழியில் சேகரிப்பதே விசேஷம். ஆனால் கோடையிலேயே வயலில் கொட்டி உலரும்படி செய்வது விவேகமல்ல.

நாற்றங்கால்களுக்கும் குருவை நிலங்களுக்கும் ஆட்டுமந்தை ச்லாக்யமானது. "ஆடு மிதியாக் கொல்லையும் ஆணில்லாப் பெண்ணும்—வீண்".

சாம்பல் காரம் தாளை அழுத்தமாகவும், நிமிர்ந்தும் இருக்கச் செய்கிறது. தான்யமும் கொழுமையடையும்.

தழை உரங்களை வயலில் விளைவித்துக்கொள்வதே லாபகரமானது. கொளுஞ்சி, அவுரி, தக்கை, சடம்பு இவைகளை மார்கழி மாஸத்தில் அறுவடைக்கு முந்தி தகுந்த ஈரத்தில் விதைத்து விடவேண்டும். கொளுஞ்சி விதைத்தோல் கனமாக இருப்பதால் விதைகள் அழுந்தக்கூடியஈரம் இருக்கவேண்டும். உரலிலிட்டு தீட்டி விதைத்தால் சீக்கிரம் முளைக்கிறது. அவுரியைப் புழுதியில் விதைத்தால் தகுந்தபடி பயிராகிறது. தக்கை களர் நிலங்களுக்கு உபயோகமானது. சணப்பு முதல் தரமான சிகணஸத்து.

தவிர வேலிகளில் பயிராகும் ஆடு தொடா இலையும், தோட்டங்களில் பயிராகும் உளுந்துப் பயிரும் சிறந்த தழை எரு.

பக்ஷி மலங்களை சேகரிப்பது நமது நாட்டில் அருமையா யிருக்கிறது. வாத்துக்களை வயல்களில் மேயவிடுவதால் முதல் தரமான (பாஸ்பாரிக் ஆஸிட்) தான்ய ஸத்து கிடைக்கும்.

சில இடங்களில் *சவிரியின் கட்டைகளை வாங்கி வந்து அடிக்கு ஓர் துண்டாக சேற்றில் புதைத்து விடுகிறார்கள்.

எம். வைத்யநாதன்.

*சவிர் என்றால் இடிமயிர், அல்லது பெண்கள் தலைமயிருடன் கூட அணிந்துகொள்ளும் மயிர். இது ஓர் வகைமானிடம் கிடைக்கிறது. மயிரின் அடியில் கட்டை இருக்கும்.

## THE WAR AND THE GROUNDNUT TRADE.

### யுத்தமும் வேர்க்கடலை வ்யாபாரமும்.

இப்போது ஐரோப்பாவில் நடந்து வரும் யுத்தத்தினால் இந்தியாவின் வ்யாபாரத்துக்கு தடை யேற்பட்டிருக்கிறது. தான்யவகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி, தோல் முதலிய ஏற்றுமதிப் பொருள்கள் அவைகள் போக வேண்டிய இடங்களுக்கு அனுப்ப முடியாமல் இங்கேயே தங்கியிருக்கின்றன. இவைகளில் எப்பொழுதும் ஏராளமான வ்யாபாரம் நடப்பதால், ஏராளமான நஷ்டம் ஏற்படக்கூடும்.

ஏற்றுமதியைப் போலவே இறக்குமதியும் தடைபட்டிருப்பதில், அதனாலும் நமக்குக் கஷ்டங்கள் ஏற்படும்.

இவைகளை யுத்தேசித்து அநேகர் இறக்குமதிச் சரக்குகளில் கூடுமானவற்றை இங்கேயே செய்து தேசத்தின் கைத்தொழில் நிலைமையை பலப்படுத்த வேண்டுமென்றும், ஏற்றுமதிச் சரக்குகளுக்கும் ஏதாவது வழிகள் செய்து வ்யாபாரத்தில் நஷ்டம் ஏற்படாதபடி காக்க முயற்சி செய்யவேண்டு மென்றும் சொல்லி வருகிறார்கள்.

சென்னை கைத்தொழில் டிரெக்டர் யுத்தத்தால் வ்யாபாரம் பாதிக்கப்படுவதைப் பற்றியும், அதற்கு ஏதாவது பரிஹாரங்கள் செய்ய முடியுமா என்பதைப் பற்றியும் பரிசீலனை செய்து ஒரு ரிபோர்ட்டு எழுதி கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார். அந்த ரிபோர்ட்டில் இறக்குமதி வ்யாபாரம், ஏற்றுமதி வ்யாபாரம் ஆகிய இவைகள் யுத்தத்தால் எப்படி பாதிக்கப்படுகின்றன என்பதைப்பற்றியும், புதுக் கைத்தொழில்கள் ஸ்தாபிக்க முடியுமா என்பதைப் பற்றியும் ப்ரஸ்தாபித்திருக்கிறார். அந்த ரிபோர்ட்டில் வேர்க்கடலை வ்யாபாரத்தைப் பற்றியும் வேர்க்கடலையை எண்ணெ

யாட்டுவதைப் பற்றியும் சொல்லும் பாகத்தை கீழே சுருக்கி எழுதுகிறோம்.

கிழக்குக்கரை ஜில்லாக்களிலிருந்து வர்ஷந்தோறும் 2,20,000 டன் நிறையுள்ள 30 லக்ஷம் மூட்டை வேர்க்கடலே அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதியாகிறது. இதன் மொத்த மதிப்பு 4-கோடி ரூபாயாகும். மொத்தம் வேர்க்கடலேயில் கொஞ்ச பாகம் கோடைப் பயிரின் மாஸுலாகும். இந்தக் கோடை மாஸுல் ஜுலே மாஸ வாக்கில் விற்பனைக்கு வருகிறது. மழை காலத்து மாஸுல் ரொம்ப ஜாஸ்தியானது. இது டிஸம்பர் மாஸவாக்கில் விற்பனைக்கு வருகிறது. மொத்தம் வேர்க்கடலேயில் இந்த ராஜதானியிலேயே உபயோகப்பட்டுப் போனதுபோக பாக்கியுள்ளதில் பெரும்பாகம் ப்ரான்ஸின் தெற்கேயுள்ள மார்ஸேல்ஸுக்கும் மீதி வேறு இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சென்ற ஆகஸ்ட் மாஸம் 31-தேதியன்று ஏற்றுமதி வ்யாபாரிகளிடம் 30 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள வேர்க்கடலே கையிருப்பாக இருந்தது. இது முழுவதும் சென்ற வர்ஷத்து மாஸுலின் ஒரு பாகமாகும். இந்தச் சரக்கானது வ்யாபார நிலேமை சரியானவுடன் ஏற்றுமதி செய்யப்பட்டு போகும்.

இந்த வர்ஷத்து வேர்க்கடலேயின் கோடை மாஸுல் விற்பனைக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆனுல் இப்போது யுத்தம் நடந்துகொண்டிருப்பதில் வ்யாபாரம் தடைப்படவே அநேகமாய் எல்லா மாஸுலும் விவஸாயிகளின் கையிலேயே இருக்கிறது. இந்த மாஸுலின் மதிப்பு ஸுமார் 26 லக்ஷம் ரூபாயாகும்.

இப்போது ஸாகுபடியாகிக்கொண்டிருக்கும் வேர்க்கடலே டிஸம்பர் மாஸத்தில் விற்பனைக்கு வரும். இப்போது கப்பல் போக்குவரத்து அநேகமாய் நின்றுவிட்டதால் வேர்க்கடலே ஏற்றுமதியும் நின்றுபோய்விட்டது. அதனுல் கையிருப்பு வேர்க்கடலேயானது கெடுதலடைந்துகொண்டு வருகிறது. இன்னும் மூன்று நான்கு மாஸத்தில் இப்போது கையிருப்பிலுள்ள வேர்க்கடலே முழுவதும் கெட்டுப்போகக்கூடும். நமது ராஜதானியில் உள்ளூர் உபயோகத்துக்காக அதிகம் வேர்க்கடலே வேண்டியிருப்பதில்லே. அப்படி ஜனங்களின் உபயோகத்துக்கு வேண்டிய வேர்க்கடலேயும் உள்ளூர் வ்யாபாரிகளிடம் இருந்து வருகிறது. ஆகவே வேர்க்கடலேயைக் கெடாமல் வைத்திருக்கவேண்டுமானுல் அதை எண்ணெயாக ஆட்டுவதைத் தவிர வேறுவழி யில்லே. எண்ணெயை சரியானபடி வைத்திருந்தால் அது ஒரு வர்ஷம் கெடாமலிருக்கும்.

முன் சொன்னபடி வேர்க்கடலே மாஸுல் சென்ற வர்ஷத்து பாக்கியும், கோடைமாஸுலும், மழைக்கால மாஸுலும் சேர்ந்து ஏராளமாக விருப்பதால், இவைகளே எண்ணெயாட்டுவதென்றுல் பெரிய யந்த்ரங்கள் வாங்கவேண்டியிருக்கும். தக்க யந்த்ரங்கள் வாங்கி ஸ்தாபித்து வேலே நடத்துவதற்கு ஸுமார் 2 அல்லது $2\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும்.

நிற்க, இப்போது வேர்க்கடலே ஏற்றுமதி நின்றிருப்பதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. (1) கப்பல்கள் போக்குவரத்து தடைப்பட்டிருப்பது. (2) மார்ஸேல்ஸில் வ்யாபாரமும் கைத்தொழிலும் தடைபட்டிருப்பது. (3) மதராஸிலுள்ள பாங்கிகள் ப்ரெஞ்ச் பாங்கிகளே நம்பி கப்பல் ரசீதுகளின்மேல் பணம் கொடுக்க ஸம்மதப்படாம லிருப்பது.

இந்த மூன்று காரணங்களும் ஸ்வல்பகாலத்துக்கு மாதரம் இருக்குமென்று தோன்றுகின்றனவே யொழிய, இவைகள் நீடித்து நிற்கும்படியான காரணங்கள் என்று தோன்றவில்லே, இப்பொழுதும் அநேக கப்பல் வ்யாபாரிகள் கப்பல் நிறைய சரக்கு ஏற்றுவதாயிருந்

தால் கப்பல்கள் வாடகைக்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். மார்ஸேல்ஸிலும் வ்யாபாரம் வெகுகாலம் தடைப்பட்டிருக்காது. அங்கே இப்போது வ்யாபாரமும் கைத்தொழிலும் மறுபடியும் ஆரம்பமாகி விட்டனவென்று அனேகர் எண்ணுகிறார்கள். ஆகவே சென்னை பாங்கிகள் பணம்கொடுக்க முன்வந்தவுடன் வேர்க்கடலை வ்யாபாரம் மறுபடியும் ஆரம்பித்துவிடும். ஆகையால் இவைகளை யுத்தேசித்து எண்ணெயாட்டுவதற்கு யந்த்ரங்கள் வாங்குவதற்காக ஏராளமான பணம் போடுவது சரியென்று தோன்றவில்லை.

மேலும் கடலையை எண்ணெயாக ஆட்டிவிடலாமென்றால் அதற்கு சிலதடைகள் இருக்கின்றன. முதலாவது இந்தியாவிலிருந்து இதுவரையில் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படவில்லை. புதிதாக எண்ணெய் ஏற்றுமதி செய்வதென்றால் அதை விற்க எந்தவிடங்களுக்கு அனுப்புவதென்று ஒரு கேள்வியுண்டாகிறது. இப்போது மார்ஸேல்ஸில்தான் எண்ணெய் ஆட்டுந்தொழில் ப்ரபலமாய் நடந்துவருகிறது. இந்தத் தொழிலில் ஒரு பாகத்தை இந்தியாவிலேயே நடத்தி, இங்கிருந்து எண்ணெயை நேராக வேண்டியவர்களுக்கு அனுப்புவதென்றால், அதைப்பற்றி பூராவிசாரிக்காமல் அப்படி எண்ணெயாக அனுப்புவது நல்லதா என்பதைப்பற்றி ஒன்றும் திட்டமாய்ச் சொல்ல முடியாது. அப்படி விசாரிப்பதற்கும் வெகு காலமாகும்.

வேர்க்கடலையை எண்ணெயாட்டுவதற்கு இரண்டாவது ஆக்ஷேபணையென்னவென்றால் ஆட்டின எண்ணெயை வெளியூர்களுக்கு அனுப்புவதற்கு ஏராளமாய் பீப்பாய்கள் வேண்டியிருக்கும். இப்போது இந்தியாவில் இறக்குமதியாகும் பீப்பாய்கள் ரொம்ப கொஞ்சமாகையால் அவைகள் ஏராளமாய் ஆட்டப்படும் எண்ணெயைக் கொட்டி அனுப்புவதற்குப் போதமாட்டா. ஆகையால் இந்தியாவிலேயே பீப்பாய்கள் செய்வதற்கு எண்ணெய்ப் பீப்பாய்களும் தகரங்களும் செய்யும் யந்த்ரங்கள் ஸ்தாபிக்க வேண்டும். இதற்கு அரை லக்ஷம் ரூபாய் போல் பிடிக்கும்.

மேலும் இது விஷயமாய் விவஸாயிகளினுடைய அபிப்ராயமும், வ்யாபாரிகளினுடைய அபிப்ராயமும் எபபடியிருக்கின்றனவென்று தெரியவில்லை. அவர்கள் கடலையை எண்ணெயாட்டவேண்டுமென்று விரும்புகிறார்களென்று நிச்சயமாய்த் தெரியவில்லை. ஏனென்றால் கடலையை எண்ணெயாக ஆட்டினால், எண்ணெயை எந்த இடங்களில் விற்கலாமென்பது ஸந்தேகம். ஆனால் வேர்க்கடலையை ஏற்றுமதி செய்வதற்கு ஸௌகர்யம் ஏற்படும் வரையில் அதுரொம்ப கெட்டுப்போகாமல் இருக்குமானால், பிற்பாடு நிச்சயமாய் விலைப்போகும்.

மேலும் எண்ணெய் ஆட்டுந்தொழில் ஏற்படுத்துவதில் அநேக கஷ்டங்களும் ஏராளமான பணச்செலவும் ஏற்படும். அந்தத்தொழில் லாபகரமாய் நடந்துவருமா என்பதும் ஸந்தேகமாயிருக்கிறது. ஏனென்றால் இந்தத் தொழில் கடைத் தேறுவதென்றால் இப்போதுள்ள வ்யாபாரநிலைமை வெகுகாலம் வரையில் நீடித்திருக்கவேண்டும். வேர்க்கடலைப் பருப்பு ஸுமார் 6-மாஸம் கெடாமலிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதற்குள் வ்யாபாரநிலைமை சரிப்பட்டுப்போய், கடலையை ஏற்றுமதிசெய்ய ஸௌகர்யங்கள் வாய்த்துவிட்டால் உடனே எல்லாரும் கடலையை அப்படியே ஏற்றுமதிசெய்ய ஆரம்பித்துவிடுவார்கள், எண்ணெய்த்தொழிலில் போட்டமுதல் வீணாகப்போய்விடும். அதுவரையில் ஆட்டின எண்ணெயை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்வதும் கஷ்டமான கார்யம். ஆகையால் எண்ணெயை விற்பதற்கு மார்ஸேல்ஸைத்தவிர வேறு நல்ல இடமிருக்கிறதென்று தெரியும்

வரையில் ஒன்றும் செய்வதற்கில்லை. கூடியசீக்ரம் வ்யாபாரம் சரியான நிலைமையை அடைந்துவிடுமென்று தோன்றுகிறதால் வ்யாபாரிகள் கடலையை எண்ணெயாக ஆட்டாமல் அப்படியே வைத்திருப்பது நல்லதென்று சொல்லலாம்.

இப்போது விற்பனைக்குவந்து கொண்டிருக்கும் கோடைமாஸ் குலை வ்யாபாரிகள் ரொம்ப பத்ரமாகக் கட்டிவைத்து வருகிறார்கள். இவைகள் இன்னும் நாலைந்து மாஸம்வரையில் கெடாமலிருக்கும். அதுவரையில் எண்ணெயாட்டுவதற்கு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அதற்குப் பிறகுங்கூட வ்யாபார நிலைமை இப்படியே இருந்துவந்தால், பிறகு எண்ணெயாட்டுவதற்கு யந்த்ரங்கள் வாங்க வேண்டியது அவச்யமாகும். அவைகள் வாங்குவதைப்பற்றியும், யந்த்ரம் ஸ்தாபித்தால் கிடைக்கும் எண்ணெயை விற்பதைப்பற்றியும் பரிசீலனைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப்படித் தெரிவித்துவிட்டு, கைத்தொழில் டிரெக்டர், இப்போதுள்ள நிலைமையில் ஆண்டர்ஸன் ஆயில் எக்ஸ்பெல்லர் என்னும் எண்ணெயாட்டும் யந்த்ரம் கொஞ்சம் ப்ரயோஜனமாயிருக்குமென்றும், தம்மிடத்தில் ஒரு யந்த்ரம் ஒன்று இருப்பதாகவும், அதை சீக்ரம் ஸ்தாபித்து வேலை நடத்துவதாகவும் சொல்லி, அதைப்போல் இன்னும் இரண்டு யந்த்ரங்கள் வேண்டுமென்றும், அவைகளை அமெரிக்காவிலிருந்து தருவிக்க ஸாங்க்ஷன் வேண்டுமென்றும் கவர்ன்மெண்டைக் கேட்டார். கவர்ன்மெண்டார் புதிதாக ஆண்டர்ஸன் ஆயில் எக்ஸ்பெல்லர் வாங்கவேண்டியதில்லை யென்றும், ஜனங்களுக்கு கையிலிருக்கும் யந்த்ரத்தை வேலை செய்து காட்டி, அந்த யந்த்ரம் வாங்கி ஸ்தாபிக்க எண்ணும் முதலாளிகளுக்கு அது விஷயமாய் தக்க ஆலோசனை சொல்லவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் நிரூபண வேலைகளுக்கும் ஆராய்ச்சி வேலைகளுக்கும் அதிக விதைகளை ஆட்டக்கூடிய ஹைட்ராலிக் ப்ரெஸ்களை வாங்குவதே நல்லதென்றும், அதற்கு வேண்டிய செலவு திட்டத்தையும் ப்ரேரணைகளையும் டிரெக்டர் அனுப்பவேண்டுமென்றும், வேர்க்கடலையை மார்ஸேல்லைத் தவிர மற்றவிடங்களுக்கும் விற்பனைக்கு அனுப்ப முயற்சி செய்வது அவச்யமாயிருப்பதால், அது விஷயமாயும் பரிசீலனை செய்து ஒரு தனி மெமோராண்டம் எழுதியனுப்ப வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

## THE WAR AND ASTROLOGY.

### யுத்தமும் ஜ்யோதிஷமும்.

1913-ம் வர்ஷத்தில் பால்கன் யுத்தம் ஆரம்பித்தது முதல் யுத்தஸம்பந்தமாகவும் ஜெர்மனி ஸம்பந்தமாகவும் அநேக ஜ்யோதிஷங்களும் ஆரூடங்களும் பத்ரிகைகளில் வெளியாயிருக்கின்றன. அந்த பால்கன் யுத்தம் ஐரோப்பாவின் தென்கிழக்கில் சிறு நாடுகளுக்குள் நடந்துவந்ததால் அதைப்பற்றி அதிக கவலை ஏற்படவில்லை. இப்போது நடக்கும் யுத்தம் மஹாபாரத யுத்தம்போல் மிகப் பெரியதாக கொரேமாய் நடந்துவருவதால், அநேகர் ரொம்ப ச்ரத்தையாய் பழைய புஸ்தகங்களைப் புரட்டி பல ஆரூடங்களையும் ஜ்யோதிஷ பலன்களையும் பத்ரிகை வாயிலாக வெளியிட்டு வருகிறார்கள். அவைகளில் சிலவற்றை கீழே எழுதுகிறோம். ஜோஸ்யம் ஐந்துக்கிரண்டு பலிக்குமெனபதையும், குழந்தை பிறந்தகாலத்தை சரியாய் கணக்கிட்டு, ஜாதகம் கணிப்பதில் ரொம்ப ச்ரமமேற்படுவது ஸகஜம் என்பதையும் எண்ணும்போது இந்த ஜோஸ்ய பலன்கள் எல்லாம் உண்மையாயிருக்குமென்றுவது, ஜ்யோதிஷ சாஸ்த்ர ஆதாரமில்லாமல் குறத்தி குறி சொல்வதுபோலும், ஜோஸ்யர்

கள் ஆரூடம் சொல்வதுபோலும், தேவதை உபாஸனையுள்ளவர்கள் வருங் காலச்செபல்களைச் சொல்வது போலவும் சொல்லப்படும் அநேக பலன்கள் சரியாய் நிறைவேறுமென்றுவது நிச்சயமாய் எண்ணுவது கூடாது.

பால்கன்யுத்தம் மும்மரமாய் நடந்து வந்தபோது, அநேகர் அந்த யுத்தத்தில் அநேக ராஜ்யங்கள் சேர்ந்து கொண்டு, யுத்தம் பெரிய ஐரோப்பிய யுத்தமாகுமென்றும், அப்போது ஆஸ்ட்ரியா—ஹங்கேரியும், ஜெர்மனியும் நாசமடையுமென்றும் சொல்லி வந்தார்கள். இதற்கேற்றாற்போல ஆரூடங்களும், உபாஸனை பலன்களும் இந்த நம்பிக்கைக்கு ஸாதகமாயிருந்தன. அவைகளில் இரண்டொன்றை இங்கு எழுதுகிறோம்.

இப்போது ஜெர்மன் சக்ரவர்த்தியாக இருக்கும் கெய்ஸர் வில்லியமின் பாட்டனாகிய முதலாவது வில்லியம் என்பவர் இளவரசராக இருந்தபோது 1849-ம் வருஷத்தில் ஜிப்ஸி ஜாதியைச்சேர்ந்த ஒரு ஸ்த்ரீயை ஜோஸ்யம் கேட்டாராம். ஜிப்ஸி ஜாதி ஜனங்கள் நமது தேசத்திலுள்ளகுறவர்களைப்போன்ற ஒருஜாதியார். இவர்களுக்கு குறவர்களைப்போல் குறி சொல்லுவதில் ஸாமர்த்ய முண்டாம். வில்லியம் ராஜகுமாரர் தாம் எப்போது சக்ரவர்த்தியாவார் என்று கேட்க அந்த ஸ்த்ரீ அந்த வர்ஷத்தோடு, அதிலுள்ள எண்களைக் கூட்டினால் வரும் வர்ஷத்தில் அவர் சக்ரவர்த்தியர்வார் என்றாள்.

1849
1
8
4
9
―――
1871

அதன்மேல் இளவரசர் தாம் எந்த வர்ஷத்தில் இறப்பார் என்று கேட்டார். அதற்கு அந்த ஜிப்ஸி பட்டத்துக்குவரும் வர்ஷத்தோடு, அந்த வர்ஷத்திலுள்ள எண்களைக் கூட்டினால் வரும் வர்ஷத்தில் அவர் இறந்து போவார் என்று சொன்னாள்.

அதாவது 1871
1
8
7
1
―――
1888-ம் வர்ஷத்தில் இறந்துபோவாரென்று சொன்னாள். இளவரசர் மறுபடியும் ஜெர்மன் ராஜ்யம் அதாவது ஏகாதிபத்யம் எத்தனை வர்ஷகாலம் நிலைத்து நிற்குமென்று கேட்டார். அதற்கு அந்த ஸ்த்ரீ $1888+1+8+8+8=1913$-ம்வர்ஷம் அந்த ராஜ்யம் முடிந்து போகுமென்று சொன்னாள்.

இந்தமூன்று பலன்களில் முதல் இரண்டும் சரியாய் நடந்தேறின. மூன்றாவது பலன் மாத்ரம் கைகூடவில்லை. அதாவது 1913-ம் வர்ஷம் ஜெர்மன் ராஜ்யம் நாசமடையவில்லை. ஆனால் 1914-ம் வர்ஷத்தில் பெரிய யுத்தம் நடப்பதால் ஜோஸ்யம் ஒருவர்ஷம் முன்னைப் பின்னை நடக்குமோ என்னவோ.

ஜெர்மனி 1913-ம் வர்ஷத்தில் முடிவடையுமென்று அநேக ப்ரெஞ்சுக்காரர்களும் நம்பி வந்தார்கள். க்ளேயர்வாயன்ஸ் என்று சொல்லப்படும் ஒருவித யோகசாஸ்த்ரத்தால் வருங் கால விஷயங்களை அறிந்து விடலாமென்று பலர் எண்ணியும் சொல்லியும் வருகிறார்கள். இந்த சாஸ்த்ரத்தில் நிபுணர்களென்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் ஜெர்மனி 1913-ம் வர்ஷத்தில் நசித்துப்போகுமென்றும், ப்ரான்ஸுக்கு அந்தவர்ஷம் ரொம்ப நல்ல அத்ருஷ்ட காலமென்றும் சொல்லிவந்தார்கள். அவர்களில் ஒருவராகிய மாடேம் டி தீப்ஸ் என்னும் ப்ரஸித்திபெற்ற ஸ்த்ரீ பின் வருமாறு சொல்லியிருக்கிறார்.

"1913-ம்வர்ஷம் ஒரு யுத்தம்நேர்ந்து அது ஜெர்மனிக்கு நாசமாகமுடியும். இவ்விஷயம் ஜெர்மனிக்குத் தெரிந்ததே. யுத்தம்வந்து விடுமேயென்று ஜெர்மனி பயப்படுகிறது. அந்த யுத்தத்தைதடுக்க அது இஷ்டப்பட்டா லும் அதனுல்முடியாது. பெரிய யுத்தம் வரு மென்று வெகுகாலமாகத் தயார்செய்து கொண்டிருக்கிறது. உள்நாட்டுக் குழப்பங் களால் அது அந்த யுத்தத்தில் சேரும்படி நேரிடும். இவ்விஷயத்தை சக்ரவர்த்தி அறி ந்து முன்ஜாக்ரதையாயிருப்பாராக.

"ஆஸ்ட்ரியாவிலும் உள்நாட்டுக் குழப்பங் கள் ரொம்ப இருக்கின்றன. கூடியசீக்ரம் ஜெர் மன்ஜாதி ஜனங்களுக்கும் ஸ்லாவ்ஜாதி ஜனங் களுக்கும் பெரியசண்டை ஏற்பட்டுவிடும்."

ப்ரெஞ்ச் ஜனங்களுக்கு பொதுவாகவே ஜெர்மனிமேல் க்ஷாத்ரமுண்டாகையால் அவர் கள் மேற்சொன்னவைகளைக் கட்டி விட்டிருக் கக் கூடுமென்று சிலர் நினைக்கிருர்கள்.

இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தை பொட்டுச் சொல்லப்படும் குறிகளும் இரண் டோரிடங்களில் வர்ஷம் மாத்ரம் வித்யாஸ மாய்க் காட்டுகின்றனவே யொழிய, மற்றப்படி பலன்கள் எல்லாம் அநேகமாய் ஒரேவிதமா யிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை எழுது கிறோம்.

(1) "மனிதர்கள் பறவைகளைப்போல் பறக் கும்போது பத்து பெரிய அரசர்கள் யுத்தம் செய்வார்கள். யுத்தம் உலகமெங்கும் நடக் கும். அந்தக் காலத்தில் வயல்களிலிருந்து மாஸூலே வீட்டுக்குக்கொண்டுவர புருஷர்கள் இல்லாமல், ஸ்த்ரீகள் மாஸூலே சேகரம் செய் வார்கள். ஸ்த்ரீகள் த்ராக்ஷா மாஸூலே சே கரம் செய்ய ஆரம்பிப்பார்கள். அந்தத் தொ ழிலே முடிப்பதற்கு புருஷர்கள் வந்து விடுவார் கள்."

இப்போது நடக்கும் யுத்தத்தில் 9 தேசங் கள் சேர்ந்திருக்கின்றன. எப்போது பத்தா வது தேசம் சேருமோ தெரியவேண்டும். இந்த வதந்தி 1793-ம் வர்ஷத்துக்கு முன்னே யே இருந்து வந்ததாம். யுத்தத்துக்குப்போன புருஷர்கள் த்ராக்ஷா மாஸூல் அறுவடை செய்ய வந்துவிடுவார்களென்றால் யுத்தம் அக்டோபர் மாஸத்தில் முடிவு பெறவேண்டு மே.

(2) இப்போதுள்ள கெய்ஸர் சிறு வயஸா யிருக்கும்போது ஒரு ஜிப்ஸி கிழவியினிடம் போய்க் குறி கேட்டாராம். அப்போது அவள் 1914-ம் வர்ஷத்தில் ஜெர்மனிக்கு ஒரு பெரிய யுத்தம் நேரிடுமென்றும், குதிரைமேல் ஸாதாரணமாய் ஏறும் பக்கத்தில் ஏருமல் மறு பக்கத்தில் ஏறும் அரசர் அதன் சக்ர வர்த்தியாயிருந்து, அவருடைய இளவரசு தூக்கிடப்பட்டுக் கொல்லப்படும்போது ஜெர் மன் ராஜ்யம் முடிவடையு மென்று சொன் னுள். கெய்ஸருக்கு ஒரு கை ஊனமாகையால் அவர் குதிரைமேல் எல்லாரும் ஏறுகிற பக்கத் தில் ஏருமல் மறுபக்கத்திலிருந்துதான் ஏறு கிருராம்.

(3) ஸுமார் 600 வர்ஷங்களுக்கு முன் இருந்த ஒரு கிறிஸ்தவ ஸன்யாஸி பின் வரு மாறு சொல்லியிருக்கிருராம். "இரண்டா வது வில்லியம் என்னும் அரசர் ப்ரஷ்யரின் கடைசி அரசராக இருப்பார். இவருக்குப் பின் ஸந்ததி போலண்டின் அரசரும், ஸாக் ஸனியின் அரசரும், ஹானேவரின் அரசரு மே." அதாவது ஜெர்மனி ராஜ்யம் பிரிந்து போலண்ட், ஹானேவர், ஸாக்ஸனி என்ற ராஜ்யங்களாகும்.

இதே ஸந்யாஸி முதலாவது வில்லியம் என் னும் அரசர் பார்லி யென்னும் பயிர் கதிர் வாங்குவதற்கும் அறுவடையர்வதற்கு மிடை யிலுள்ள காலத்துக்குள் ஆஸ்ட்ரியாவின்மேல்

படை யெடுத்து ஜயத்துடன் ஆஸ்ட்ரியாவின் முக்யபட்டணமாகிய வியன்னு வரையில் போவாரென்றும், ஒரு பெரிய சக்ரவர்த்தியின் வார்த்தையால் வியன்னு பட்டணம்வரையில் போனவர் உடனே நின்று விடுவாரென்றும் சொல்லியிருந்தார். இந்தவிஷயம் உண்மையாகவே ஸம்பவித்தது. முதலாவது வில்லியம் 1866-ம் வர்ஷத்தில் ஆஸ்ட்ரியாமேல் படையெடுத்து, வியன்னுவரையில் போனவர், ப்ரான்ஸின் சக்ரவர்த்தியாகவிருந்த மூன்றுவது நெப்போலியன் தமது ராஜ்யத்தின்மேல் படையெடுத்து தம்மைப் பின்பக்கத்திலிருந்து எதிர்க்க எண்ணியிருப்பதாகக் கேள்விப்பட்டுத் திரும்பி விட்டார். இன்னும் அதே ஸன்யாஸி 1870-ம் வர்ஷம் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடக்குமென்றும், ப்ரான்ஸின் சக்ரவர்த்தியாயிருந்த நெப்போலியன் ஸெடன் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் எதிரிகளால் துரத்தப்பட்டு ஓடிப்போய்ப் பிறகு திரும்பவே மாட்டாரென்றும் சொன்னுர். இந்தவிஷயமும் சரியாகவே ஸம்பவித்தது.

ஜெர்மனியில் ரைன் நதியோரமாக மேயன்ஸ் என்று ஒரு ஊர் இருக்கிறது. இதில் ஒருவர் 1854-ம் வர்ஷத்தில் வருங்கால விஷயங்களைப் பற்றி ஒரு சிறிய ப்ரபந்தம் பாடியிருக்கிறார். அதற்கு "மேயன்ஸ் தீர்க்கதர்சனம்" என்று பெயர். இது அநேகமாய் முன்சொன்ன ஸன்யாஸியின் ஜோஸ்யம்போலவே யிருக்கிறது.

ப்ரஷ்யாவுக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் 1866-ம் வர்ஷம் நடந்த யுத்தத்தைப்பற்றியும், 1870-ம் வர்ஷம் மூன்றுவது நெப்போலியனுக்கும் (அதாவது ப்ரான்ஸுக்கும்) ஜெர்மனிக்கும் நடந்த யுத்தத்தைப்பற்றியும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. இன்னும் ப்ரான்ஸ்-ஜெர்மனி யுத்தத்தில் ப்ரான்ஸுக்கு ஸொந்தமான ஆல்ஸேஸ் லொர்ரெய்னை ஜெர்மனி பிடுங்கிக் கொள்ளுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகள் ஸம்பவித்துவிட்டன. அந்த க்ரந்தத்தின் பின்பாகத்தில் ப்ரான்ஸுக்கு ஸாதகமாய் இனி நடக்கப்போகும் விஷயங்கள் சில சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் பின் வருமாறு.

"ப்ரெஞ்ச் தேசாபிமானிகளே, தைர்யங் கொள்ளுங்கள், ஜெர்மனி எல்லாரையும்விட பலமுள்ளதாய் ஆவதற்கு நினைத்துச் செய்திருக்கும் ஏற்பாடுகள் கைகூடுவதற்கில்லை.

"பழிவாங்கும் காலம் ஸமீபித்துக் கொண்டிருக்கிறது. ஸார் சக்ரவர்த்தி உங்கள் மத்தியில்வந்து உங்களோடு நேச உடன்படிக்கை செய்துகொள்வார்.

"இவர்தான் உங்களை விடுவிக்க ஏற்பட்டவர். இவர் ப்ரான்ஸின் எதிரியைத் துரத்தியடிப்பார். ஜெர்மனி முழுவதும் நாசமடையும் வரையில் அதோடு அவர் போர்புரிவார்.

"கடைசி யுத்தம் வெஸ்ட்பாலியா (Westphalia) என்னும் ப்ரதேசத்தில் படர்போன் (Paderbon) என்னும் ஊருக்குப் பக்கத்தில் போலோ (Bouleaux) என்னும் இடத்தில் நடைபெறும். அப்போது ப்ரெஞ்சுக்காரர்கள், பெல்ஜியர்கள், இங்க்லீஷ்காரர்கள், டட்ச்சுக்காரர்கள், ரஷ்யர்கள், ஜப்பானியர்கள், ஸெர்வியர்கள் ஆகிய ஏழு ஜனங்களும் சேர்ந்துகொண்டு ஜெர்மானியர்கள், ஆஸ்ட்ரியர்கள், ஹங்கேரியர்கள் ஆகிய இவர்களோடு போர் புரிவார்கள்.

"ப்ரஷ்யாவே, உனக்கு நாசகாலம் வந்துவிட்டது. நீ மற்ற ஜனங்கள்மேல் செய்த சண்டைகளுக்கு உனது ஏழாம் தலைமுறையார் ஜவாப்தாரியாவார்கள். (ப்ரஷ்யா ராஜ்யம் 1713-ம் வர்ஷம் ஆரம்பமாயிற்று. ஒரு தலைமுறைக்கு 30-வர்ஷம் வீதம் 7-தலைமுறைக்கு 210-வர்ஷம். ஆகவே 7-ந் தலைமுறையார் 1893-ம் வர்ஷம் முதல் 1923-ம் வர்ஷம் வரையில் இருக்கிறார்களென்கிறது.)

"ஆஸ்ட்ரியாவே, உனக்கும் நாசகாலம் வந்துவிட்டது. அப்பேர்ப்பட்ட யுத்தம் இதற்கு முன் ஒருபோதும் நடந்திராது.

"இந்த யுத்தம் மூன்று நாள் அகோரமாய் நடந்து ஒரே புகையாயிருக்கும்.

"கடைசியில் ப்ரஷ்யாவும் ஆஸ்ட்ரியாவும் நிர்மூலமாக்கப்படும். ஹங்கேரி ஐரோப்பாவின் கீழ்கோடிக்குப் போய்விடும்.

"இரண்டாவது வில்லியம்தான் ப்ரஷ்யாவின் கடைசி அரசர். ஆஸ்ட்ரியாவும் ஜெர்மனியும் போலண்டு, ஹானோவர், ஸாக்ஸனி என்று மூன்று ராஜ்யங்களாகப் பிரிந்துவிடும்."

பேர்பெற்ற ஜப்பான் வீரராகிய ஜெனரல் நோகி யென்பவர் ரஷ்ய ஜப்பானிய யுத்தத்தில் போர்ட் ஆர்தர் என்னுமிடத்தை முற்றுகை போட்டுக்கொண்டிருந்தபோது பின் வருமாறு சொன்னாராம்.

"இந்த உலகத்தில் இரண்டு பெரிய கோரமான யுத்தங்கள் நடைபெறும். முதல் யுத்தம் ஐரோப்பா முழுவதிலும் நடைபெறும். இதில் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள தகராரும், இங்கலண்டுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள வல்லமைப் போட்டியும் தீர்ந்துவிடும். ப்ரான்ஸும் ஜெர்மனியும் கடைசி நாள் சண்டையில் பெல்ஜியத்தில் நின்று சண்டைபோடும். அநேகமாய் வாடர்லூவுக்குப்பக்கத்தில் நடக்கலாம்.

"இரண்டு தேசத்தாருக்குமுள்ள பெரிய ஸைன்யங்கள் எதிர் நின்று போர் செய்யக்கூடிய இடம்பெல்ஜியந்தான். ப்ரான்ஸின் எல்லை ப்ரதேசத்திலும் ஜெர்மனியின் எல்லைப்ரதேசத்திலும் அநேக பலமான கோட்டைகள் இருப்பதால் அதன் வழியாக எந்த ஸைன்யமும் போவது கஷ்டம். இந்த யுத்தத்தின் முடிவைப்பற்றி ஸந்தேகமே யில்லை. தரைச் சண்டையில் ப்ரான்ஸ் ஜெர்மனியைத் தோற்கடிக்கும். கடல் யுத்தத்தில் இங்கலண்ட் ஜெர்மனியைத் தோற்கடிக்கும்.

"இரண்டாவது யுத்தம் ஜப்பானுக்கும் அமெரிக்க ஐக்ய நாடுகளுக்கும் நடக்கும். இது பஸிபிக் ஸமுத்ரத்தில் நடைபெறும். இந்த யுத்தத்தில் ஜப்பான் ஜயமடையும்."

மேற் சொன்னவைகள் ஆரூடத்தாலும், வேறு உதவிகளாலும் சொல்லப்பட்டவை. ஜெர்மன் சக்ரவர்த்தியின் ஜாதகத்தைக் கொண்டு சிலர் வருங்காலத்தைச் சொல்லி வருகிறார்கள். ஜ்யோதிஷத்தில் விருப்பமுள்ளவர்கள் ப்ருஹத் ஜாதகம், சிந்தாமணி, ஜாதகலங்காரம் முதலிய பல நூல்களைப் புரட்டிப்பார்த்து சொல்லிய பலன்கள் சரியா என்பதை ஊஹித்துக் கொள்வதோடு தாங்களும் பலன் கண்டு பிடிக்கலாம்

## கெய்ஸரின் ஜாதகம்.

1859-ம் வர்ஷம் ஜனவரிமீ' 22-தேதி யன்று ஸாயந்திரம் 3-மணிக்கு பெர்லினுக்கு 13-மைல் தென்மேற்கேயுள்ள பாட்ஸ்டம் என்னும் பட்டணத்தில் ஜனனமானார்.

பாட்ஸ்டம் என்னும் ஊர் க்ரீனிச்சுக்கு 13 டிக்ரி (பாகை) 49 மினிட் (கலை) கிழக்கேயும், நிரக்ஷரரேகைக்கு 52 டிகிரி (பாகை) 52 மினிட் (கலை) வடக்கேயுமுள்ளது.

புதுச்சேரி சங்கரலிங்க ஜோதிடர் என்பவர் கெய்ஸருக்கு ஒருஜாதகம் கணித்து அதையும் அதன்பலனையும் 'இந்தியன்' பத்ரிகையில் வெளியிட்டிருக்கிறார். அவைபின் வருமாறு.

1859-ம் வருஷம் ஜனவரிமீ' 22உக்குச் சரியான தமிழ் ஸித்தார்த்திஹு தைமீ' 10உ ஆதிவாரம் அமாவாஸை உத்ராட நக்ஷத்ரம் பகல் 3-மணிக்கு மிதுன லக்னத்தில்-ஜெர்மனி சக்ரவர்த்தி வில்லியம் ஜனனம். அவருடைய ஜாதகத்தின் ராசிசக்ரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| | | | ல. / குரு. |
| சு. | ராசி. | | சனி. கேது. |
| ஸூ. பு. ரா. சந். | | | |
| | செ. | | |

தற்காலம் ஷை சக்ரவர்த்திக்கு நடக்கும் பலன்கள்.

1914-ம் வர்ஷம் ஜூன்மீ 12உ முதல் அவருக்கு சனி திசையில் சனி புக்தி நடப்பதால் இந்த சனி அஷ்டம பாக்யாதிபதியாக விருந்து தனத்தில் நின்று அஷ்டமத்தை நோக்க, இதற்கு அஷ்டமாதி பத்யமாம்

தற்காலம் ஜெர்மனி சக்ரவர்த்தியின் படைகள் பெல்ஜியத்தைக் கடந்து ப்ரான்ஸ் எல்லையில் வந்திருந்தும் ப்ரான்ஸையும் இங்க்லண்டையும் ஒருபோதும் வெல்லப் போகிறதில்லை.

1914-ம்ஹு அக்டோபர்மீ 10-உ முதல் அவருடைய கார்யங்களெல்லாம் கெட ஆரம்பிக்கும். ப்ரான்ஸ், இங்க்லண்ட், ரஷ்யா ஆகிய இவைகளும் இவைகளைச் சேர்ந்தவைகளும் பலப்பட்டு ஜயமடைந்துவரும். ஷை மாஸம் 31-ம் உ முதல் ஜெர்மன் சக்ரவாத்தியின் படைகள் அதிக நஷ்டமடையும். இன்னும் சில ராஜ்யங்களும் எதிரிகளாகும். ஷை சக்ரவர்த்தியார் ஸ்வதேசத்தைவிட்டு ப்ரான்ஸ் தேசத்தை நோக்கிப் போனவிடத்தில் பலவித கஷ்ட நஷ்டத்தை யடைந்து தன் ஸொந்த தேசத்திற்குத் திரும்பிவிடும்படி நேரிடும். மெலிந்த பெல்ஜியத்து அரசர், வலுத்து கைவிட்டிருந்த தன் ஸொந்த தேசத்தில சில இடங்களைக் கைப்பற்றுவார். ஜெர்மனியின் சில போர்க் கப்பல்கள் நஷ்டமடையும். தற்காலம் எமனைப்போல் புறப்பட்டு வந்திருக்கும் 'எம்டென்' கப்பலும் எதிரிகளாலேயே நஷ்டமடையும்.

டிஸம்பர்மீ 3-உ முதல் ஷை சக்ரவர்த்தி தன் படைகளையும் தான் பிடித்த சில ஊர்களையும் கைவிட்டு அதிக பலவீனமடைந்து கஷ்டப்படுவார். டிசம்பர்மீ 31-ம் உக்குள் தான் பிடித்த ப்ரதேசமுழுவதையும் கைவிட்டுவிடுவார். ப்ரான்ஸ், இங்க்லண்ட், ரஷ்யா இவைகள் ஜெர்மனி தேசத்தில் சில பாகங்களையும், ஆஸ்ட்ரியாவில் சில பாகங்களையும் ஜயித்து சில தேசங்களை யடையும். ப்ரான்ஸைச் சேர்ந்த சில சிற்றரசாகளும் ஷை ஜெர்மனி ஆஸ்ட்ரியா என்கிற தேசங்களில் சில சில பாகங்களை அடைவார்கள். இந்த யுத்தமானது ஸ்வல்பமாய் முடிவுபெறாது. 1870-ம் ஆண்டில் கைவிட்ட ஆல்ஸேஸ், லொரேன் மாகாணங்களை மறுபடியும் ப்ரான்ஸ் ஜெர்மனியிடமிருந்து பிடுங்கிக்கொள்ளும்.

1915-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸத்தில் சண்டை நிற்கும். திண்டுக்கல்சோதிடர் ம-ா-ா-ஸ்ரீ கந்தஸாமி பிள்ளை அவர்களும், கல்கத்தா மகா கல்விச்சங்கத்தி லிருக்கும் சாஸ்த்ர வித்வான் ஒருவரும், ஷை ஜெர்மனி சக்ரவர்த்தி கொல்லப்படுவாரென்று தெரிவித்திருந்தபடி நடவாது. ஜெர்மனி சக்ரவர்த்தி கொல்லப் படமாட்டார்; ஆனால் தோல்வியடைவார்.

இன்னொரு ஜோஸ்யர் ஜெர்மன் சக்ரவர்த்தி ஒரு ப்ரிட்டிஷ் ஸோல்ஜரால் போர்க்களத்தில் கொல்லப்படுவார் என்று தெரிவித்திருக்கிறார்.

சிலர் ஜெர்மன் சக்ரவர்த்தியின் ஜென்ம லக்னம் ஸிம்மம் என்று சொல்லுகிறார்களாம்.

மிஸ்டர் ஓல்ட் என்னும் ஐரோப்பிய ஜோதிஷ சாஸ்த்ரி ஒருவர் 1898-ம் வர்ஷத்தில் கெய்ஸருடைய ஜாதகத்தை கணித்து அதற்குப்பின் வருமாறு பலன் சொல்லியிருக்கிறார்

கெய்ஸர் அநேகமாய் தமது ராஜ்ய முழுவதையும் இழந்து விடுவார். அவரை ஜனங்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள். அவருடைய மனைவி திடீரென்று இறந்து போவார்.

அவர் எப்போதும் சண்டை சச்சரவுகள் செய்துகொண்டே யிருப்பார். அவருடைய செல்வாக்கும் அந்தஸ்தும் போய்விடும். அநேகமாய் அவருடைய ராஜ்யத்தை ப்ரான்ஸும் ரஷ்யாவும் பங்கிட்டுக்கொள்ளும். அவருடைய ஜாதகத்தைப்போல துரத்ருஷ்ட ஜாதகம் ஐரோப்பாவிலுள்ள அரசர்கள் ஒருவருக்கும் கிடையாது.

கெய்ஸர் பிறந்த வருஷம் மாஸம், தேதி, மணி, இடம் ஆகிய இவைகளைக் குறித்திருப்பதால் இதை வாசிப்பவர்களில் ஜ்யோதிஷப் பழக்கமுள்ளவர்கள் தாங்களே ஸ்வயமாக கெய்ஸர் ஜாதகத்தை கணித்துப் பலன்களை அறிந்து கொள்ளலாம்.

## EVIL EFFECTS OF PAN SUPARI.

## வெற்றிலை போட்டுக்கொள்வதின் கெடுதிகள்.

உலகத்திலுள்ள ஜனங்களில் பத்திலொரு பாகத்தார், வெற்றிலை போட்டுக்கொள்வதால் உமிழ்நீர் அதிகமாக உண்டாகிறதென்றும், ஜீர்ணசக்தி அதிகமாகிறதென்றும், ஜ்வரங்கள் வாராமல் அது தடுக்கிறதென்றும நம்பி வெற்றிலைபோடும் பழக்கத்தை அனுஷ்டித்து வருகிறார்கள். வெற்றிலை போடும்வழக்கம் இந்தியாவில் ஸுமார் 2400 வருஷங்களுக்கு முன்னேயிருந்து அனுஷ்டானத்தி லிருந்துவருகிறது. இந்த வழக்கத்தால் அநேக கெடுதல்கள் உண்டாகின்றனவென்று ஒரு டாக்டர் சொல்லுகிறார். அவர் சொல்லுகிறவைகளை இங்கே எழுதுகிறோம்.

வெற்றிலை போட்டுக்கொள்வதில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, காசுக்கட்டி ஆகிய இவைகளை உபயோகிக்கிறோம். இவைகளில் வெற்றிலையில் பிப்ரைன் என்று ஒருபொருள் இருக்கிறது. இதுவாயில் சேர்ந்ததும் வாயில் எரிச்சலும், வலியும் உண்டாகின்றன. வெற்றிலையை வெகுகாலம் போட்டுக்கொண்டுவந்தால் குடலிலுள்ள நரம்புமுனைகள் பலங்குறைந்து தங்கள் வேலையைச் செய்யமுடியாமல் போகின்றன. ரத்தம் ரொம்பவேகமாய் ஓடுவதில்லை. ஹ்ருதயத்தைச்சேர்ந்த நரம்புகள் தளர்ச்சியடைகின்றன. பாக்கில் 'அரிகெய்டைன்' என்று ஒருபொருள் இருக்கிறது. இதனால் கண்ணிலுள்ள நரம்புகள் பலவீனமடைந்து கண்ணுக்குக் கெடுதி யுண்டாகிறது.

சுண்ணாம்பு தேகத்திலுள்ள எலும்புகளையும் மாம்ஸபாகத்தையும் தின்றுவிடுகிறது.

வெற்றிலை போட்டுக்கொள்வதால் உண்டாகும் கெடுதிகள் வெளிப்படையாகத் தெரிவதில்லை. வெற்றிலை போட்டுக்கொள்பவர்கள் வெற்றிலையால் நன்மை யுண்டென்று நம்புகிறார்கள். வெற்றிலைபோட்டுப் பழகினவர்கள் அதை திடீரென்று விட்டுவிட்டால் ரொம்ப ச்ரமம் ஏற்படுகிறது. அதனால் அவர்கள் வெற்றிலையால் ரொம்ப நன்மையுண்டென்றும் வெற்றிலையை விட்டால்தான் கெடுதியென்றும் எண்ணுகிறார்கள்.

வெகுகாலம் தொடர்ச்சியாக வெற்றிலை போட்டுக்கொண்டுவந்தால், அது குடல்களிலுள்ள, உணவை ஜீர்ணம் செய்வதற்குவேண்டிய ரஸங்களை உண்டாக்கும் கருவிகளை நாசம் செய்துவிடுகிறது. இதனால் தலைவலி, பசியின்மை, தூக்கமின்மை, வாயு உண்டாவது, முதலிய கெடுதிகள் ஸம்பவிக்கும்.

இன்னும் வெற்றிலை போட்டுக்கொள்வதால் ரத்தக்கருவிகளும், ஹ்ருதயமும், நரம்புகளும் கெடுதலடைகின்றன. வேறு சில நோய்களும் ஸம்பவிப்பதுண்டு.

கண் பார்வைக்குறைவு, கண்ணே தெரியாமல்போவது, கண்ணில் பூப்படருவது ஆகிய வ்யாதிகளுக்கு வெற்றிலேபோடும் வழக்கம் ஒரு காரணமாகும். வெற்றிலே போடுவதால் நரம்புகளும் தசைநார்களும் மூத்ரக்கருவிகளும் கெடுதலடைந்து நீர்ரோகம் ஏற்படுவதற்கும் காரணமாகிறது.

இந்தக் கெடுதிகளெல்லாம் போதாவென்று சிலர் புகையிலேயையும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். புகையிலேயின் கெடுதிகளேப்பற்றி ஒரு டாக்டர் பின்வருமாறு சொல்லுகிறார்.

புகையிலே உபயோகிப்பதால் புருஷர்களுக்குள் நபும்ஸகத்வம் ஏற்படுகிறது. ஸுகாதார விதிகளுக்கு விரோதமாக ஏதாவது செய்தால் உடனே தேகத்தில் மிகவும் மெலிவான பாகம் கெடுதலடைகிறது. பொதுவாய் எவருக்கும் மர்மஸ்தானங்களே மிகவும் பலவீனமான பாகமாகையால் புகையிலேயை உபயோகிப்பதில் அந்த பாகந்தான் ரொம்பவும் கெடுதலடைகிறது.

## CARNIVOROUS PLANTS

### பூச்சிகளைத்தின்னும் செடிகள்.

பொதுவாய் செடிகள் பூமியிலிருந்து தாதுவர்க்கத்துக்குரிய உப்புக்களே ஜலரூபமாக க்ரஹித்துக்கொண்டு வளருகின்றன. ஆனால் சில ஜாதிச் செடிகள் அப்படி பூமியிலிருநது உணவை எடுத்துக்கொள்ளாமல் ஆகாயத்தில் திரியும் பூச்சிகளைப் பிடித்துத் தின்கின்றன. இப்படிப்பட்ட செடிகளில் ஸுமார் 500 ஜாதிகள் இருக்கின்றனவாம். எல்லாச் செடிகளுக்கும் நைட்ரொஜின் என்னும் செடியுணவுப் பொருள் க்ரஹிக்கக்கூடிய நிலைமையில் கிடைக்கவேண்டியதவச்யம். இந்த பூச்சிதின்னும் செடிகளெல்லாம் நைட்ரொஜின் உப்புக்கள் ரொம்பக் குறைவாயுள்ள இடங்களில்தான் வளருகினறன. இந்தச செடிகளில் சில மலேப்பாறைகளின் சரிவுகளில் மண் கொஞ்சமும் இல்லாத இடங்களில் வளருகின்றன. வேறு சில மரங்களின் கிளைகளிலும் அடிமரத்திலும் வளருகின்றன. இந்த விடங்களில் மண் இருப்பதற்கில்லே. இன்னும் சில செடிகள் சதுப்பான இடங்களிலும், நீர் தேக்கமான பள்ளங்களிலும் வளருகின்றன. இந்த மூன்று வகை இடங்களிலும் நைட்ரொஜின் ஸம்பந்தமான உப்புக்கள் இருப்பதில்லே. இந்த நைட்ரொஜின் உப்புகளில்லாவிட்டாலோ செடிகள் வளருவது முடியாது. இதனால் செடியானது தனக்கு வேண்டியிருக்கும் நைட்ரொஜினுக்காக பூச்சிகளேப் பிடித்துத் தின்கிறதென்று தோன்றுகிறது. இந்தப் பூச்சிகளில் வேண்டிய அளவு நைட்ரொஜின் இருக்கிறது.

இந்த ஜாதிச் செடிகளே மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

(1) பூச்சிகள் விழுவதற்கு அல்லது அகப்பட்டுக் கொள்வதற்கு குழிகள் அமைந்துள்ள செடிகள். இக்தச்செடிகளுக்கு ரொம்ப ப்ரகாசமானவர்ணங்கள் உண்டு. இந்த வர்ணங்களால் தான் பூச்சிகள் அவைகள் இருக்குமிடம் அறிந்து வந்து மடிகின்றன. இந்தப்பிரிவில் நிபந்தீஸ்என்று ஒருஜாதியிருக்கிறது. இதன் இலேகள் மிகவும் நீண்டு குடம்போல்மடங்கியிருக்கும். இந்தக் குடத்தினுடைய வாயில் தேன் இருக்கும். பூச்சியானது செடியின் வர்ணத்தால் மயங்கி அதனிடம் வந்து குடத்தில் உட்கார்ந்து தேனேக் குடித்துக்கொண்டே உள்ளேபோகும். உள்ளே கொஞ்சதூரம் போனவுடன் குடத்தின் உள்புறம் மிகவும் வழுவழுப்பாயிருக்கும். உடனே பூச்சியின் கால் நழுவி குடத்திற்குள் விழுந்து அதிலுள்ள ஒரு வகை ஜலத்தில் மூழ்கி இறந்துபோகும். உடனே செடி, பூச்சியைத் தின்று ஜீர்ணம் செய்வதற்காக ஒரு வகை ரஸத்தை வெளிப்படுத்தி பூச்சியைத் தின்று விடுகிறது.

(2) இரண்டாவது வகுப்புச் செடிகளில் அதன் பாகங்கள் பூச்சிகளேப் பிடிப்பதற்காக

அசைந்து கொடுக்கும். செடியின் பாகங்களின்மேல் பூச்சிகள் பட்டவுடன் அவைகள் பூச்சிகளைப் பிடித்து ஒருவித ரஸத்தால் அதைக்கொன்று தின்றுவிடுகின்றன.

(3) மூன்றாவது வகுப்பு செடிகளுக்கு இலைகளிலும் மற்ற பாகங்களிலும் ஒரு விதப்பசை இருக்கிறது. இந்தச் செடிகள் ரொம்ப பகட்டான வர்ணமுள்ளவை. பூச்சிகள் இந்த ஜாதிச் செடிமேல் பட்டதும் அதில் ஒட்டிக் கொள்ளுகின்றன. பிறகு செடி ஒருவித ரஸத்தை வெளிப்படுத்தி அதனால் பூச்சியைக்கொன்றுதின்று விடுகிறது. பூச்சிதின்னும் செடிகளில் இரண்டொன்றை விவரிக்கிறோம்.

‘வீனஸ் ப்ளைட்ராப்’ என்று ஒரு செடியிருக்கிறது. இதன் இலைகள் இரண்டு மடல்களாகப் பிரிந்திருக்கின்றன. ஒவ்வொரு மடலிலும் கண்ணுக்குத் தெரியாதபடி ரொம்ப சிறியதான மூன்று முட்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு பூச்சி அந்த முள்ளின்மேல் பட்டவுடன் இரண்டு மடல்களும் திடீரென்று ஒன்று சேர்ந்துகொண்டு பூச்சியை மூடிக் கொள்ளுகின்றன. அந்த இலையின் மடல்களில் ஒருவித ரஸம் உண்டாகி அந்த பூச்சியை ஜீர்ணம் செய்து செடிக்கு உணவாகக் கொடுக்கிறது. பூச்சி ஜீர்ணமானவுடன் மூடிக்கொண்ட இலைகள் மறுபடியும் விரிந்து கொள்ளுகின்றன. பூச்சியைத்தின்று முடிகிறவரையில் இலையின் மடல்கள் திறந்து கொள்வதில்லை.

‘ப்ளாட்டர் வொர்ட்’ என்னும் ஒரு விதச் செடி பூச்சி தின்னும் வர்க்கத்தைச் சேர்ந்தது. இது ஜலந்தேங்கியிருக்கும் பள்ளங்களில் வளரும். இதன் இலைகளில் கோழிமுட்டை வடிவமான பைகள் இருக்கின்றன. இவைகள் பசுமை நிறமாகவோ ஊதாநிறமாகவோ இருக்கும். இந்தப் பையின்மேல் பாகத்தில் ஒருத்வாரம் இருக்கிறது. இந்த த்வாரத்துக்கு கதவுபோன்ற மெல்லியபாகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதைத் திறந்து கொண்டு உள்ளே போகலாமேயொழிய உள்ளேபோனபின் வெளியில் வரமுடியாது. நீர்த்தாக்குகளில் உள்ள பூச்சிகள் அலைந்து திரிந்து பிறகு தங்குவதற்கு இந்தப் பையின் மேல்பாகத்திலுள்ள த்வாரத்தில் வந்து கதவைப்போன்ற பாகத்தைத் தள்ளிக்கொண்டு உள்ளே போய்விடுகின்றன. உள்ளே போனது போனதுதான். பிறகு திரும்பி வரமுடியாமல் அங்கேயே இறந்துபோய் செடிக்கு ஆகாரமாகின்றன.

## PUPILS AS TEACHERS.

### மாணவர்கள் உபாத்தியாயர்களாவது.

வீடுகளில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சரிவர கவனித்து படிப்புசொல்லிக் கொடுத்து நல்லவழிகளில் நடத்திவருவதால் அந்தப் பிள்ளைகளுக்கு கல்வி, ஒழுக்கம் முதலியவைகளில் ரொம்ப அபிவ்ருத்தி ஏற்படுகிறதென்பது தற்காலத்திய கல்வி முறையைப் பற்றிய கொள்கைகளில் ஒன்று. இது விஷயமாக ஒரு உதாரணம் கொடுக்கிறோம். ஒரு பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்யாயர் வீட்டுப் பயிற்சியால் பிள்ளைகளுக்கு ரொம்ப நன்மையுண்டென்று நம்பியிருந்தார். மேலும், எந்தப் பிள்ளையாவது ரொம்ப கெட்டிக்காரனாக விருந்தால் அப்படியிருப்பதற்குக் காரணம் அந்தப்பிள்ளையின் பெற்றோர்கள் பிள்ளையின் படிப்பு விஷயமாயும், நடத்தைவிஷயமாயும் ரொம்பவும் கவனம் செலுத்தி பிள்ளைகளை சரிவர நடத்திவருகிறார்களென்பதே யென்று தாம் 20-வர்ஷம் உபாத்யாயராயிருந்த அனுபோகத்தால் அறிந்திருக்கிறதாகவும் சொல்லிவந்தார். ஆயினும் அவருடைய உதவி உபாத்யாயர்கள் இந்தக் கொள்கைகளில் நம்பிக்கை கொள்ளாமல் அவ

ரோடு அடிக்கடி தர்க்கம் செய்வது வழக்கம். ஒருநாள் இதுவிஷயமாகப்பேசிக்கொண்டிருக்கையில் ஒரு உபாத்யாயர் ஒரு வீட்டுப்பிள்ளைகளைக் குறிப்பிட்டு, அவர்கள் ரொம்ப கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள் என்றும், ஆனால் அவர்களுடைய தந்தை மீன்பிடிக்கும் வலைஞனாகவும், தாய் எழுதப் படிக்கத் தெரியாத நிரக்ஷரகுக்ஷியாகவும் இருக்கிறார்கள் என்றும், ஆகையால் அந்தப் பிள்ளைகளுக்கு நல்ல வீட்டுப் பயிற்சி ஏதென்றும், வீட்டுப் பயிற்சியால் அவர்கள் ரொம்ப கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள் என்று சொல்வதெப்படியென்றும் வாதாடினார்.

அதற்குத் தலைமை உபாத்யாயர் அதன் விஷயம் நன்றாய் ஆராய்ச்சி செய்யவில்லையென்றும், விசாரித்தால் விஷயம் நன்குவிளங்கும் என்று சொல்லி, அந்தப் பிள்ளைகளின் வீட்டுக்குப்போய் அவர்களுடைய தாயாரைக் கண்டு, "உமது பிள்ளைகள் ரொம்ப கெட்டிக்காரர்களாயிருக்கிறார்களே. அவர்களுக்கு ஏதாவது விசேஷமாய் வீட்டில் படிப்புச் சொல்லிக்கொடுப்பதுண்டோ?" என்றுகேட்டார். அதற்கவள் அவர்கள் அப்படி கெட்டிக்காரர்களாயிருப்பது கடவுளின் அனுக்ரஹமென்றும், தனக்கு எழுதப்படிக்கத் தெரியாதென்றும், தான் அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டியதற்குப்பதிலாக பிள்ளைகள் தான் தாங்கள் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட பாடங்களை மறக்காமல் வந்து தனக்குக் கற்றுக்கொடுப்பதாகவும், அதனால் தனக்குக் கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரியும் என்றும் சொன்னாள்.

அதன்மேல் தலைமை உபாத்யாயர், தாயார் தன் படிப்பில் ரொம்ப அக்கரையுள்ளவளாயிருப்பதால்தான், பிள்ளைகளும் தாங்கள் படித்த பாடங்களை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டுவந்து தங்களுடைய தாயாருக்குக் கற்பித்து வருகிறார்கள் என்றும், அதனால் அவர்களுக்கும் பாடம் நன்றாய்த் தெரிந்து கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள் என்றும் விவரித்துக்கூறினார். அதாவது தாயார் தன் படிப்பில் எவ்வளவுக் கெவ்வளவு அக்கறையுள்ளவளாக இருந்தாளோ, அவ்வளவுக்கு பிள்ளைகளும் தங்கள் பாடத்தைத் தாயாருக்கு கற்பிக்க வேண்டுமென்று கவலை கொண்டு பாடத்தை ச்ரத்தையாய் கவனித்து படித்து வந்தார்கள்.

## PRECEPTS OF GENERAL NOGI.

## ஜெனரல் நோகியின் நீதி போதங்கள்.

ரஷ்ய ஜப்பானிய யுத்தத்தில் ஸாமர்த்யமாய் யுத்தம் செய்தவரென்று பெயர் வாங்கின ஜப்பானியராகிய ஜெனரல் நோகி, சென்ற 1912-ம் வர்ஷத்தில் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனாரென்பது பலரும் அறிந்தவிஷயம். இறந்துபோகுமுன் அவர் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்யாயராக இருந்து வந்தார். அவர் தற்கொலை செய்துகொண்டதற்கு சற்று முன்னால், பிள்ளைகளுக்கு உதவக்கூடிய சில நற்போதங்கள் எழுதி வைத்திருந்தார். அந்த நீதி வாக்யங்களை இப்போது ஜப்பானில் அச்சிட்டுப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். அந்த நீதி போதங்கள் பின்வருமாறு:—

(1) உனது வாயை எப்போதும் மூடி வைத்திரு. தனது வாயைஎப்போதும் திறந்து வைத்திருப்பவன் தனது மனம் சூன்யமென்பதை வெளிப்படுத்துகிறான்.

(2) உனது கண் எங்கே பார்க்கிறதோ அவ்விடத்தை நன்றாய் கவனித்துப்பார். கண் ஸதா வெவ்வேறு பொருள்களைப்பார்த்து அலைந்து கொண்டிருப்பவனுடைய மனம் திடமாக இராமல் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பதாகும்.

(3) எவரையாவது வணங்கும் போதும், வந்தனம் செய்யும்போதும் அவரை கவனித்துக் கொண்டிரு.

(4) உனது குடும்பத்தைச் சேர்ந்த யுத்த விருதுகளையும் உனதுகுடும்பத்தின் கௌரவத்தையும் மறவாதே. உனது முன்னோர்கள் விஷயத்தில் ரொம்ப மரியாதையாயிருக்க வேண்டும்.

(5) பையன்கள் ஆண்பிள்ளைகளைப் போல் நடக்க வேண்டும். பெண்களைப்போல் நடக்கக்கூடாது.

(6) விசேஷ ஸுகத்தை நாடாதே. அதைப்போல் மனிதனைக் கெடுப்பதுவேறொன்றுமில்லை.

(7) ரிக்ஷாக்களில் ரொம்பஏறிப்போகாதே.

(8) குளிர்ந்த காலங்களில் உனது முகத்தை குளிர்ந்த ஜலத்தால் அலம்பு; வெந்நீர்விட்டு அலம்பாதே.

(9) குளிர்ச்சியாயிருக்கும் போது உஷ்ணமாயிருக்கிறதென்றும், உஷ்ணமாயிருக்கும் போது குளிர்ச்சியாயிருக்கிறதென்றும் நினைத்துக்கொள்.

(10) கிழிந்த துணிகளைத் தைக்காமல் தரித்துக்கொள்ளுவது மிகவும் வெட்கமானது. ஆனால் கிழிந்துபோன பாகத்துக்கு ஒட்டுப்போட்டுத்தைத்து உடுத்திக்கொள்வதில் வெட்கப்படவேண்டிய தொன்றுமில்லை.

(11) வெட்கமென்பது இன்னதென்பதையறிந்துகொள். வெட்கமென்பதின்னதென்று அறியாதவன் வாயில்லா ப்ராணிகளுக்கும் கீழானவன்.

(12) தேகம் ஸௌக்ய மாயிருக்கும்போது பசி, தாகம், வலி முதலியவைகளைப் பொறுத்துக்கொள்ளும் சக்தியை வ்ருத்தி செய்துகொள்ள வேண்டும். உடம்பு அஸௌக்யமாயிருந்தால் வைத்யர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி நடக்க வேண்டும்.

(13) உனது உடைகளும் ஜோடுகளும் சற்றுப்பெரியனவாக இருக்கட்டும். பெரியதாகப் போனால் 'ஜோர்' கெட்டுப்போகுமென்று கவலைப்படாதே.

(14) உனது தேசத்துக்கு உபகாரம் செய்பவனாக இரு; அப்படியிருக்க முடியாதவன் இருப்பதைவிட இறப்பது மேல்.

## RULERS AT WAR.

## யுத்தம் செய்யும் தேசாதிபதிகள்.

### KING GEORGE V OF ENGLAND.

### ஜார்ஜ். V, இங்க்லண்டின் அரசர்.

ஜார்ஜ் சக்ரவர்த்தி 1865-ம் வர்ஷம் ஜூன் மாஸம் 3-தியன்று ஜனனமானார். அவர் ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தியின் இரண்டாவது புதல்வர். ஜார்ஜின் தமையன் பெயர் எட்வர்ட். ஜார்ஜுக்கு பால்ய முதல்கொண்டே கடல் வாழ்க்கையில் ரொம்ப ப்ரியம் இருந்தது. அதற்கேற்ப அவரை கப்பல் படை வேலைக்குத் தயாராகும்படி, 1877-ம் வர்ஷம் ஒருகப்பலில் வேலை கற்றுக்கொள்ளும்படி அமர்த்தினார்கள். 1879-ம் வர்ஷம் அவர் மத்யதரைக் கடலிலுள்ள ப்ரிட்டிஷ் கப்பல் படையைச்சேர்ந்து அதைச்சேர்ந்த பற்பல க்ப்பல்களில் வேலைக்கமர்ந்து வேலைகளை நன்றாய்க் கற்றுக்கொண்டார். 189)-ம் வர்ஷத்தில் அவர் ஒரு சிறியபீரங்கி கப்பலுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1891-ம் வர்ஷம் அவருக்கு கப்பல்படையில் 'கம்மாண்டர்' பதவிகிடைத்தது.

இதுவரையில் அவருக்கு ராஜ்யபாரக் கவலை ஏற்படுமென்ற எண்ணமே யிருக்கவில்லை. ஏனென்றால் அவருடைய தமையனாகிய எட்வர்ட் பட்டத்துக் குரியவராக இருந்தார். ஆனால் 1892-ம் வர்ஷம் எட்வர்ட் இறந்து போகவே, ஜார்ஜ் இளவரசராக ஆகிவிட்டார். அதுமுதல் கடல்வாழ்க்கையை விட்டுவிட்டு இனி காலக்ரமத்தில் அடையப்போகும் சக்ரவர்த்தி பதவிக்குவேண்டிய விஷயங்களைப்பற்றி கவனித்தும், அந்த வாழ்க்கைக்கு ஏற்றவிதமாய் நடந்தும் வரவேண்டியதாயிற்று. 1893-ம் வர்ஷம் அவருக்குக்கல்யாணம் நடைபெற்றது,

நமது சக்ரவர்த்தி அநேக ஸமயங்களில் வெளிதேசங்களுக்குப்போய் வந்திருக்கிறார்.

1891-ம் வர்ஷத்திலும், 1897-ம் வர்ஷத்திலும் அவர் ஐயர்லண்டில் சுற்று ப்ரயாணம் செய்தார். 1901-ம் வர்ஷத்தில் குடியேற்ற நாடுகளுக்குப் போய்வந்தார். இந்தியாவுக்கு ப்ரின்ஸ் அவ் வேல்ஸாக இருந்தபோது ஒரு தடவையும், மகுடாபிஷேக தர்பாருக்காக 1911-ம் வர்ஷம் ஒரு தடவையுமாக இரண்டு தடவை விஜயம் செய்திருக்கிறார். 1905-ம் வர்ஷம் வேல்ஸ் என்னும் தேசத்துக்குப் போய் சுற்று ப்ரயாணம் செய்தார்.

எட்வர்ட் அரசர் ஸ்த்ரீகள் ஸகவாஸத்தில் அடிக்கடி இருந்ததுபோல் ஜார்ஜ் அரசர் இருப்பதில்லை. தமது மனைவி, பெண் ஆகிய இரண்டு ஸ்த்ரீகளைத்தவிர மற்ற ஸ்த்ரீகள் விஷயத்தில் உபேக்ஷையாகவே இருப்பார்.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ர வாதிகளைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. விவாதத்துக்கிடமான எந்த விஷத்தைப்பற்றியும் நமதரசர் யாதொரு அபிப்ராயமும் சொல்லுவது வழக்கமில்லை யென்றாலும், ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் விஷயத்தில் மாத்ரம் தமது வெறுப்பைக் காட்டிப் பேசுகிறார்.

அவருக்கு படாடோபம் பிடிக்காது. ஸாதாரண நடையுடையுள்ள ஒரு கனவானைப்போலிருப்பார். அவர் யாரிடத்திலும் முதலில் பேசும் ஸ்வபாவமுள்ளவரல்ல. ஆனால் அவரைப்பார்க்க வருபவர் யாவரும் அரசர்பேசிய பிறகே பேசவேண்டியதாகையால் அவருக்கு மௌன வ்ரதம் ஸாதிக்கமுடியாமல் போகிறது.

அவர் தமது குடும்பவிஷயத்தில் ரொம்ப அக்கரையுள்ளவர். தமது குழந்தைகளிடத்தில் ரொம்ப பக்ஷமுள்ளவர். தமது குளுசு குழந்தைகளோடு கூடிக் குலாவுவதில் ரொம்ப ப்ரியமுள்ளவர்.

குழந்தைகளின் படிப்புவிஷயத்தை ராணியே அதிகம் கவனித்து வருகிறார். என்றாலும், குடும்ப விஷயத்தில் அரசர் பேச்சு ஏறாதென்று சொல்லக்கூடாது. தமது குழந்தைகளைப்பற்றிய விஷயங்களிலெல்லாம் தாம் கவனம் செலுத்துவதோடு, தமக்கு எந்தவழி ஸரியென்று தோன்றுகிறதோ அதை அனுஸரித்தே எதுவும் நடக்கவேண்டுமென்றும் கட்டாயப்படுத்துவார்.

தமது குழந்தைகளைப்பற்றி கவனிப்பதற்கு அடுத்தபடி விவஸாயமே அவருக்கு ரொம்ப ப்ரியமென்றாலும், அது விஷயம் கவனம் செலுத்த போதுமான அவகாசம் அவருக்குக் கிடைப்பதில்லை. வேட்டையாடுவதில் அவருக்கு அதிக ஆவல் கிடையாது. குதிரை ஸவாரி செய்யும்போதும் நல்ல வேட்டைக்காரர்போல ஸரியாய் உட்காரத் தெரியாது.

அவர்வேண்டிய அளவு தேகாப்யாஸம் செய்துவருகிறார். லண்டனில் இருக்கும்போது தினம் குதிரை ஸவாரி போய்வருவார். டென்னிஸூம் ஆடுவதுண்டு. கால்ப் ஆட்டத்தில் ப்ரியம் கிடையாது. பில்லியர்ட் ஆட்டமும் ஸாமர்த்யமாய் ஆடவராது.

ஆகாரம், பானம் ஆகிய இவைகளில் நமது அரசர் ரொம்பவும் மிதமாக இருப்பவர். அவருக்கு ஷாம்பேன் என்னும் சாராயத்தில் ப்ரியம் கிடையாது. ஜாஸ்திபோதை கொடுக்காத ஒயின் அல்லது ஜலம் கலந்த விஸ்கியைத்தான் குடிப்பார். காரம் அதிகமில்லாத சுருட்டு தினம் ஒருடஜன் குடிப்பது வழக்கம்.

எந்த விஷயத்தைப் பற்றியாவது ஒரு அபிப்ராயம் கொண்டுவிட்டால் அதை மாற்றவாவது பிறருக்காக இணங்கிப்போகவாவது மாட்டார். பொது ஜனவிஷயத்தின் நன்மையை உத்தேசித்து மாத்ரம் தமது அபிப்ராயத்தை மாற்றுவதுண்டு.

தினஸரிப் பத்ரிகைகளைத் தவிர மற்ற புஸ்தகங்கள் வாசிக்க அவருக்கு நேரம் இருப்பதில்லை. எப்போதாவது வாசித்தாலும் பூகோள சாஸ்த்ர ஆராய்ச்சி ஸம்பந்தமான புஸ்தகங்களை வாசிப்பாரே ஒழிய ''நாவல்''கள் வாசிப்பது கிடையவே கிடையாது. ஜ்யாக்ராபிகல் ஸங்கத்தின் ரிபோர்ட்டுகளை வாசிப்பதில் அவருக்கு ப்ரியம் அதிகம். அவருக்கு உதவியாக அநேக ஸெக்ரடரிகள் இருக்கிறார்கள். எந்த விஷயத்தையும் மனப்பூர்வமாய் ஆராய்ந்து பார்ப்பார்.

## KAISER WILHELM II OF GERMANY.

### ஜெர்மன் சக்ரவர்த்தி கேய்ஸர் வில்லியம் II.

ஜெர்மனியின் சக்ரவர்த்தியாகிய இரண்டாவது வில்லியம் விக்டோரியா ராணியாரின் பெண்வயிற்றுப் பேரனுவார். நமதுசக்ரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் விக்டோரியா ராணியாரின் பிள்ளை வயிற்றுப்பேரன். ஆகவே இவர்கள் இருவரும் அத்தான் அம்மான்சேயாகிறார்கள்.

வில்லியம் 1859-ம் வர்ஷம் ஜனவரிமீ 27-ம் தேதிஜனனமானார். 1888-ம் வர்ஷம் பட்டத்துக்கு வந்தார். இவருக்கு 6-வது வயஸுமுதல் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. அப்போது முதல் கொண்டே அவருக்கு ராணுவப்பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது. பத்தாவதுவயஸில் அவர் புட் கார்ட்ஸ் என்ற ஒரு ஸைன்யத்தில் லெப்டினண்ட் பதவியை யடைந்தார். ஜெர்மன் ராஜ்யத்து இளவரசர்கள் எப்போதும் பத்துவயஸு வரையில்தான் பெற்றோர்களுடைய செல்வக் குழந்தைகளாக வளர்ந்துவரலாம். அதறகுப் பிறகு அவர்களை ஒரு ஆசிரியரிடம் விட்டுவிடுவது வழக்கம். அவர் தம்மிடம் வரும் இளவரசர் ராணுவ ஒழுங்குகளுக்கும், பையன் எந்த ரெஜிமெண்டில் சேருகிறாரோ அந்த ரெஜிமெண்டின் ஒழுங்குகளுக்கும் அடங்கி நடந்துவரும்படி கற்பித்துவருவார்.

வில்லியம் ராஜகுமாரருக்கு பால்ய முதல் கொண்டே ராணுவவிஷயங்களில் ரொம்ப ப்ரியமுண்டு. அவர் கர்னல் உத்யோகம் பார்த்துவந்தபோதுதான் ராணுவ விஷயங்களில் விசேஷமாய் கவனம்செலுத்த ஆரம்பித்தார். அது முதல்கொண்டு படிப்படியாக அநேக ராணுவவிஷயங்களைப்பற்றி ரொம்பத் தெரிந்துகொள்ளலானார். அவருடைய ராணுவ ஞானத்தைப்பற்றி, அவருடைய தகப்பனாரும், அப்போது ஜெர்மன் ஸேனாதிபதியாயிருந்த மால்ட்க் என்பவரும் இன்னும் அநேக ராணுவத்தலைவர்களும் ரொம்பவும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்.

வில்லியம் ஒழிவுநேரங்களில் லோக வ்யவஹாரங்களைப்பற்றியும் ராஜதந்த்ர விஷயங்களைப்பற்றியும் படித்துவருவார்.

அவர்ரொம்ப உழைப்பாளி. மனச்சாக்ஷிக்கு விரோதமாக ஒன்றும் செய்பவரல்ல. தமது கடமையைச் செய்துமுடிக்க ரொம்ப பொறுமையும் உழைப்பும் வேண்டியதவச்யமென்பதையும், தமது கடமையே மற்றெல்லாவற்றையும்விட முக்யமானதென்பதையும் அறிந்திருக்கிறார்.

அவருக்கு தமது ஒழிவுநேரங்களில் மனைவி மக்களுடன்பேசிக் காலங்கழிப்பதில் ரொம்ப ப்ரியம் உண்டு. தமது வேலையில் ஏதாவது ஒழிவுநேர்ந்தால் தமது மனைவியுடன் ராஜ்யகாரியங்களைப்பற்றி ஆலோசனை கேட்க வருவாராம்.

அவருக்கு குதிரைகளின்மேல் ரொம்ப ப்ரியம் உண்டு. அவரிடம் நூற்றுக்கணக்கான குதிரைகள் இருக்கின்றன. இவைகள் பெர்லினிலும், பாட்ஸ்டம் என்னும் பட்டணத்திலும் இருக்கின்றன. இவைகளை அடிக்கடி போய்ப்பார்ப்பதில் அவருக்குரொம்ப த்ருப்தியாம்.

வில்லியம் சக்ரவர்த்தியாக வந்ததுமுதல் அவருக்கு ராஜாங்கவேலைகள் ரொம்ப அதிகம்,

அவ்வளவையும் வைத்துக்கொண்டு ஏதேனும் புஸ்தகங்கள் படிப்பதென்பது கஷ்டமான கார்யம். ஆனாலும் அவர் தமது தேசத்திலும் வெளிநாடுகளிலும் வெளியாகும் ராணுவப் புஸ்தகங்க ளெல்லாவற்றையும் படித்துவிடுகிறாராம். மற்ற புஸ்தகங்களில் சரித்ர ஸம்பந்தமான கதைப் புஸ்தகங்கள்தான் ரொம்ப ப்ரியம். வேறு முக்யமான புஸ்தகங்கள் ஏதாவது வெளியானாலும் அவைகளையும் வாசிக்காமலிருப்பதில்லை. முக்யமாய் சாஸ்த்ரம், கலைகள் முதலியவைகளில் புதிதாக ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டால் அதைப்பற்றியறிய அவருக்கு ரொம்ப ஆவலுண்டு.

அவருக்குப் படாடோபம் கிடையாது. ஸாதாரண மனிதரைப்போல் நடந்துவருவார். வீண் ஆடம்பரங்களில் பணம் செலவழிப்பது கிடையாது. அவருக்கு ராஜாங்கத்திலிருந்து கிடைக்கும் வரும்படியும் அதாவது கவர்ன்மெண்டார் அவருடைய ஸொந்த செலவுக்காகக்கொடுக்கும்பணமும், அவருடைய ஸொந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வரும்படியும் சேர்ந்து மொத்தம் ஒரு கோடியே 20 லக்ஷம் ரூபாய் கிடைக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு அவர்ரொம்ப தாராளமாய்ச் செலவழிக்க முடியாதென்று சொல்லப்படுகிறது.

கெய்ஸர் தமது இஷ்டத்தின்படி ராஜ்யம் நடக்க வேண்டுமென்று எண்ணுபவர். அவர் சொல்லும் அபிப்ராயங்களை அவருடைய மந்திரிகளும் மாற்றுவது கஷ்டம். மந்த்ரிகள் சொல்லுவன அவருக்குப்பிடித்தால் போயிற்று. இல்லாவிட்டால் அவர்கள் என்ன சொன்னாலும் சரி, அவைகள் அவர்காதில் ஏறா. மந்த்ரிகளெல்லாம் பேருக்குத்தான் மந்த்ரிகளாக இருக்கிறார்களாம். அரசரின் இந்த இயல்பை அறிந்த அநேக க்ருதாமக்காரர்களும், முகஸ்துதியம் செய்பவர்களும், அதிகார ப்ரியமுள்ளவர்களும் அவரைச் சூழ்ந்துகொண்டு அவருக்கு ஹிதமான வார்த்தைகளைச்சொல்லி அவருடைய மதிப்பை யடைந்து வருகிறார்கள். இவர்கள் அவருக்கு தேசத்தின் உண்மையான நிலைமையை அறிவிக்காமல் அரசருக்கு ஹிதமானவைகளையே சொல்லிக்கொண்டிருப்பதால், அரசர் உண்மையை அறியாமல் இருக்கிறார் என்றும், இப்படியிருப்பது கடைசியில் அரசருக்கு ஆபத்தாய் முடியுமென்றும் சொல்லப்படுகிறது.

கெய்ஸருக்கு ராணுவத்தைப்பற்றி விசேஷ ஞானமுண்டு. ராணுவத்திலுள்ள 25,000 ஆபிஸர்களில் பாதிப்பேர்களை நேரில் அறிந்திருக்கிறாராம். அவருக்கு ஒருராணுவ மந்த்ராலோசனை ஸபையிருக்கிறது. அந்த ஸபையின்மூலமாய் எல்லா ஆபிஸர்களைப்பற்றியும் அறிந்து வைத்திருக்கிறார். கப்பல் படையிலுள்ள எல்லாக்கப்பல்களும் அவருக்கு நன்றாய்த்தெரியும். ஆம் கப்பல்படை ஆபீஸர்களெல்லாரை நேரில் நன்றாய்த்தெரியும்.

**EMPEROR FRAN PH OF AUSTRIA.**

**ஆஸ்ட்ரிய சக்ரவர்த் ரான்ஸிஸ் ஜோஸப்.**

ஆஸ்டரியா-ஹ கரி ராஜ்யத்தின் சக்ரவர்த்தியின் பெயர் ப்ரானஸிஸ் ஜோஸப். அவர் 1830-ம் வர்ஷம் ஆகஸ்ட்மாஸம் ஜனனமானார். ஆகவே அவருக்கு இப்போது 85-வயஸா நடந்துகொண்டிருக்கிறது. அவருடைய தகப்பனாரின் பெயர் ப்ரான்ஸ் சார்ல்ஸ். ப்ரான்ஸிஸ் ஜோஸப் பிறநதகாலத்தில் அவருடைய பாட்டனார் ஆஸ்ட்ரியாவை ஆண்டுகொண்டிருந்தார். அவருக்குப்பிறகு அவருடைய மூத்தபுத்ரரும், ப்ரான்ஸிஸ் ஜோஸபின் பெரிய தகப்பனருமாகிய பெர்டினண்ட் 1835-ம் வர்ஷம் பட்டத்துக்குவந்து 1848-ம் வர்ஷம் வரையில் ஆண்டுவந்தார். பெர்டினண்டுக்குப் புத்ரனில்லாமையாலும், அவர் ரொம்பமெலிந்து வ்யாதியுடனிருந்ததாலும், ப்ரான்ஸிஸ் ஜோஸபின்

தகப்பனும் தாயாரும் ப்ரான்ஸிஸ பட்டத்துக்கு வருவார் என்று நிச்சயம்கொண்டு அவருக்கு சிறு வயஸுமுதல்கொண்டே சக்ரவர்த்திக்கு ஏற்றதானகல்வியை கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அவருக்கு ராணுவ விஷயங்களை ரொம்ப ச்ரத்தையுடன் பயிற்சி செய்வித்தார்கள். அவருக்கு ராணுவவிஷயங்களில் ரொம்ப அனுபோகமும் உண்டு. இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் நடந்த சண்டையில் அவர்ரொம்ப ஸாமர்த்யமாய் யுத்தம் செய்தாராம்.

1848-ம் வர்ஷத்தில் ஆஸ்ட்ரியாவிலும் அதைச்சேர்ந்த ப்ரதேசங்களிலும் ரொம்ப கலகங்களும் சச்சரவுகளும் நடந்தன. அவைகளையடக்கி யாளுவதற்கு பெர்டினண்ட் சக்ரவர்த்திக்கு போதுமான சக்தியில்லாமையால் அவரை ராஜ்ய நிர்வாகத்திலிருந்து விலகிக்கொள்ளும்படி பலர் தூண்டினுர்கள். அதன்படியே அவர் ராஜ்ய நிர[illegible]த்திலிருந்து விலகிக்கொண்டார். ெ[illegible]டின் தமபியாகிய ப்ரான்ஸிஸ சார்ல்ஸ் [illegible]ட்டத்துக்குவர இஷ்டப்படாமல் த[illegible]ராகிய ப்ரான்ஸிஸ் ஜோஸப்புககுப்பட்ட[illegible]காடுத்தார்.

ஆஸ்ட்ரியா சக்ரவர்த்தியாகப் பட்டத்துக்கு வந்ததுமுதல் அவர் தமது தேசத்திலிருந்து வந்த கலகங்களை அடக்கவும், தமது ப்ரஜைகளை தம்மை நேசிக்கும்படி செய்யவும ரொம்ப பாடுபட்டார். ஆனுல் அதுமுற்றிலும கைகூடவில்லை. இப்போதும் அநேக ஜனங்கள் அவரை வெறுப்பதாகத் தோன்றுகிறது.

அவா மிகவும் துரத்ருஷ்டசாலி யென்று சொல்லவேண்டும. அவா அநேக யுத்தங்கள் செய்து சில ப்ரதேசங்களை இழந்திருக்கிறுர். அதோடுகூட அவருடைய குடும்ப வாழ்க்கையில் அநேக கஷ்டஙகள் நேர்ந்திருக்கின்றன. அவருடைய ஸகோதரராகிய மாக்ஸ்மிலியன் மெக்ஸிகோவில அரசராக இருந்தபோது அவரைக் கலகக்காரர்கள் பிடித்துச் சுட்டுவிட்டார்கள். அவருடைய (ப்ரான்ஸ் ஜோஸப்) ஒரே புத்ரரும், பட்டத்துக் குரியவருமான ருடால்ப் ராஜகுமாரர் வேட்டையாடப் போயிருந்தவிடத்தில் அந்யாயமாய்க் கொலை செய்யப்பட்டு இறந்துபோனுர். யார் கொலை செய்தாரென்றுவது, என் கொலை செய்தாரென்றுவது இன்னும் ஒருவருக்கும் தெரியவில்லை. அவருடைய மனைவியை யாரோ ஒருவன் கொலை செய்துவிட்டான். இவ்வளவு துக்கமும் போதாவென்று இவருடைய ஸகோதருடைய புத்ரரும் இளவரசருமாகிய ப்ரான்ஸிஸ பெர்டினண்டையும் அவருடைய மனைவியையும் ஒரு ஸெர்வியமானவன் சென்ற ஜூன்மாஸம் ஸராஜிவோ பட்டணத்தில் கொலை செய்துவிட்டான். அந்தசெய்தியைக் கேள்விப்பட்ட ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தி தாங்க முடியாத துக்கத்தால், "ஐயோ, எனக்கு ஒன்றும் கொடுத்துவைக்க வில்லையே" என்று கதறினுராம். அவரைப்போல் வாழ்நாளில் துக்கங்கள் அனுபவித்த அரசர் ஐரோப்பாவில் ஒருவருமே யில்லையென்று சொல்லலாம்.

## CZAR NICHOLAS II OF RUSSIA.

### ரஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய நிக்கலாஸ் II.

ரஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய இரண்டாவது நிக்கலாஸ் 1868-ம் வர்ஷம் மே மாஸம் 18-தேதி ஜனனமானுர். அவர் 1894-ம் வர்ஷம் பட்டத்துக்கு வந்தார். அவருடைய ராஜ்யம் ஐரோப்பாவின் பெரும்பாகமும் ஆசியாவின் வடக்குபாகமுமாகும். இதன் மொத்த விஸ்தீரணம் ஸுமார் 86½-லக்ஷம் சதுரமைலாகும். ரஷ்யாவின் அரசாட்சி கொடுங்கோலரசென்றும், அரசா ஜனங்களுடைய ஸௌக்யங்களைகவனிக்காமல் நடத்தும் ராஜாங்கமென்றும் சொல்வதுண்டு. இப்போதுள்ள ரஷ்ய சக்ரவர்த்தியைப்பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறுர்கள். அவருக்கு ஜனங்களிடத்

தில் அபிமானமில்லை யென்றும் ஜனங்கள் அவரை வெறுக்கிறார்களென்றும், ஜனங்களின் க்ஷேமத்தைப்பற்றி அவர் கவனிப்பதேயில்லை யென்றும் பலர் சொல்லுவதுண்டு.

வேறு பலா அவரைப்பற்றி ச்லாகித்துச் சொல்லி யிருக்கிறாகள். ஜனங்கள் எல்லாரும் ஸாரின்மேல் ரொம்ப விச்வாஸமாயிருப்பதோடு, ஸார் தேவதாம்சம் உள்ளவரென்றும் எண்ணுகிறார்களாம்.

ஐரோப்பாவிலுள்ள சக்ரவர்த்திகள் எல்லாரையும்விட அவர்தான் ரொம்ப சிறந்த கல்விமான். ரொம்ப புத்திசாலி; லோக வ்யவஹாரங்களில் விசேஷ ஞானம் உண்டு. இவ்விஷயங்களில் கெய்ஸரும், ஆஸ்ட்ரியா சக்ரவர்த்தியும் ஸாருக்குக் கீழ்பட்டவரென்றே சொல்லவேண்டுமாம். அநேகர் அவர் ரொம்ப பயந்த ஸ்வபாவமுள்ளவரென்றும், தம்மை யாராவது கொன்றுவிடுவார்களோ என்று ஸதா ஸர்வ காலம் நடுங்கிக்கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். வேறு சிலர் அவர் அப்படி யில்லை யென்று சொல்லுகிறார்கள்.

அவர் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பவர். தமது கடமை இன்னதென்று அறிந்து அதன்படி நடப்பதோடு தமது தேசத்துக்கு கௌரவக் குறைவாயுள்ள எதையும் செய்ய மனம் துணியமாட்டார். அவர் பயப்படுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதாவது தமது கடமைக்கு விரோதமாகவாவது தமது தேசத்துக்கு கௌரவக் குறைவாயாகவாவது எங்கு தாம் நடந்துவிடுவாரோ என்பது தான்.

ஸாரிடம் அநேக ச்லாக்யமான குணங்கள் அமைந்திருக்கின்றன. அவர் ரொம்ப தெய்வ பக்தியுள்ளவர். உண்மை பேசுபவர்களைக் கண்டால் ரொம்ப ப்ரியம். வஞ்சகமான நடத்தையைக் கண்டால் வெறுப்பார். தாம் சக்ரவர்த்தியாக வந்ததில் ரொம்ப கடமைகளை வகிக்கவேண்டி யிருக்கிறதென்பதை யறிந்து கொண்டிருக்கிறார். எப்போதும் சுறுசுறுப்புள்ளவர். ஜனங்களிடத்தில் ரொம்ப அநுதாபமுள்ளவர். ஸமாதானம் ஸமாதான மென்று சொல்லி ஐரோப்பிய தேசங்கள் போர்க்கப்பல்களையும் பீரங்கிகளையும் ஸைன்யங்களையும் ஏராளமாய்த் தயார் செய்துகொண்டிருப்பதில் ஜனங்களுக்கு வரிப்பளு அதிகமாகிறதென்றும், இதனால் எப்போதாவது பெரிய ஆபத்து நேரிடக்கூடுமென்றும், அப்போது ரொம்ப கஷ்டம் நேரிடுமென்றும் எண்ணி, இந்த நிலைமையை மாற்றுவதற்காக எல்லாதேசத்து ராஜாங்கங்களும் ஒன்றுகூடி ஆலோசிக்கவேண்டுமென்று கொஞ்சகாலத்துக்கு முன்னால் ஒரு ப்ரேரணைசெய்தார். ஆனால் அந்த ப்ரேரணை நிறைவேறவில்லை. அதுமுதல் அவர் ஸமாதானத்தையே நாடிக் கொண்டிருந்தார் என்று தோன்றுகிறது. அதனால்தான் அவருடையராஜ்யத்தின் ராணுவ பலம் எவ்வளவு நேர்த்தியா யிருக்கவேண்டுமோ அப்படி யிலலாமல் போய், ரஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்ததென்று தோன்றுகிறது. ஆனால் அந்த யுத்தத்திற்குப் பிறகு அவருடைய மந்த்ரிகளும் ப்ரபுக்களும் ஸேனாபலத்தை அதிகப்படுத்துவது அவச்யமென்பதை அடிக்கடி வற்புறுத்தினதால் இப்போது ரஷ்யாவுக்கு ராணுவ பலம் அதிக மிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

ஸார் பார்வைக்கு லக்ஷணமா யிருப்பார். அவர் ரொம்ப உயரமில்லாவிட்டாலும், உயரத்துக்குத் தகுந்த பருமனும் நல்ல சரீரமும் உள்ளவர். அவரை போட்டக்ராப்பில் பார்த்தால் நமது சக்ரவர்த்தி சாயலா யிருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் வாஸ்தவத்தில அவ்வளவு ஒற்றுமை கிடையாது. அவர் சிறுவயஸாக இருந்தபோது அவருடைய

தந்தை அவருடைய படிப்பில் ரொம்ப ச்ரத்தைபாராட்டி வந்தார். அவருக்கு தேசீயக் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. அவருக்கு ரஷ்யர்கள்தான் உபாத்யாயர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர் பால்யத்தில் ரொம்ப பலஹீனமா யிருந்ததாலும், அவருடைய கல்வி முறை ரொம்ப கடினமா யிருந்ததாலும் அவருக்குப் படிப்பு ரொம்ப தாமஸமாக நடந்து வந்ததாம். அவருடைய ராணுவப் பயிற்சி ரொம்ப கடுமையானது. சிறு பையனாக இருந்தபோது அவரை ஓர் குடித்தனக்காரப் பையன்போல் நடத்தி வந்தார்களாம். மூன்றுவது அலெக்ஸாண்டர் சக்ரவர்த்தியின் 16-ம் ரெஜிமெண்டில் அவர் ஒரு ஸோல்ஜராக வேலை பார்த்து வந்தார். அப்படி வேலைபார்த்து வந்தபோது அவர் மிகப்பளுவான ராணுவச் சட்டையும், பைகளில் 120 சுற்றுத் தோட்டாக்களையும் போட்டுக்கொண்டு, மண்வெட்டி அல்லது கட்டப்பாரையைத் தூக்கிக்கொண்டும், சோற்றுப்பையை மாட்டிக்கொண்டும், நடப்பாராம். அவர் தூக்கிக்கொண்டுபோகும் ஸாமான்கள் துப்பாக்கியைச் சேர்க்காமல் 100 ராத்தல் நிறையிருக்கும். யுத்தப் பயிற்சி செய்விக்கும் தாழ்ந்த உத்யோகஸ்தன் அவரை இவ்வளவு சுமையுடன் 7-மைல் தூரம் மேடுபள்ளங்களில் நடத்திக் கூட்டிக்கொண்டு போவானும். வழியில் எந்த உத்யோகஸ்தர் எதிர்ப்பட்டாலும் அவருக்கு நிக்கலாஸ் ஸலாம் செய்யவேண்டுமாம். ரெஜிமெண்டின் புஸ்தகத்தில் இவர் பெயர் ப்ரைவேட் நிக்கலாஸ் ரோமனுப் என்று மாத்ரம் எழுதப்பட்டிருந்தது.

ஸாருக்கு 1894-ம் வர்ஷம் கல்யாணமாயிற்று. அவருக்கு நான்கு பெண்களும் ஒரு பையனும் உண்டு. பையனின் பெயர் அலெக்ஸிஸ். ஸார் சக்ரவர்த்தியின் தாயாரும், நமது சக்ரவர்த்தியின் தாயாராகிய அலெக்ஸாண்ட்ரா ராணியும் ஸகோதரிகள்.

## THE WAR WITH TURKEY.

### துருக்கியோடு யுத்தம்.

துருக்கிக்கும் இங்கலண்டுக்கும் யுத்தம் நேர்ந்திருப்பதை யாவரும் அறிந்திருப்பார்கள். அப்படி யுத்தம் நேர்ந்ததற்குக் காரணங்கள் வைஸ்ராய் தெரிவித்திருக்கிறபடி பின்வருமாறு.

அக்டோபர்மீ 29-தேதி யன்று இரண்டு மூன்று டார்பிடோ கப்பல்கள் ப்ளாக்ஸீயிலுள்ள (கருங்கடல்) ரஷ்யாவுக்கு ஸொந்தமான ஒடெஸ்ஸா துறைமுகத்துக்குள் போய் அட்டஹாஸம் செய்தன. ரஷ்யர்களுக்கு ஸொந்தமான 'டொனட்ஸ்' என்னும் பீரங்கிக் கப்பலை மூழ்கடித்தன. அந்தக் கப்பலிலிருந்தவர்களில் அநேகர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போனார்கள். ரஷ்ய வ்யாபாரக் கப்பல்களான 'விடியாஸ்,' 'லையாஸாராப்,' 'வாம்பாஸ்' என்பவைகளைச் சேதப்படுத்தின. மேலும், ப்ரெஞ்சுக்காரர்களுக்குஸொந்தமான 'போர்ட்டுகல்' என்னும் கப்பலையும் சேதப்படுத்திவிட்டன.

இன்னும் இந்த டார்ப்பிடோ கப்பல்கள் அந்தப் பட்டணத்தை நோக்கியும் சுட்டன. இந்தக் கப்பல்கள் துருக்கியைச் சேர்ந்தவைகள் என்று ஒடெஸ்ஸாவின் கவர்னர் தெரிவிக்கிறார்.

கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்த ரஷ்யக் கப்பல்களை துருக்கியர்கள் மூழ்கடித்துவிட்டார்களாம். 'ஒடோஸியா' என்னும் ரஷ்யப் போர்க்கப்பலை துருக்கிய போர்க்கப்பல்கள் தாக்கினவாம்.

இந்தச் செயல்கள் யாவும் யுத்த விளம்பரம் செய்யாம லிருக்கும்போதே நடந்திருக்கின்றன. இப்படி துருக்கி நடந்துகொண்டதற்கு தக்க காரணமாவது, இதற்கு முன் இரண்டு தேசத்துக்கும் மனஸ்தாபமாவது கிடையா. இங்கலண்டோடுஸ்னேகமாயிருக்கும்

ரஷ்யாவோடு துருக்கி இப்படி நடந்துகொண்டதானது துருக்கிக்கும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் மனஸ்தாபத்தை உண்டுபண்ணக் கூடியதாயிருக்கிறது.

சில காலமாக துருக்கி கவர்ன்மெண்டார் ஜெர்மனியின் தூண்டுகோலால் இங்கிலண்டுக்கு விரோதமாக நடந்துவந்திருக்கிறார்கள். யுத்தம் ஆரம்பித்த சில நாள்களுக்கெல்லாம் மத்யதரைக்கடலில் இருந்த 'கோபன்', 'ப்ரஸ்லா' என்னும் இரண்டு ஜெர்மன் கப்பல்களை, அந்தக் கடலில் இருந்த இங்கிலீஷ் ப்ரெஞ்ச் கப்பல்கள் பிடிக்க முயன்றபோது, அந்த இரண்டு ஜெர்மன் கப்பல்களும் கிழக்கே நோக்கி ஓடிப்போய் துருக்கியைச்சேர்ந்த டார்டனல்ஸ் ஜலஸந்தியில் புகுந்துகொண்டன. பரஸ்பர தேசச் சட்டத்தின்படிக்கும், துருக்கியுடன் செய்யப்பட்டிருக்கும் உடன்படிக்கைகளின்படிக்கும் துருக்கியானது இந்தக் கப்பல்களைப் பிடித்துவைத்துக்கொண்டு அவைகளிலுள்ள பீரங்கி முதலிய யுத்த ஸாமான்களை அப்புறப்படுத்திவிட்டு, அவைகளின் வேலையாட்களையும், ஆபிஸர்களையும் துருக்கியிலேயே நிறுத்திவைத்து, யுத்தம் முடிந்தபிறகு அவர்களுடைய ஸொந்த தேசத்துக்கு அனுப்பிவிடவேண்டும். இல்லாவிட்டால், அந்தக் கப்பல்கள் வந்து சேர்ந்த 24-மணிக்குப் பிறகு வெளியே போய்விடும்படி செய்யவேண்டும். துருக்கி இவைகளில் ஒன்றும் செய்யாமல், கப்பல்களை டார்டனல்ஸ ஜலஸந்தியிலேயே யிருக்கும்படி விட்டுவிட்டிருந்தது. பிறகு கொஞ்ச காலத்துக்கெல்லாம், துருக்கி கவான்மெண்டார் தாங்கள் இந்த இரண்டு கப்பல்களையும் விலைக்கு வாங்கிவிட்டதாகச் சொன்னதோடு, ஜெர்மன் கப்பல் வேலையாட்களை கப்பலிலேயே இருக்கவிட்டு துருக்கிக் கப்பல் படையின் தலைவராயிருந்த ப்ரிட்டிஷ் அட்மிரலை அந்த உத்யோகத்திலிருந்து நீக்கிவிட்டு, டார்டனல்ஸ் ஜலஸந்தியில் 'மைன்ஸ்' என்னும் வெடி குண்டுகளை போட்டு விட்டார்கள்.

அந்த ஜலஸந்தியிலிருந்த ப்ரிட்டிஷ் கப்பல்களையும், ப்ளாக்ஸீயிலிருந்து அதன் வழியாக வெளியே போக வந்துகொண்டிருந்த ப்ரிட்டிஷ் கப்பல்களையும் துருக்கி கவர்ன்மெண்டார் பிடித்துக்கொண்டார்கள். முதலில் துருக்கி கவர்ன்மெண்டார் ஸைன்யங்களை ஒன்று சேர்க்கப்போவதால் அவைகளுக்காக அந்தக் கப்பல்களிலுள்ள சரக்குகள் தங்களுக்கு வேண்டுமென்று அவைகளை நிறுத்தினதாகவும், பிறகு, டார்டனல்ஸில் மைன்ஸ் என்னும் வெடிகுண்டுகள் இருப்பதால் கப்பல்கள் போக முடியாதென்று அவைகளை நிறுத்தினதாகவும் ஸமாதானம் சொன்னார்கள்.

துருக்கி கவர்ன்மெண்டார் இப்படிச் செய்தது ந்யாயத்துக்கு விரோதமானது. இதனால் வ்யாபாரிகளுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்படுவதோடு, ப்ளாக்ஸீயில் இருந்த 60,70 வ்யாபாரக் கப்பல்கள் வெளியே மத்யதரைக் கடலுக்குப் போகாமல் தடுக்கப்பட்டுப் போயின.

மேலும் துருக்கி கவர்ன்மெண்டார் டார்டனல்ஸ் ஜலஸந்தியை மூடினது அதாவது கப்பல்கள்போக முடியாதபடி தடுத்தது பரஸ்பரதேச உடன்படிக்கைகளுக்கு விரோதமானது. இவைகளோடுகூட பாக்டாடிலும், மெஸ்பொடேமியாவிலுமுள்ள துருக்கிய உத்யோகஸ்தர்கள் அங்குள்ள ப்ரிட்டிஷ் ஜனங்களை சரியாய் நடத்திவராமலிருந்ததோடு, துருக்கிய உத்யோகஸ்தர்கள் ஜனங்களுக்கு இங்கிலண்டின்மேலும் அதனிடம் ஸ்னேகமாயுள்ள தேசங்களின்மேலும் த்வேஷமுண்டாகும்படி தூண்டி வந்திருக்கிறார்கள். இவ்வளவு செய்துங்கூட ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார், 'கோபன்,' 'ப்ரஸ்லா' என்னும் கப்பல்

களில் ஜெர்மன் ஆபிஸர்களுக்கும் வேலையாட்களுக்கும் பதிலாக துருக்கிய ஜனங்களை நியமித்து, ப்ரிட்டிஷ் வ்யாபாரக் கப்பல்களின் போக்குவரத்தைத் தடைசெய்யாமலிருந்து, யுத்தத்தில் சேராத தேசங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடமைகளை துருக்கி செய்துவந்தால், இது வரையில் செய்துவந்த அக்ரமங்களை கவனிக்காமல் விட்டுவிட்டு, துருக்கியின் ஸ்வாதீனத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதாயும் துருக்கி ராஜ்யத்தின் எந்த பாகத்தையும் அது இழக்காமல் பார்த்துக் கொள்வதாயும் எழுத்து மூலமாய் வாக்களிப்பதாகச் சொன்னார்கள். மேலும் யுத்தம் முடிந்தபிறகுங்கூட துருக்கியின் ஸ்வாதீனத்துக்கும், ஒற்றுமைக்கும் கெடுதலாக இருக்கக்கூடிய எந்த நிபந்தனையும் அதற்கு ஏற்படாமலிருக்கவும், அதன் பொருளாதார நிலைமை அதற்கு ஸாதகமா யிருக்கும்படிக்கும் பார்த்துக்கொள்வதாகவும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வாக்களித்தார்கள்.

இவ்வளவு தூரம் வாக்களித்துங்கூட துருக்கி கவர்ன்மெண்டார் சண்டையுண்டாக்கக்கூடிய விதமாகவே நடந்துவந்தார்கள். இவைகளே யல்லாமல் துருக்கியில் வேறு சில கார்யங்களும் நடந்திருக்கின்றன. ஸிரியாவில் ராணுவ வேலைகள் நடந்துகொண்டிருந்தன. இவைகள் ஈஜிப்ட் தேசத்தை எதிர்ப்பதற்காகவே செய்யப்பட்டு வரவேண்டுமென்று தோன்றுகிறது. மெஸ்பொடேமியா ஆர்மிகோர் என்னும் ஸைன்யப் பிரிவிலிருந்தும் மோஸுல் ஆர்மிகோர் என்னும் ஸைன்யப் பிரிவிலிருந்தும் துருப்புகள் தெற்கே அனுப்பப்பட்டு வந்தன. இவைகள் ஈஜீப்டையும், ஸூயஸ் கால்வாயையும் படையெடுப்பதற்கு வேண்டியிருக்குமென்று அனுப்பப்பட்டவையாகும். இதற்கு உதவியாக அராபியர்களை வரவழைத்து அவர்களுக்குத் துப்பாக்கி முதலியவைகள் கொடுத்து அவர்களை யுத்தத்துக்குத் தயார்செய்தும் வைத்திருக்கிறார்கள். அகாபா வளைகுடாவில் ப்ரிட்டிஷ் கப்பல்கள் வராமல் தடுப்பதற்காக சுரங்கங்களும் அனுப்பப் பட்டிருக்கின்றன. ஷேக் அஸீஸ் ஷாவிஷ் என்னும் மகமதியர் ஜனங்களை இங்க்லண்டோடு யுத்தம் செய்யும்படி தூண்டுவதற்காக அநேக துண்டுப் பத்ரிகைகள் அச்சிட்டு ஸிரியாவிலுள்ள ஜனங்களுக்கு அனுப்பியிருக்கிறார். இந்தியாவிலும் ஈஜிப்டிலும் மகமதியர்களிடம் ராஜத்வேஷம் உண்டாக்குவதற்காக அநேக துருக்கியர்கள் போயிருக்கிறார்களென்றும் ஸமாசாரம் எட்டி யிருக்கிறது. மேலும் ஸைன்யத்தையும் கப்பல் படையையும் சேர்ந்த அநேக ஜெர்மன் ஆபிஸர்களும், ஸோல்ஜர்களும் கான்ஸ்டான்டிநோபிளுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் யுத்தத்துக்கு வேண்டிய எல்லாவித ஸாமான்களையும் தங்களோடுகூடக் கொண்டுவந்திருக்கிறார்கள். இவர்களில் அநேகர் துருக்கியின் உள் நாட்டுபாகங்களில் போய் ஜனங்களுக்கு இங்க்லீஷ்காரர்களின் மேல் த்வேஷம் உண்டாகும்படி தூண்டி வந்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் துருக்கி கவர்ன்மெண்டின் அநுஸரணையில்லாமல் நடந்திருக்கமாட்டா.

மேலும் துருக்கியின் யுத்த மந்த்ரி இங்க்லண்டுக்கும் துருக்கிக்கும் யுத்தம் நடந்தால் இன்னின்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி ஜாப்பாவிலுள்ள சேனைத் தலைவருக்குக் கடிதங்களும் எழுதி யனுப்பியிருக்கிறாராம்.

மேற்சொன்ன காரணங்களால் இங்க்லண்ட் துருக்கியோடு யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

இந்தியாவிலுள்ள எல்லா மகமதிய அரசர்களும், ப்ரமுகர்களும் மற்ற ஜனங்களும், ஈஜிப்ட் வடஆப்ரிக்கா முதலிய வேறு இடங்களிலுள்ள அநேக மகமதியர்களும் துருக்கியின் செய்கைகள் ந்யாயமல்ல வென்றும், இது மத ஸம்பந்தமான சண்டை யல்ல வென்றும், ஆகையால் இங்க்லண்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள் இங்க்லண்டினிடம் ராஜ பக்தியோடிருக்க வேண்டுமென்றும் பத்ரிகைகளுக்கு எழுதியும், ஜனங்களுக்கு போதித்தும் வருகிறார்கள்.

# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Trained Teachers' Certificates.

போதனாமுறை பயின்ற உபாத்யாயர்களின் ஸர்ட்டிபிகேட்டுகள்.—மதராஸ் எடுகேஷனல் ரூல்களில் பின்வரும் ரூல் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

போதனாமுறையில் கீழ்தர க்ரேட் ஸர்ட்டிபிகேட் வாங்கியிருக்கும் ஒரு உபாத்யாயர் பெரிய ஸ்கூல் பரீக்ஷைகள் அல்லது யூனிவர்ஸிட்டி பரீக்ஷைகளில் தேறினால் மறுபடியும் அந்தப் பெரிய பரீக்ஷைகளுக்கு ஒத்த க்ரேடுக்காக ப்ரத்யேகமாக ட்ரெயினிங் ஆகாமலே தாம் தேறிய பெரிய பரீக்ஷைக்கு ஏற்ற க்ரேடுக்கு ஸர்ட்டிபிகேட் வாங்கிக்கொள்ளலாம். ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் இன்ன உபாத்யாயருக்கு அவ்விதம் ஸர்ட்டிபிகேட் கொடுக்கலாமென்று சிபார்சு செய்யவேண்டும். அந்த சிபார்சின்மேல் ட்ரெய்னிங் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் உயர்தர ஸர்ட்டிபிகேட் கொடுக்கலாம். ஆனால் எப். ஏ. ட்ரெய்னிங் ஆன உபாத்யாயர் பி. ஏ. பரீக்ஷையில் தேறினால் எல். டி-க்காக ட்ரெய்னிங் ஆகாமல் ஸர்ட்டிபிகேட் வாங்கிக்கொள்ள முடியாது.

### Coimbatore Agricultural College.

கோயம்புத்தூர் விவஸாயக் காலேஜ்.—கோயம்புத்தூர் விவஸாயக் காலேஜில் பாடக்ரமங்களில் சில குறைகள் இருக்கின்றனவென்பதை உத்தேசித்து விவஸாய டிரெக்டர் அவைகளை மாற்றுவதற்காக சில ப்ரேரணைகள் செய்து சில மாஸங்களுக்குமுன் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினார். கவர்ன்மெண்டார் அவைகளை விவஸாய போர்டுக்கு அனுப்பி, அதன் ஸம்மதத்தின்மேல் அவைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். முன்னிருந்த ஏற்பாட்டில் மாணவர்களுக்கு விவஸாய வேலையில் பழக்க மேற்படுவதற்குமுன் விவஸாய சாஸ்த்ரம் கற்பித்து வந்தார்கள். இந்த ஏற்பாடானது மாணவர்களுக்கு ஏற்றதாயில்லை. அவர்களுக்கு ஏற்கனவே போதுமான அளவு கல்வியில்லாததால் அவர்கள் சாஸ்த்ர பாடங்களில் தேர்ச்சியடைவது கஷ்டமாயிருந்தது.

இப்போது அந்தக்காலேஜில் இரண்டு ப்ரத்யேகமான வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முதல் வகுப்பு இரண்டு வர்ஷகாலம் நடக்கும். இந்த வகுப்பில் மாணவர்களுக்கு அனுபவரீதியாக விவஸாயம் கற்றுக்கொடுப்பார்கள். இரண்டாவது வகுப்பில் மாணவர்கள் 1½ வர்ஷம் வாசிக்க வேண்டும். இதில் மாணவர்களுக்கு விவஸாய ஸம்பந்தமான சாஸ்த்ரங்கள் கற்றுக்கொடுக்கப்படும்.

முதல் வகுப்பில் சேர ப்ரியப்படுகிறவர்கள் ஒரு பரீக்ஷையும் தேறியிருக்க வேண்டியது கட்டாயமல்ல. கற்பிக்கும் பாடங்களைக் கேட்டறிந்துகொள்ளப்போதுமான அளவு இங்க்லீஷ் தெரிந்திருந்தால் போதும். இரண்டாவது வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்கள் முதல் வகுப்பில் சேர்ந்து படித்துத்தேறியிருக்க வேண்டியதோடு, அதிகாரிகள் குறிப்பிடும் ஒரு பரீக்ஷையில் தேறினவர்களாயிருக்க வேண்டும். ப்ரத்யேகமான ஸந்தர்ப்பங்களில் அப்படிக்குறிப்பிட்ட பரீக்ஷையில் தேறாத மாணவர்களை, காலேஜிலுள்ள போதகர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் ஸம்மதித்தால், இரண்டாவது வகுப்பில் சேர்த்துக்கொள்ளுவார்கள்.

இந்த சீர்திருத்தத்தின் நோக்கமென்னவென்றால்,

(1) காலேஜில் படித்துவிட்டுப் பிறகு தங்களுடைய ஸொந்தநிலங்களின் ஸாகுபடியை கவனிக்க விரும்புகிறவர்களுக்கு அந்த நோக்கத்துக்கு ஏற்றதாயும் போதுமானதாயும ஸாதாரண விவஸாயக் கல்விகற்பிப்பது; விவஸாய டிபார்ட்மெண்டில் அதிக சாஸ்த்ர அறிவு வேண்டியிராத கீழ்த்தர உத்யோகங்களில் சேரவிரும்புகிறவர்களுக்கு விவஸாயக்கல்வி கற்பிப்பது.

(2) விவஸாயக்கல்வியை அதிகமாகப் பரவச்செய்ய வேண்டுமென்றுஜனங்கள் சொல்லுவதற்கேற்ப அதிக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது. முதல் வகுப்பில் வர்ஷந்தோறும 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இரண்டாவது வகுப்பில் வர்ஷந்தோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

# TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### The War & Tamil Journalism.

யுத்தமும் தமிழ்ப் பத்ரிகைகளும்.—யுத்தத்தால் தமிழ்ப் பத்ரிகைகளுக்கு நல்ல காலம் ஏற்பட்டிருக்கிறதென்று தோன்றுகிறது. இந்துநேசன் என்னும் வாரமிருமுறைப் பத்ரிகை தினசரியாக மாறியிருக்கிறது. வைசியமித்திரன் வாரமிருமுறையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவேயுள்ள சுதேசமித்திரன், சுதேச பரிபாலினியென்ற இரண்டு தினசரிகளோடு புதிதாக இந்தியன், இன்றைய சமாச்சாரம், பிரசங்கநேசன் என்னும் தினசரிப் பத்ரிகைகள், வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தியாவில் இப்பொழுது 6 தமிழ் தினசரி பத்ரிகைகள் வெளியாகி வருகின்றன. யுத்தத்திற்குப்பிறகு இவைகளில் எத்தனை நிலைத்து நிற்குமோ தெரியவேண்டும்.

### Murahari.

முராஹரி.—இது ஒரு துப்பறியும் தமிழ் நாவல். இது 'ஸ்வதேச நண்பன்' என்று புனைவு பெயர்கொண்ட ஒரு ஆசிரியரால் எழுதப்பட்டதாகும். இதன் நடை ஸுலபமாயிருக்கிறது. அன்யபாஷை வார்த்தைகளைத் தமிழில் எழுதும்போது அந்த வார்த்தைகளுக்கு அந்தபாஷைகளில் என்ன சப்தமோ, அந்த சப்தமே தமிழிலும் இருக்கும்படி நமது பத்ரிகையில் வார்த்தைகளை எழுதிவருகிறோம். இந்தமுறையை இந்த நாவலிலும் உபயோகித்துவருவது மிகவும் ச்லாகிக்கத்தக்கது.

இந்த நாவல் வாசிக்க நன்றாயிருக்கிறது. தீமை செய்ய எண்ணுபவர்கள் கடைசியில் கெடுதலடைவார்களென்பதும், நன்மைசெய்பவர்கள் நடுவில் என்ன கஷ்டங்கள் அனுபவித்தாலும் கடைசியில் க்ஷேமம் அடைவார்களென்பதும் இந்த நாவல்தெரிவிக்கும் முக்ய நீதிகளாகும். இதன் விலை அணா 5. வேண்டுவோர் வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பி கே. ஸ்ரீனிவாஸாசாரியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### A Garland of Instructive Stories.

நீதிகதா தாமம்.—நீதிக்கதைகள் அடங்கிய இந்தப் புஸ்தகம் விளாச்சேரி எ. எ. எம். ஸபயன்கள் பாடசாலை ஹெட் மாஸ்டராகிய ஸாமுவேல் ஜி. தாமஸால் இயற்றப்பட்டது. இதில் அநேக நீதிக்கதைகள் அடங்கியிருக்கின்றன. நீதிக்கதைகளுக்கு முன்னால் நீதி விஷயங்களைத் தெளிவாய்க்கூறும் வ்யாஸங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. நீதிவாக்யங்களும் கதைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகத்தின் கடைசியில் ஜார்ஜ் V., ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், ரபீந்த்ரநாத் டாகூர் முதலிய 5 பேர்களுடைய ஜீவ்ய சரித்ரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இது சிறுவர்கள் வாசிக்கத்தகுந்த புஸ்தகமாகும். இதன் விலை அணா 6. வேண்டுவோர் எஸ். ஜி. தாமஸ், ஹெட் மாஸ்டர் எ. எ. எம் பாய்ஸ் ஸ்கூல், விளாச்சேரி, ஸெண்ட் தாமஸ் மௌண்ட் என்று எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

### The War in Europe.

ஐரோப்பிய யுத்தம்.—இது, இப்போது ஐரோப்பாவில் நடந்துகொண்டிருக்கிற யுத்தத்தின் வரலாறு, அதில் தலையிட்டிருக்கிற தேசங்களின் விவரங்கள், அவற்றின் தரைப்படை கடற்படை ஆகாயப்படை இவைகளின் அமைப்பு, பலம், தேசத்தலைவர்களது ஜீவ்ய சரித்ரக்குறிப்புகள், யுத்தத்திற்காக இந்திய அரசர்களும் மகாஜனங்களும் செய்துள்ள உதவிகள் யுத்தகளத்தில் நடந்த அதிசயமான ஸம்பவங்கள் முதலிய பற்பல விஷயங்கள் ஸவிஸ்தாரமாக இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்ற ஓர் அருமையான புஸ்தகமாகும்.

இப்புஸ்தகத்தில் தற்காலம் யுத்தத்தில் ஸம்பந்தப்பட்டுள்ள தேசங்களின் அதிபதிகள் முக்ய உத்யோகஸ்தர்களுடைய உருவப் படங்களும் ராணுவ உத்யோகஸ்தர்களுடைய உருவப் படங்களும் மிக நேர்த்தியான காகிதத்தில் மிக அழகாக அச்சிடப் பட்டுச் சேர்க்கப்பட்டிருக்கும். இப்படங்கள் கண்களுக்கும் மனதிற்கும் களிப்பை ஊட்டுவதுடன் பலவகை அறிவையும் வளர்க்கும்.

இது நவம்பர் மாஸக் கடைசியில் வெளி வரும். இதன் விலை ரூபா. 1—0—0.

"ஜனோபிமானி" சந்தாதார்களுக்கு மாத்ரம் அணா 8-க்கு கொடுக்கப்படும்.

வேண்டுவோர், ஜி. எ. வைதயராமன் அண்ட் கம்பெனி, 3,4, சுங்குராம செட்டித் தெரு, சென்னை, என்று எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

## SCIENCE AND INVENTION.
## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

**Telectrograph.**

தந்திக்கம்பி மூலமாய் படமனுப்புதல்.—தற்கா
லம் தந்திக்கம்பி மூலமாய்த் தந்தி ஸமாசார மனுப்பு
வதும்,பேசுவதும் ஸகஜமாயிருக்கின்றன. இப்போது
இங்கிலீஷ்காரர் ஒருவர் தந்திக்கம்பி மூலமாய் 800
மைல் தூரம் வரையில் படங்கள் அனுப்புவதற்கு ஒரு
புதுமுறை கண்டுபிடித்திருக்கிறாராம்.

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஒரு மணி
நேரத்துக்குள் படங்களை அனுப்பி விடலாமாம்.
இந்த முறையின்படி படங்கள் அனுப்புந் தொழில்
நடத்துவதற்கு ஒரு கம்பெனி ஏற்படுத்தப்பட்டிருக்
கிறது. அந்தக் கம்பெனியார் பாரிஸ், லண்டன்,
லிவர்பூல், க்ளாஸ்கோ முதலிய விடங்களில் படங்கள்
ஸப்ளை செய்வதற்காக போடோ தந்தி ஸ்டேஷன்
கள் சீக்ரம் ஸ்தாபிக்கப்போகிறார்களாம்.

**Animals that Never Drink.**

ஜலமே குடிக்காத ம்ருகங்கள்.—சில ம்ருகங்கள்
ஜலங்குடிப்பதே கிடையாதென்று சிலர் சொல்லி வரு
கிறார்கள். இந்த குணமுள்ள ம்ருகங்களில் ஆடு ஒன்
றும். சில வர்ஷங்களுக்குமுன்னால் அமெரிக்காவி
லுள்ள ஒரு ஊரில் ஒரு விவஸாயிக்கு பெரிய ஆட்டு
மந்தை இருந்தது. அவர் தமது ஆடுகளை புல் வளர்ந்
துள்ள எழெட்டு எகர் விஸ்தீரணமுள்ளதும், சுற்றி
லும் வேலி போட்டுள்ளதுமான வயல்களில் அடை
த்துவிடுவது வழக்கமாம். ஒருஸமயம் கோடைகாலத்
தில் ஆடுகளை இப்படிப்பட்ட வயலொன்றில் சில
வாரங்கள் மறித்து வைத்திருந்தாராம். இந்த வயலி
லாவது அல்லது வயலோரமாகவாவது குளம் குட்டை
யாவது, கால்வாயாவது, அல்லது ஜலம்தேங்கி நிற்
கக்கூடிய பள்ளமாவது ஒன்றும் இருக்கவில்லையாம்.
ஆடுகளும் வெளியில்போக வழிகிடையாது. அவை
கள் அந்தக் காலத்துக்குப் பிறகு யாதொரு நோய்
நொடியில்லாம விருந்ததோடு கொழுப்படைந்தும்
இருந்தனவாம். இதற்குக் காரணம் காலை நேரங்களில்
புல்லில் பனித்துளியிருப்பதால், அதைத் தின்னும்
ஆடுகளுக்குப் போதுமான ஜலம்கிடைத்து விடுகிற
தென்று சொல்லப்படுகிறது.

ஆட்டைப்போலவே 'ஆண்டிலப்' என்னும் கருப்பு
மானும், அரேபியா, வட ஆப்ரிக்கா, பாராவீகம் முத
லிய இடங்களிலுள்ள காஸல் என்று சொல்லப்படும்
ஒரு விதமானும் ஜலம் குடிப்பதே யில்லையென்று
சொல்லப்படுகிறது.

**German Guns and Nitric Acid.**

ஜெர்மன் பீரங்கிகளும் அக்னி த்ராவகமும்.—பீர
ங்கிகளுக்கும, வெடிகுண்டுகளுக்கும் வேண்டிய மருந்
துகள் முக்யமாய் நைட்ரிக் ஆஸிட் என்னும் அக்னி
த்ராவகத்திலிருந்துதான் செய்யப்படுகின்றன. இந்த
த்ராவகம இல்லாவிட்டால் வெடிகுண்டு செய்வது
முடியாது. இந்த த்ராவகம் செய்வதற்கு இரண்டு
வழிகள் இருக்கின்றன. நைட்ரேட் என்று சொல்லப்
படும் சில உப்புக்கள் இருககின்றன. இந்த உப்பு
களில் பொட்டுலுப்பு ஒன்று, இவைகளிலிருந்து
நைட்ரிக் ஆஸிட் செய்யலாம். இந்த நைட்ரேட் என
னும் உப்புக்கள் பெரும்பாலும் தென்னமெரிக்காவி
லுள்ள சில்லியென்னும் தேசத்திலிருந்து ஐரோப்பிய
தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

இன்னொருமுறை என்னவென்றால், ஆகாயத்தி
லுள்ள நைட்ரொஜின் என்னும் வாயுவை மின்ஸார
சக்தியால் நைட்ரேட்டாக மாற்றி அதிலிருந்து
நைட்ரிக ஆஸிட்செய்தல். இப்போது ப்ரிட்டிஷ் யுத
தக் கப்பல்கள் ஜெர்மனிக்கு வரும் வ்யாபாரக் கப்பல்
களைத்தடுத்து அவைகளை இங்கிலண்டுக்குக் கொண்டு
போய் விடுகின்றன. இந்தக் கப்பல்களில சிலவற்றில்
மேற்சொன்ன நைட்ரேட் என்னும் உப்புகள் ஏற்றி
யிருந்தனவாம். இந்தச் சரக்கு இனி ஜெர்மனிக்குப்
போகாமல் தடுக்கப்படுவதால் ஜெர்மனியில கையிருப்
பாயுள்ள நைட்ரேட்டுகளையும, வெடிமருந்துகளை
யுந் தவிர அதிகப்படியாக வேண்டியிருந்தால் ஜெர்
மனிக்கு நைட்ரேட்டுகள் கிடைக்காமல் கஷ்டம் நேரி
டக்கூடுமாம. ஆகாயத்திலுள்ள நைட்ரொஜினைக்
கொண்டு நைட்ரேட்டுகள் தயார்செய்ய முடியுமென்
றாலும், ஜெர்மனியில் வெடி மருந்துகளும் பீரங்கி
களும தயார்செய்யும் க்ரப் கமபெனியார்களுக்கு இந்த
முறை தெரிந்திருக்குமென்பது ஸந்தேகமாம். ஜெர்
மனியில் கையிருப்பாக வெடி மருந்துகளும், நைட்
ரேட்டுகளும் ஏராளமாயிருக்கக் கூடுமெனறாலும, யுத்
தம் வெகுகாலம் நடந்துவந்தால் அவர்கள் வெடிமருந்
துக்குத திண்டாடவேணடி யிருக்குமென்று சொல
லப்படுகிறது.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Dangers of Exposed Fruit.

திறந்து வெளியே வைத்திருக்கும் பழங்களைத் தின்பதால் உண்டாகும் தீமை.—காற்று அசி முதலியவைகள் படும்படியாக பழங்களைத்திறந்து கடைகளில் வைத்திருப்பதால் அநேக கெடுதிகள் உண்டாகின்றனவாம். இதுவிஷயமாய் ஒரு சாஸ்திரி ஆராய்ச்சி செய்து பார்த்ததில் வெளியே திறந்து வைததிருந்த த்ராட்சக் குலையில் ஒரு பழத்தின்மேல் 30 லக்ஷம் பாக்டீரியாக்களும் மூடி வைத்திருந்த பழத்தின்மேல் 7 லட்சத்து எண்பதினாயிரம் பாக்டீரியாக்களுமிருந்தனவென்று தெரிய வந்ததாம்.

### Cholera.

காலரா.—ஒருவருக்குக் காலரா கண்டு, வைத்யர் வருவதற்கு நேரமாகுமானால் க்ளோரோடைன் மருந்தை முழுடோஸ் அளவில சாப்பிடவேண்டும். கடுகை அரைத்து அடிவயிற்றில் பற்றுப்போட வேண்டும். காய்நத கடுகையாவது சுக்கையாவது பொடி செய்து அதைக்கொண்டு காலரா கண்டவருடைய கை கால்களில் நன்றாய்த் தேய்க்கவேண்டும். நோயாளிக்குக் குடிப்பதற்கு ஜலம் கொடுக்கக்கூடாது. ஆனால் பனிக்கட்டியை அவருடைய வாயில வேண்டும்போது சிறிது நேரம் வைக்கலாம். காலரா கண்ட வீட்டிலுள்ள மற்றவர்கள் தடவைக்கு ஒரு வைன்க்ளாஸ் சுத்த ஜலத்தில் கந்தக த்ராவகமாவது (Sulphuric acid), ஹைட்ரோ க்ளோரிக் ஆஸிடாவது (Hydrochloric acid) பத்து துளிகள் வீதம் விட்டு தினம் மூன்று தடவை உள்ளுக்கு சாப்பிடவேண்டும். இப்படி த்ராவகங்கள் சாப்பிடுவது வ்யாதி வராமல் தடுப்பதற்கேற்ற நல்ல முறைபாகும். காலரா க்ருமிகள் புளிப்பான ஆகாரத்தில் ஜீவித்திருக்க மாட்டா. ஆதலால் காலராக் காலத்தில் எலுமிச்சம்பழ ரஸம் ரொம்ப ஜாஸ்தியாக உள்ளுக்கு சாப்பிடுவது மிகவும் நல்லது.

### Coffee for Asthma.

ச்வாஸகாசத்துக்கு காப்பி பரிஹாரமாம்.—ச்வாஸகாசத்தால கஷ்டப்படுகிறவர்கள் காப்பி குடித்தால்காசம் நிற்குமென்று சொல்லப்படுகிறது. காப்பியை ஜலத்தில் அதிகமாகப்போட்டு கெட்டி டிகாக்ஷனை (ஸ்ட்ராங் காப்பி) குடிக்கவேண்டும். கெட்டியாயில்லாத காப்பி அதாவது அதிகம் ஜலத்தில் கொஞ்சமாகக் காப்பிப்பொடி போட்டுத் தயார் செய்த டிகாக்ஷன் ரொம்பகெடுதி யுண்டாக்கும். ஒரு தடவைக்கு ஒரு ஔன்ஸ் அதாவது இரண்டு ஸ்பூன் நிறைய சாப்பிட்டால் போதும். அதிகமாகக் குடிப்பது கெடுதல். காப்பியில் சர்க்கரையாவது பாலாவது சேர்க்கக் கூடாது.குடிக்கும்போது வயிற்றில் ஒன்றுமிருக்கக் கூடாது. எவ்வளவு சூடாகக் குடிக்கக்கூடுமோ அவ்வளவுசூட்டில் ஸ்பூனால் எடுத்துச் சிப்பிக்குடிக்கவேண்டும். வயிறு நிறையச சாப்பிட்டுப் பிறகு இதைக் குடித்தால் உணவு ஜீர்ணமாவது தடைபடும். மத்யானம் சாப்பாட்டின்போது காப்பி குடித்தால் சிலருக்கு ச்வாஸகாசம் உண்டாகிறதாம்.

### Drinking Water.

ஜலம் குடித்தல்.—தேகத்தில் ரத்தம் சரிவர ஓடிக்கொண்டிருக்கவும், கெட்ட பொருள்கள் மூத்ரரூபமாயும் வியர்வை ரூபமாயும் வெளிப் போகவும் தேகத்தில் ஜலம் அதிகமாயிருக்க வேண்டும். ஜலம் குறைவுபட்டால் அந்தக் குறையை சரிப்படுததுவதற்கு ரொம்ப மேலான வழி சுத்த ஜலம் அதிகமாகக் குடிப்பதே. சுத்த ஜலம அதிகமாகக் குடிப்பதால் அது உணவுப் பொருள்களைக் கரைத்து தேகததில் பற்பல பாகஙகளுக்குக் கொண்டு போகிறது. மேலும், தேகத்திலுளள கழிவுப் பொருள்களைக் கரைத்து மூத்ரரூபமாயும், வியர்வை ரூபமாயும வெளிப்படுத்துகிறது. காலையில் தூங்கி யெழுந்ததும் ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலமாவது, வெந்நீராவது குடிப்பதும், பகலில் சாப்பிட ஒரு மணி நேரத்துக்கு முன்னும், இரவில் படுததுக் கொள்ளப் போகு முன்னும் முன் சொன்னபடியே குடிப்பதும் ரொம்ப நன்மையைப்பயக்கக்கூடியவை. இப்படி வர்ஷம் முழுவதும் எநதக் காலத்திலும் குடித்துவரலாம். கோடைகாலததில் வியர்வை உண்டாவதைத் தடுப்பது ரொம்பக் கெடுதல். உஷ்ண ப்ரதேசங்களில உள்ளவர்களுக்கு வியர்வை உண்டாகாவிட்டால் ஸன்ஸ்ட்ரோக் அதாவது ஸூர்ய இடி உண்டாகும். இவர்கள் வியர்வையை க்ரஹிக்கக்கூடிய உடுப்புகளை உடுததிக் கொண்டு, அவைகளை அடிக்கடி மாற்றவேணடும், க்ரமமாக ஸ்நானம்செய்து வரவேண்டும. இப்படிச செய்து வந்தால் உஷ்ணத்தின கொடுமை அதிகமாயிராது.

# LAW.
## சட்டம்.

**Promissory Note.**

ப்ராமிஸரி நோட்டு.—மைனர் பேருக்கு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுப்பது சட்டப்படி செல்லும். பி - என்பவர் ஸி - என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டால், ஸி-க்கு 500 ரூபாய கொடுப்பதாக எ- என்பவர் பி-க்கு வாக்களித்தார். பி - என்பவர் ஸி - என்பவளைக் கல்யாணம் செய்துகொண்டார். அதன் மேல் எ - என்பவர் ஸி-யின் பேருக்கு 500 ரூபாய்க்கு ஒரு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத தார். பி - என்பவர் ஸி-யைக் கல்யாணம் செய்து கொண்டது ப்ராமிஸரி நோட்டுக்குத்தகுந்த ப்ரதி ப்ரயோசனமாகாது. ஆகையால் ப்ராமிஸரி நோட்டு சட்டப்படி செல்லாது.

**Signing Letters.**

கடிதங்களில் கையெழுத்திடுவது. — இரண்டு நாட்டுக்கோட்டைச செட்டிக் குடும்பததிலுள்ள புருஷர்கள் சேர்ந்து நடத்திவந்த ஒரு கடையில் வாதி 1904-ம் வர்ஷம் முதல் 1908-ம் வர்ஷம் வரையில் பற்று வரவு வைத்துவநதார். அந்தப் பற்றுவரவுகளால் அந்தக் கடைக்காரர்கள் வாதிக்கு இருபத்து நாலாயிரத்துச் சொச்சம் ரூபாய் கொடுக்கவேண்டியதாக ஏற்பட்டது. வாதி 1910-ம் வர்ஷத்தில் அந்தத் தொகைக்காக பராதுபோட்டார். ஸாதாரண நடவடிக்கையில் அந்த வ்யாஜ்யம் காலாவதியாகியிருக்கும். ஆனால் வாதியானவா இரண்டு குடும்பஙகளில் ஒன்றின் தலைவராகிய முதல் ப்ரதிவாதியும், இரண்டாவது குடும்பத்தின் தலைவராகிய 6-வது ப்ரதிவாதியும் 1907-ம் வர்ஷததில், கடன் கொடுக்கவேண்டியதுண்டென்று கடிதம் எழுதினார்களென்றும், அப்படியெழுதினது கடனை ஒப்புக்கொண்டதாகு மென்றும், ஆகையால் காலாவதி ஏற்படவில்லை யென்றும் வாதித்தார்.

முதல் ப்ரதிவாதியின் கடிதத்தில ஆரம்பத்தில் "சிதம்பரம் எழுதிய கடிதம்"என்றும் கடைசியில்"இப்படிக்கு முருகர்துணை" யென்றுய எழுதப்பட்டிருந்தது. 6-வது ப்ரதிவாதியின் கடிதத்திலும் முதலில் முன்சொன்ன மாதிரியே ஆரமபித்துக் கடைசியில "இப்படிக்கு அண்ணாமலையார் துணை"யென்று முடித்திருந்தது. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தங்களுடையஸொந்தக் கடிதங்களில் தங்கள்பெயரைக் கையெழுத்தாக இடுவதில்லையென்றும், அவர்கள் தங்களுடையகுடும்ப தெய்வத்தின் பெயரையே கடைசியில் கையெழுத்தாக இடுவது வழக்கமென்றும் வ்யாஜ்யத்தில் ருசுவாயிற்று. இந்த வயாஜ்யத்தை விசாரித்த ராமநாதபுரம் ஸப் ஜட்ஜ் இந்தக் கடிதஙகளால் ப்ரதிவாதிகள்கடன் கொடுக்கவேண்டியது உண்டென்று ஒப்புக்கொண்டதாகுமென்று சொல்லி வாதிக்குத் தீர்ப்புக்கொடுத்தார்.

அதன் மேல் முதல் ப்ரதிவாதியின் குடும்பத்தார் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். முதல் ப்ரதிவாதி எழுதின கடிதம் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி கையெழுத்திடப்படவில்லையென்றும், ஆகையால் கடனை ஒப்புக்கொண்டதாகமாட்டாதென்றும், அந்தக்கடிதத்தின்படி முதல் ப்ரதிவாதி கடன் கொடுக்கவேண்டியதுண்டென்று ஒப்புக்கொண்டதாகுமென்றால், முதல் ப்ரதிவாதி அப்படிப்பட்ட கடிதம் எழுதுவதற்கு அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மற்ற பாகஸ்தர்கள் உத்தரவு கொடுக்கவில்லையாதலால், அந்தக்கடன் மற்ற பாகஸ்தர்களைக் கட்டுப்படுத்தாதென்றும் முதல் ப்ரதிவாதி பக்கம் வாதிக்கப்பட்டது. வாதிபக்கம் பின்வருமாறு வாதிக்கப்பட்டது. கடிதத்தில், எழுதியவருடைய பெயர் இருந்தால் கடிதம் கடனுக்குத் தகுந்த ஆதாரமாகும். செட்டிமார்கள் முன்சொன்னவிதமே தங்கள் கடிதத்தில் கையெழுத்திடுவது வழக்கமென்று ருபிக்கப்பட்டிருக்கிறது. அப்படி கையெழுத்திடுவதில் எழுதியவருடைய பெயரில்லாவிட்டாலும், அது சட்டப்படி கையெழுத்திட்டதாகும். சட்டப்படி கையெழுத்திட்டதாகாதென்று தீர்ப்புசெய்தால் பின்னால் ரொம்ப ஆபத்துக்களுக்கிடமாகும். மேலும் முதல் ப்ரதிவாதி குடும்பத்தின் தலைவரானதால் குடும்பம் கொடுக்கவேண்டிய கடனை ஒப்புக்கொள்ளுவதற்கு அவருக்கு அதிகாரமுண்டு.—என்று வாதிக்கப்பட்டது. அப்பீலில் ஹைகோர்ட்டார் கடிதம் சட்டப்படி செல்லுமென்றும், கடன் முதல் ப்ரதிவாதியையே யல்லாமல்அவருடைய குடுமபத்தின் மற்ற பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்துமென்றும் தீர்ப்புச்செய்தார்கள்.

## PERSONAL NOTES.

### மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

**Mr. Bhupendranath Basu.**

மிஸ்டர் புபேந்தரநாத் பாஸு—கல்கத்தா வாஸியாகிய மிஸ்டர். புபேந்த்ரநாத் பாஸு இந்த வர்ஷத்துக் காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

**Sir John Wallis.**

ஸர் ஜான் வால்லிஸ்.—சென்னையில் சீப் ஜட்ஜாக இருந்த ஸர் ஆர்னல்ட் வொய்ட் பென்ஷன் வாங்கிக்கொண்டு தமது ஜன்மதேசத்துக்குப்போய் விட்டார். அவருக்குப்பதிலாக ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளில் ஒருவராகிய ஸர் ஜான் வால்லிஸ சீப் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**Sir Narayan Chandavarkar.**

ஸர் நாராயண சந்தவர்க்கர்.—சென்ற வர்ஷம் ஏப்ரல் மாஸம் முதல் இந்தூர் ஸமஸ்தானத்தின் ப்ரதம மந்த்ரியாக இருந்து வந்த ஸர் நாராயண சந்தவர்க்கர் தமது உத்யோகத்தை ராஜிநாமா செய்துவிட்டார். அந்த உத்யோகத்திலிருந்தபோது அவர் மாஸம் 5000 ரூபாய் சம்பளம் வாங்கிவந்தார். அவர் அதற்குமுன் பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்தார்.

**Lord Willingdon's Son.**

லார்ட் வில்லிங்டனுடைய புதல்வர்.—பம்பாய் கவர்னராகிய லார்ட் வில்லிங்டனுடைய புத்ரர் யுத்தத்தில் காயமடைந்து விட்டாரென்றும் அவரிருக்குமிடந் தெரியவில்லையென்றும் சென்ற மாஸம் தெரிவித்தோம். இப்போது அவர் ஜெர்மானியர்களால் கைது செய்யப்பட்டு காஸ்ஸல் என்னுமூருக்குப் பக்கத்திலுள்ள ஒரு ஹாஸ்பிடலில் இருக்கிறாரென்று ஸமாசாரம் எட்டியிருக்கிறது.

**General von Moltke.**

ஜெனரல் வான் மால்ட்கி.—ஜெர்மன் சக்ரவர்த்தி தமது ஸேனாதிபதியாகிய ஜெனரல் வான் மால்ட்கியிடம் அத்ருப்தி கொண்டிருப்பதாகவும், அவரை அந்த வேலையை விட்டு இன்னும நீக்கவில்லை யென்றாலும், அவருடைய அதிகாரங்களை ரொம்பவும் குறைத்து விட்டதாகவும், கெய்ஸர் தமக்கு ரொம்ப நம்பிக்கையுள்ள சில ஸோல்ஜர்களை சேர்த்து ஒரு ராணுவ ஸபை ஏற்படுத்தி அவர்களைக்கொண்டு ராணுவ கார்யங்களை நடத்தி வருவதாகவும் சொல்லப்படுகிறது.

**Sir Tarakanath Palit.**

ஸர் தாரகநாத் பலித்.—கல்கத்தாவில் ப்ரபல பாரிஸ்டராக இருந்த ஸர் தாரகநாத் பலித் ஸமீபத்தில் காலஞ்சென்றார். அவர் 1841-ம் வர்ஷம் ஜனனமானார். 1867-ம் வர்ஷம் அவர் இங்க்லண்டுக்குப் போய் பாரீஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துத் தேறி 1872-ம் வர்ஷம் இந்தியாவுக்கு வந்து பாரிஸ்டர் உத்யோகம் செய்து வந்தார். அவர் ரொம்ப ஸொத்துள்ளவர். தர்ம சிந்தனையும் ஜனங்களிடத்தில் அன்பும் பூண்டவர். அவர் சென்ற 1912-ம் வர்ஷம் கல்கத்தா யூனிவர்ஸிட்டிக்கு "சாஸ்த்ர காலேஜ் ஏற்படுத்துவதற்காக 15 லக்ஷம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தார். அவர் சில வர்ஷங்களாக ஹ்ருதயவ்யாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு இரண்டுபிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். மூத்தபுத்ரர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாயிருந்து இப்போது கல்கத்தா ஹைக்கோர்ட்டில் அட்வகேட் ஆக இருந்து வருகிறார்.

**Army Appointments for Indian Chiefs.**

இந்திய ராஜாக்களுந்த ராணுவ உத்யோகங்கள்.—பின்வரும் இந்திய ராஜாக்களுக்கு ராணுவத்தில் ஆனரரி அதாவது கௌரவ உத்யோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாடியாலா மகாராஜாவுக்கு லெப்டினண்ட் கர்னல் உத்யோகம்; இடார் மகாராஜாவுக்கு மேஜர் உத்யோகம்; பான்னு ஸமஸ்தானத்து ஹிராவஸிங ராஜகுமாரருக்கும், ஜோட்பூர்மகாராஜாவுக்கும் லெப்டினண்ட் உத்யோகம்.

கீழே சொல்லப்படும் கனவான்களுக்கு யுத்தம் நடக்கும் வரையில் சில ராணுவ உத்யோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஹைடரபாட் லான்ஸர்ஸ் என்னும் ஸைன்யத்தைச் சேர்ந்த ஷாமிர்ஸா பேயுக்கு காப்டன் உத்யோகமும் கூஜ்பேஹார் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த மஹாராஜ குமார் ஹிதேந்த்ர நாராயணருக்கும், அகால்காட்டு ராஜாவுக்கும், டிக்காரி ஸமஸ்தானத்து மஹாராஜ குமார நாராயணஸிங்குக்கும், ஸர்தார் ஜகேந்த்ரஸிங்குக்கும் லெப்டினண்ட் உத்யோகமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

# SOCIETY AND RELIGION.

## ஜனஸமூகமும் மதமும்.

**Social Reform.**

**ஜனஸமூக சீர்திருத்தம்.**—சென்னை 'ஹிந்து'ப் பத்ரிகையில் மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர் ஜனஸமூக சீர்திருத்தத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அதன் ஸாராம்சம் பின்வருமாறு.

ஆசாரசீர்திருத்தம் அல்லது ஜனஸமூக சீர்திருத்தமென்றால், ஸ்த்ரீகளுக்கு ஸ்வதந்த்ரங்கொடுத்தல், ஜாதிகளை ஒன்றுசேர்த்தல், தாழ்ந்தஜாதிகளை உயர்த்துதல், அன்யதேச ப்ரயாணம்முதலிய சீர்திருத்தங்கள் என்று பலர் எண்ணிவருகிறார்கள். ஆனால் அந்தப் பதத்தில் அடங்கியது இவை மட்டுமல்ல. ஏழை ஜனங்களையும், கல்வியற்ற ஜனங்களையும் பண்டைக்காலப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாயிருப்பதிலிருந்து விடுவித்து அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கான எந்தமுயற்சியும் ஜனஸமூக சீர்திருத்தத்தைச் சேர்ந்ததாகும்.

மேல் நாடுகளில் ஜனஸமூக முன்னேற்றத்துக்காக சட்டதிட்டங்கள் செய்ய அநேகர் முயற்சி செய்து வருகிறார்கள். அவைகளில் சில பின் வருமாறு. ஏழை ஜனங்களுக்கு உபகாரமாக இன்ஷூரென்ஸ் பண்டுகள் ஸ்தாபித்தல், வயஸானவர்களுக்கும், தேகத்தில் ஊனமுள்ளவர்களுக்கும் பென்ஷன்கள் கொடுத்தல், வேலைக்காரர்களை இத்தனை மணிநேரந்தான் வேலை வாங்கலாமென்றும் இவ்வளவு சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும் நிர்ணயித்தல், தாழ்ந்த ஜாதியிலுள்ள சிறுமாணவர்களுக்குப் பொதுச்செலவில் குடியிருக்க வீடுகொடுத்து சாப்பாடு போடுதல், பெரிய பட்டணங்களில் தாழ்ந்த ஜாதி ஜனங்களுக்கு குடியிருக்க ஸௌகர்யமான வீடுகள் கட்டிக்கொடுத்தல் முதலியவைகளாகும். தற்காலத்தில் ஐரோப்பாவில் அநேக ராஜதந்த்ரிகளும், பரோபகார சிந்தனையுள்ளவர்களும் ஜனஸமூகத்திலுள்ள பற்பலபிரிவுகளில் ஒன்றுக்கொன்றுள்ள ஏற்றத்தாழ்வை சரிப்படுத்தி ஒரே உயர்ந்தநிலைமைக்குக் கொண்டுவர ரொம்பவும் ப்ரயத்தனப் பட்டுக்கொண்டு வருகிறார்கள்.

இந்தியாவில் இப்படிப்பட்ட துறைகளில் முயற்சி செய்யவேண்டியது ரொம்பவும் அவச்யமானது. இப்போது நமது ஜனத்தலைவர்கள் விவஸாயிகள், தொழிலாளிகள் ஆகிய இவர்களினுடைய அறியாமையைப் போக்குவதைப்பற்றி ரொம்பவும் கவனம் செலுத்தி வருகிறார்கள். கவர்ன்மெண்டாரும் ஜனஸமூகக் கல்வியை ரொம்பவும் அபிவ்ருத்தி செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். கல்வியறிவில்லாத ஏழை ஜனங்கள் கவர்ன்மெண்டாரும், லோகல் போர்டுகளும் கல்வி விஷயமாய் செய்துகொடுக்கும் ஸௌகர்யங்களை அடைந்து அபிவ்ருத்தியடையும்படி, படித்து முன்னேற்ற மடைந்திருக்கும் இந்தியர்கள் அவர்களைத் தூண்டவேண்டியது அவச்யமாகும்.

நமது ஜனஸமூகத்தில் இன்னொருகுறை என்னவென்றால், கூலிவேலைசெய்து பிழைக்கும் ஜனங்களுக்குள் கள்குடிக்கும் வழக்கம் அதிகரித்து வருவதே. இந்தக்கெட்ட வழக்கத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கெட்டுப்போய்க் கொண்டிருக்கின்றன. படித்தவகுப்பார் இவர்களை முன்னுக்குக் கொண்டுவர இதுவரையில் ரொம்ப ப்ரயத்தனங்கள் ஒன்றும் செய்யவில்லை.

இந்தக்கெடுதியை நிவர்த்தி செய்வதோடு தாழ்ந்த ஜாதிகளை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரவும் முயற்சி செய்யவேண்டியது அவச்யம.

ஏழை ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பதோடு அவர்களுடைய ஸுகாதார நிலைமையையும் அபிவ்ருத்தி செய்யவேண்டும். அவர்களுக்கு தேகசுத்தம், நல்ல ஆகாரம், சுத்தமான ஜலம், சுத்தமான காற்று ஆகிய இவைகளால் உண்டாகும் நன்மைகளை எடுத்துச் சொல்லி, அவர்கள் நம்மைபார்த்துத் திருந்தும்படி நாமும் நடந்து காட்டவேண்டும்.

ஜனஸமூக அபிவ்ருத்தியில் கவனமுள்ளவர்கள் நமது தேசத்தின் பற்பல பாகங்களில் உள்ள ஜனங்களின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்வது மிகவும் நல்லது.

இப்படி ஜனங்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு படித்தவகுப்பார்கள் முன் வரவேண்டும். ஆனால் அவர்களுக்குப் போதுமான அவகாசம் கிடையாது. நிலஸ்வான்களுக்கும், வ்யாபார வகுப்பார்க்கும் போதுமான அவகாசம் இருக்கிறது. ஆனால் அவர்களுக்குப் போதுமான அறிவு கிடையாது. ஆகையால் படித்தவகுப்பாரும், அவகாசம் அதிகமுள்ள நிலஸ்வான்களும் வ்யாபார வகுப்பார்களும் ஒன்றுசேர்ந்து உழைத்தால் அதிக நன்மைகள் ஏற்படக்கூடும்.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

**A Bad Practice.**

ஒருகெட்ட வழக்கம்.—அநேகர் ஸ்டாம்புகளைக் கடிதங்களில் ஒட்டும்போதும், கவர்களின் (என்வலப்புகளின்) மடிப்புகளை யொட்டும்போதும் அவஸரத்தில் ஸ்டாம்புகளையும், கவர்களையும் நாக்கால் நக்கி நனைத்து ஒட்டிவிடுகிறார்கள். ஸ்டாம்புகளிலும், கவர்களிலும் உள்ள பசை கண்ட ஸாமான்களைப்போட்டுத் தயார் செய்த தாகையால் அப்படிச்செய்வது தேகஸுகத்துக்கு நல்லதல்லவென்று சொல்லப்படுகிறது. மேலும் அது சுசியுமல்ல.

**Bee and Wasp Stings.**

தேனீக்கள், குளவிகள் கொட்டினால்.—தேனீக்கள், குளவிகள் ஆகிய இவைகள் கொட்டினால் கொட்டினவர்கள் சில ஸமயம் மூர்ச்சைபோட்டுப் போவதுண்டு. ஹ்ருதயம் வேகமாய் அடித்துக்கொள்ளும். கொட்டின இடத்தைப் பிடித்துக் கெட்டியாய் பிதுக்கி கொட்டுவாயிலிருந்து விஷத்தை வெளிப்படுத்தவேண்டும். ஸ்பிரிட்ஸ் அப் வைன் (Spirits of Wine) சாராயத்தில் கொஞ்சம் எடுத்து கொட்டின இடத்தில் தடவி நன்றாய்த் தேய்க்கவேண்டும். தேய்க்கும்போது கொட்டுவாயை மறுபடியும பிதுக்கி உள்ளிருக்கக்கூடிய விஷத்தை வெளிப்படுத்த முயலவேண்டும்.

**Preserving Eggs.**

முட்டைகளைக் கெடாமல் வைத்தல்.—முட்டைகளைக் கெடாமல் வைத்திருக்க அநேகமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தமுறைகளை ஜெர்மனியில் சில மாஸங்களாகப் பரீக்ஷை செய்தார்களாம். 20 முறைகள் பரீக்ஷை செய்யப்பட்டன. அவைகளில் இரண்டு முறைதான் ரொம்ப ச்லாக்யமாயிருக்கின்றனவென்று தெரிகிறது. அவைகளில் ஒன்று சுண்ணம்பு தாளித்த ஜலத்தில் முட்டைகளை அமிழ்த்தி வைத்தல். இந்த முறையை சென்ற வைகாசிமீ த்துப் 'பிழைக்கும் வழி'ப்பத்ரிகையில் விவரமாய் எழுதியிருக்கிறோம்.

இன்னொருமுறை வாட்டர்-க்ளாஸ் என்னும் மருந்தில் 1 பாகத்துக்கு பத்துபங்கு ஜலம் வீதம் கலந்து அந்த ஜலத்தில் முட்டைகளை அமிழ்த்திவைத்தல். (இங்க்லீஷ் மருந்துக்கடைகளில் கம்மர்ஷியல் வாட்டர் க்ளாஸ் என்று கேட்டால் கிடைக்கும்.) ரொம்ப சுத்தமான ஒருசிறு பீப்பாயையோ அல்லது பெரிய ஜாடியையோ எடுத்து, அதில் ரொம்ப சூடான வெந்நீர் விட்டு அலம்பி அதில் பத்ரப்படுத்தவேண்டிய முட்டைகளை ஜாக்ரதையாய்வைத்து முன்சொன்ன "வாட்டர் க்ளாஸ்" கலந்த ஜலத்தை பாத்ரம் நிறைய ஊற்றி மூடிவிடவேண்டியது. இந்த பீப்பாயை அல்லது ஜாடியை குளிர்ச்சியான இடத்தில் வைத்திருந்தால் முட்டைகள் ஆறு மாஸம் வரையில் கெடாமலிருக்கின்றனவாம்.

இப்படிப் பத்ரப்படுத்தின முட்டைகளை வேகவைக்கும்போது அவைகள் வெடித்துப்போகக்கூடும். வேகவைக்கு முன்னால் முட்டையின் அடிபாகத்தை ஒரு குண்டூசியினால் குத்திவிட்டால் முட்டை வெடிக்காது.

முட்டைகளின்மேல் 'வாஸலின்' மருந்தைத்தடவி வைத்திருந்தாலும் முட்டைகள் வெகுகாலம் கெடாமலிருக்கின்றனவாம்.

**Cleaning Glass.**

கண்ணாடி சுத்தம் செய்யும் விதம்.—1. ஜன்னல் முதலியவைகளுக்கு உபயோகிக்கும் தட்டைக் கண்ணாடியின்மேல் சிறு கீறல்கள் உண்டானால் ஒரு மெல்லிய வஸ்த்ரத் துண்டை ஸ்பிரிட் எண்ணெயில் நனைத்து அக்கண்ணாடியினமேல் சிறிது நேரம் தேய்த்துப் பின்பு ஒரு பட்டுத்துண்டு அல்லது சிறு தோலினால் தேய்த்தால் கீறல்களெல்லாம் மறைந்துபோய் பளபளப்பாகிவிடும். 2. விளக்குச் சிம்னிகள் அதிக அழுக்கடைந்துபோனால் அவைகளை ஸுமார் ஒரு விநாடிநேரம் கொதிக்கும் நீரிலிருந்து எழும்பும் ஆவிக்குமேல் பிடிக்கவேண்டும். அதன் பின் சுத்த வஸ்த்ரத்தினாலும் பின்பு மெல்லிய காகிதத்தினாலும் சுத்திசெய்ய எவ்வித அழுக்கும் நீங்கி சுத்தமாகிவிடும். 3. கண்ணாடிப்புட்டிகள் முதலியவைகள் நிறம் கெட்டுப்போனால் அவைகளை உருளைக்கிழங்கின் தோலினால் நிரப்பி இறுக அடைத்து வைக்கவேண்டும். இப்படி மூன்றுநாள் இருந்தால் ஒருவகை நுரையுண்டாகும். பிறகு அந்தத் தோல்களைக் கொட்டிவிட்டுத் தண்ணீரினால் தேய்த்துக் கழுவவேண்டும். பின்பு அதை 24-மணிநேரம் ஓடுகின்ற தண்ணீரிலாவது அனலான இடத்திலாவது வைத்திருந்தால் பழைய பளபளப்பு உண்டாகிவிடும்—இந்துநேசன்.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### Sugar Cane.

கரும்புப் பயிர்.— கரும்புப் பயிரில் செதல் அனேகமாய் தண்ணீர் குறைவாலும், பயிருக்கு இட்ட உரத்தின் குணத்தாலும் இன்னும் அநேக காரணங்களாலும் நேருவதுண்டு. அனேக இடங்களில் செதலை போக்குவதற்கு வெள்ளைப் பாஷாணத்தை ஒரு ரூபாயிடை வாங்கி அதை நன்றாய்த் தூள்செய்து அதை 10 பலம் சர்க்கரையுடனும், ¼ படி கோதுமை மாவுடனும் கலந்து கொஞ்சம் கொஞ்சம் கரும்புப் பயிருக்கு யத்தியில் அங்கங்கே போட்டுக்கொண்டு போனால் அதை செதல்கள் வந்து தின்றுசாகும். செத்த செதலை தின்ன புதுச் செதல்கள் வந்து அவைகளும் மாளும். இப்படி செதல்கள் அநேகமாய் மாண்டு போகும். ஆனால் பாஷாணச் சரக்கைக் கால்நடைகள் ஜனங்கள் முதலானவர்கள் சாப்பிடாதபடி அதி ஜாக்ரதையாய் உபயோகிக்கவேண்டும்.—கிருஷிகள்.

### Cultivation of Rice.

நெல்பயிர் ஸாகுபடி.—நெல் ஸாகுபடியில் பின்வரும் விஷயங்கள் ரொம்பவும் கவனிக்கத் தக்கவை.

(1) கதிர் முற்றுவதற்கு முன்னால் வயலில் உள்ள ஜலத்தை வடியவிட்டு, ஜலம் வயலில் பாயாமலிருக்கும்படி செய்தால் நெல் நன்றாய் முற்றுவதற்கு ரொம்ப ஸாதகமேற்படும்.

(2) ஜாவா தீவில் ரொம்ப செழுமையாயும் ரொம்ப செழுமைக் குறைவாயும் இராமல் நடுத்தரமாயுள்ள நிலங்களில்தான் நாற்று விடுவது வழக்கம். ஏனென்றால் ரொம்ப செழுமையான நிலத்தில் வளர்ந்த நாற்றுக்களை கொஞ்சம் மட்டமான நிலத்தில் நட்டால் அவைகள் நன்றாய் செழுமையாய் வளருவதில்லை.

(3) தூர் கட்டுவதற்குமுன் தூர்கட்டி முடியும் வரையில் நிலத்தின் மேல் ஜலம் தங்கி நிற்காமல், நிலத்து மண்ணில் நன்றாய்ச் சுவறி யிருக்கும்படி ஜலம் பாய்ச்சுவதால், பயிர் அதிக தூர் கட்டுவதோடு, மாஸூலும் அதிகமாகக் கிடைக்கிறதாம்.

### Care of Seed.

விதைகள் கட்டும் முறை.—விவஸாயத்துக்கு விதை கட்டுபவர்களெல்லாரும் பின்வரும் விஷயங்களை கவனிக்கவேண்டியது அவச்யம். லேசான தான்யங்களும் பதரும் போகும்படியாக விதை தான்யத்தை நன்றாய் புடைத்துத் தூற்றவேண்டியது. லேசான தான்யங்களுண்டாவதற்குக் காரணங்களாவன. (1) தான்யத்தின் மணி நன்றாய் முற்றாமலிருத்தல். (2) பூச்சிகள் தான்யத்தினுள்ளே யிருக்கும் மணியைத் தின்றுவிடுதல். புடைத்தெடுத்த பிறகு விதையை வெயிலில் நன்றாய்க் காயவைக்கவேண்டும். மறுபடியும் இரண்டு வாரம் கழித்து இன்னம் ஒரு முறை காயவைக்கும்போது ஏதேனும் அந்துகள் தோன்றினால் மூன்றாம் முறை காயவைக்கவேண்டும். இன்னும் வேண்டுமானால் அடியில் சாம்பலைப்போட்டு அதன்மேல் காய்ந்த வேப்பந்தழையைப் பரப்பி விதை தான்யத்தைக் கட்டிவைக்கலாம்.

நெல்விதையை உலர்த்தி பத்ரப்படுத்தும்போது புன்கம் இலைகளை உபயோகிப்பதுண்டு. நெல்விதையில் புன்கம் இலைகள் போடுவது பூச்சி, அந்து முதலியவைகள் நெல்லைக் கெடுக்காமலிருக்கத்தான். வேறுவித இலைகளும் போடுவதுண்டு. நொச்சி, கொட்டைக் கரந்தை, வேப்பிலை முதலிய செடிகளின் இலைகளையும் சில இடங்களில் போடுகிறார்கள். மயில் துத்தப்பொடியும் போடுவதுண்டு. சட்டியில் ஜலம் வைத்து அதில் கொஞ்சம் மண் எண்ணெய் கலந்து குதிர்களில் வைத்தால் இந்த ஜந்துக்கள் அதில் விழுந்து சாகும்.

### Manure for Cocoanut.

தென்னை மரத்துக்கு எரு.—தென்னை மரத்தைச் சுற்றிலுமுள்ள மேல்வேர்களைக் களைந்து, அம்மரத்தினடியைச்சுற்றி இரண்டடி ஆழத்துக்குத் தோண்டி மண்ணை எடுத்துவிட்டு அதில் சப்பாத்தி என்னும் நாகதாளியைக் கொண்டுவந்து அக்குழி நிறைய இட்டு மேலே மண்மூடி ஜலம் பாய்ச்சிவந்தால், அம்மரங்கள் அதிக செழிப்புடன் வளர்வதோடு காய்களும் ஓயாமல் விசேஷமாகக் காய்த்துப் பலன் தருகின்றன. ஆதலால் இத்தோட்டம் வைத்து பயிரிடுவோர்கள் மேலே கூறப்பட்டுள்ள எருவை உபயோகித்து வந்தால் அதிக லாபமுண்டாகுமென்று 'விச்வகர்ம குலோபகாரி' எழுதுகிறது.

### Milch Cattle & Hot-water.

கறவை மாடுகளும் வெந்நீரும்.—கறவை மாடுகளுக்குச் சுடுதண்ணீர் குடிக்க வைப்பதில் பால் வ்ருத்தியாவதாகத் தெரிகிறது.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

## Co-operation in Denmark.

டென்மார்க்கில் கோவாபரேஷன்.—டென்மார்க்கில் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ரொம்ப முன்னேற்றமடைந்திருக்கின்றன. சென்ற 1913-ம் வர்ஷத்தில் கோவாபரேடிவ் விற்பனை ஸங்கங்கள் 30 லக்ஷம் பவுனுக்கு ஸாமான்கள் விற்பனை செய்தன. கோவாபரேடிவ் விற்பனை ஸங்கங்கள் மிகவும் அதிகரித்திருக்கின்றன. இதைத் தவிர, டேனிஷ் மொத்த விற்பனை ஸொஸைடியும் தகுந்த வ்யாபாரம் செய்து லாபமடைந்திருக்கிறது. இந்த ஸொஸைடிகள் டேனிஷ் அக்ரிகல்சுரல் (வ்யவஸாய) ஸொஸைடியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்கள் விளைவித்துக் கொடுக்கும் விதைகள் யாவற்றையும் வாங்கி அங்கங்கு வேண்டியவர்களுக்கு விற்பனை செய்தனவாம். அந்த தேசத்தில் கோவாபரேடிவ் பாங்கி, கோவாபரேடிவ் ஸிமெண்ட் சாலை, நிலக்கரி வேலை முதலிய வேலைகளும் தொடங்கியிருக்கின்றன. இவைகளில் ஸிமெண்ட்சாலை ரொம்ப ப்ரக்யாதியடைந்திருக்கிறது. நிலக்கரி வ்யாபாரத்தால் உள்ளூர் விலை ரொம்ப இறங்கி விட்டதாம்.

## The Co-operative Movement in India.

இந்தியாவில் கோவாபரேடிவ் முயற்சி.—கோவாபரேடிவ் ஸங்கங்களில் தனி ஸங்கங்களைத் தவிர மற்ற ஸெண்ட்ரல் பாங்கிகள், ப்ரொவின்ஷ்யல் பாங்கிகள் ஆகிய இவைகளுக்கும் ஸாதாரண நாணய பாங்கிகளுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பற்றியும், மேற்சொன்ன ஸெண்ட்ரல், ப்ரொவின்ஷ்யல் பாங்கிகளுக்கும அவைகளின் மெம்பர்களாக இருக்கும் ஸங்கங்களுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப்பற்றியும் இந்த கோவாபரேடிவ் பாங்கிகளின் நிர்வாகம், இன்ஸ்பெக்ஷன், கணக்குகளின் தணிக்கை ஆகிய இவைகளுக்காக எவ்வளவு மட்டில் நிபுணர்களின் உதவி வேண்டியிருக்கு மென்பதைப்பற்றியும், ஆராய்சசி செய்வதற்காக இந்திய கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் கடமைகள் பின் வருமாறு—கோவாபரேடிவ் முயற்சி, முக்யமாய் ஸெண்ட்ரல், ப்ரொவின்ஷ்யல் பாங்கிகள் சரியாக அபிவ்ருத்தியடைந்து கொண்டிருக்கின்றனவா வென்றும், அவைகளின் மூலதன நிலைமை சரியாக இருக்கிறதா என்றும் ஆராய்தல் ; இவைகளின் அபிவ்ருத்திக்காக ஏதாவது செய்ய வேண்டியது அவச்யமானால் இன்னது செய்யவேண்டு மென்று ஆராய்தல்;

ஸெண்ட்ரல் பாங்கி, ப்ரொவின்ஷ்யல் பாங்கி ஆகிய இவைகளின் அமைப்பு, நிர்வாகம், கோவாபரேடிவ் ஸங்கங்களில் பல வகைகளில் ஒன்றுக்கொன்றுள்ள பண விஷயமான ஏற்பாடுகள் ; எல்லாவித ஸங்கங்களுடைய ஆடிட் (தணிக்கை), இன்ஸ்பெக்ஷன், நிர்வாகம், ரிஸர்வ் பண்டுகளை இன்னவிதத்தில் செலவழிப்பது, அல்லது இன்னவிடத்தில் போட்டுவைப்பது, வர்ஷாந்திரக் கணக்குகளில் ரிஸர்வ் பண்டுகளை எப்படிக்காட்டுவது ஆகிய இந்த விஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்வது.

மேற் சொன்ன விஷயங்களையேயன்றி கமிட்டியார் கோவாபரேடிவ் முயற்சி ஸம்பந்தமான வேறு முக்யமான விஷயங்களைப்பற்றியும பரிசீலனைசெய்து அது விஷயமாய் ப்ரேரணைகளும்செய்யலாம். இந்தக் கமிட்டி முதலில் டெல்லியில்கூடி பிறகு இந்தியாவில் அவச்யமான இடங்களுக்குப்போய் வரும்.

## Co-operation among Depressed Classes.

தாழ்ந்த ஜாதியார்களுக்குள் கோவாபரேஷன்—பம்பாயில் தெருக்கூட்டி, கொல்லை வாரி ஜீவனம் செய்யும் தாழ்ந்த ஜாதியார்களில் அநேகர் குடியால், வர்ஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு ரூ 150 வீதம் வட்டிக்குக் கடன்வாங்கி, அந்தக்கடனை செலுத்தமாட்டாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இந்திய ஊழியஸங்கத்தில் மெம்பரான மிஸ்டர் தேவதார் என்பவர் அவர்களில் சிலருக்குக் குடியால் வரும் கெடுதிகளை எடுத்துக்காட்டி, அவர்களுக்குள் ஓர் ஐக்ய நாணயஸங்கம் ஏற்படுத்தி, அவர்களுடைய ஸம்பாத்யத்தில் மிச்சப்படும் தொகைகளை அதில் டிபாஸிட் செய்யச்சொல்லி, அவர்களில் அவச்யமான செலவிற்குப் பணம் தேவையா யிருப்பவர்களுக்கு அந்தத் தொகையிலிருந்தே ஸ்வல்ப வட்டிக்குக் கடன் கொடுத்து நடத்திக்காட்டியதில், அவர்கள் அதனாலுண்டாகும் நன்மையை அறிந்து கொண்டு அதைப்போல் அநேக ஸங்கங்கள் ஏற்படுத்தி முன்னிருந்த கடன்களையும தீர்த்து பிறரிடத்தில் அதிக வட்டிக்குக் கடன் வாங்க அவசயமில்லாமல், மேற்படி ஸங்கங்களைத் தாங்களே நன்றாய நடத்திக்கொண்டு வருகிறார்களென்று 'பூர்ண சந்திரோதயம்' எழுதுகிறது,

# COMMERCE.

## வ்யாபாரம்.

### Trade in Cocoanut Products.

தேன்னேயிலிருந்து கிடைக்கும் போருள்களில் வ்யாபாரம்:—சென்னே ராஜதானியிலிருந்து கொப்பரையே யன்றி மற்ற தென்னேப்பொருள்களும் அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதியாகி வருகின்றன. அவைகளின் விவரத்தை அடியில் கண்ட அட்டவணையில்கண்டு கொள்ளலாம்.

| — | 1912—13 அளவு | 1912—13 மதிப்பு ரூ. | 1913—14 அளவு | 1913—14 மதிப்பு ரூ. | 1913—14—ல் அதிகம் அல்லது குறைவு. அளவு | 1913—14—ல் அதிகம் அல்லது குறைவு. மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| தேங்காய் (எண்ணிக்கை) * | 82,669 | 4,151 | 70,813 | 5,164 | — 11,856 | + 1,013 |
| தேங்காய்நார் (அந்தர்) † | 8,879 | 94,550 | 14,053 | 1,65,392 | + 5,174 | + 70,842 |
| நாரால்செய்த பொருள்கள் (அந்தர்) | 7,15,969 | 81,48,891 | 7,65,787 | 88,07,356 | + 49,818 | + 6,58,465 |
| கதம்பைக்கயிறு (அந்தர்) | 16,518 | 1,81,178 | 16,531 | 1,82,358 | + 13 | + 1180 |
| கொப்பரை (அந்தர்) | 6,84,721 | 1,28,38,681 | 761,726 | 1,55,45,534 | + 77,005 | 27,06,853 |
| தேங்காயெண்ணெய் (காலன்) * | 9,29,971 | 18,43,444 | 10,60,139 | 22,48,169 | + 1,30,168 | + 4,04,725 |
| தேங்காய்ப் பிண்ணாக்கு (அந்தர்) | 1,27,396 | 6,18,809 | 81,057 | 3,93,012 | — 46,339 | — 2,25,297 |

* காலன் = 2·4 படி (பட்டணம் படி) † அந்தர் = 112-ராத்தல்.

### Match Trade of India.

இந்தியாவின் நெருப்புக்குச்சி வ்யாபாரம்.—இந்தியாவில் சென்ற 1913-14-ம் வர்ஷத்தில் வெளிநாடுகளிலிருந்து 90-லக்ஷம் ரூபாய்க்கு நெருப்புக்குச்சி இறக்குமதியாயிற்று. அதற்கு முந்தின வர்ஷம் 99-லக்ஷம் ரூபாய்க்கு இறக்குமதியாயிற்று. சென்ற வர்ஷம் வெள்ளே பாஸ்பரஸ் என்னும் நெருப்புக்குச்சி ஏற்ற உதவும் பொருள் சேர்த்துச் செய்யப்பட்ட நெருப்புக்குச்சிகள், அதாவது எங்கே வேண்டுமானுலும் கிழித்துப் பற்றவைக்கக் கூடிய நெருப்புக்குச்சிகள் இந்தியாவில் இறக்குமதியாவது கூடாதென்று சட்டமேற்பட்டதால், அந்த நெருப்புக்குச்சிகளின் வரத்து நின்றுபோய் அதனுல் இறக்குமதி குறைந்துபோயிற்றென்று தோன்றுகிறது. இந்தியாவில் நெருப்புக்குச்சி செய்வதற்கு வேண்டிய ஸாமான்கள் ஏராளமாயிருந்தும், வெளிநாடுகளிலிருந்து நெருப்புக்குச்சி ஏராளமாய் நமது நாட்டுக்குள் இறக்குமதியாகிறது.

சென்ற 1913-14-ம் வர்ஷத்தின் நெருப்புக்குச்சி இறக்குமதி விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| ஜப்பான் | ரூ. 39,07,000 |
| நார்வே, ஸ்வீடன் | 34,38,000 |
| ஆஸ்ட்ரியா | 9,67,000 |
| ஜெர்மனி | 2,51,000 |
| பெல்ஜியம் | 1,10,000 |

கொஞ்சகாலம் வரையில் இந்தியாவில் நார்வே ஸ்வீடன் ஆகிய இவைகளில் செய்யப்பட்ட நெருப்புக்குச்சிதான் விசேஷமாய் செலவாகிக்கொண்டிருந்தது. ஆனுல் அந்த இரண்டு தேசங்களுக்கும் போட்டியாக சில காலமாக ஜப்பான் நெருப்புக்குச்சி இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஜப்பான் நெருப்புக்குச்சி நார்வே ஸ்வீடன் நெருப்புக்குச்சியை விட மட்டமானது. ஆனுலும் அது (ஜப்பான் நெருப்புக்குச்சி) விலே மலிவாயிருப்பதால் விசேஷமாய் விலேப் போகிறது.

இந்தியாவில் சென்ற 1912-ம் வர்ஷத்தில் 6-நெருப்புப் பெட்டி சாலேகள் இருந்தன.

மைஸூரில் நெருப்புக்குச்சி சாலே ஸ்தாபிப்பதைப் பற்றி மைஸூர் பொருளாதாரக் கான்பரன்ஸில் ஆலோசிக்கப் போகிருர்கள் என்று தெரியவருகிறது.

## ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

**Banana Products.**

வாழைப்பழத்திலிருந்து செய்யப்படும் பொருள்கள்.—சென்ற பத்துப்பன்னிரண்டு வர்ஷகாலமாக மேல்நாடுகளில் வாழைக்காயையும், பழத்தையும் காயவைப்பதற்காக அநேக முறைகளை பரீக்ஷைகள் செய்துவந்தார்கள். இப்போது அந்தமுறைகளில் சில ஜயகூடிவந்திருக்கின்றனவென்று தெரிகிறது. அமெரிக்காவில் வாழைக்காயையும், பழத்தையும் காயவைத்து அநேக தினுஸுகளாகத் தயார்செய்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். வாழைப்பழத்தையோ, அல்லது பழக்காயையோ சர்க்கரை சேர்க்காமல் முழுசாகக் காயவைக்கிறார்கள். இப்படிக் காயவைத்த வாழைப்பழங்கள் காய்ந்த அத்திப்பழம்போல் ருசியுள்ளதாய் தித்திப்பாகவும் சாப்பிடுவதற் கேற்றதாகவும் இருக்கின்றன. இவைகளுக்கு பிக் பனானஸ் (Fig Bananas) அதாவது அத்திப்பழம் போன்ற வாழைப் பழவற்றல் என்றுபெயர்.

வாழைக்காயை அல்லது பழத்தை கொஞ்சங்கூட ஈரப்பசையில்லாமல் காயவைத்தால் அது சமையலுக்கேற்ற வாழை வற்றலாகிறது. இதுமுழுசாக இல்லாமல் துண்டுகளாகவும், அரைத்து நொய்யாகவும் மாவாகவும் விற்கப்படும். வாழைமாவும் நொய்யும் கஞ்சிமுதலிய ஆகாரவகைகள் செய்ய உதவுகின்றனவாம். வாழைமாவிலும் நொய்யிலுமுள்ள கார்போஹைட்ரேட் என்னும்மாஸத்து உணவுப்பொருள் ஸுலபமாய் கரையக்கூடிய நிலைமையிலிருக்கிறது. ஆகையால் இந்த மாவும், நொய்யும் குழந்தைகளுக்கும், பலஹீனமா யிருப்பவர்களுக்கும், குன்ம வ்யாதியஸ்தர்களுக்கும் ரொம்ப உபயோகமுள்ளவைகள் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்களாம்.

மேற்சொன்ன வாழைக்காய்ப்பொருள்கள் ஜெர்மனியிலும் க்ரேட் ப்ரிட்டனிலும் செலவாகின்றனவாம். க்ரேட் ப்ரிட்டனுக்கு ஜமய்க்கா தீவிலிருந்து ரொம்ப வாழைக்காய்ப்பொருள்கள் வருகின்றனவாம்.

**A New Plant Useful for Paper Making.**

கடுதாசிசெய்ய உதவும் ஒரு புதியசெடி.—சிமைக் கிச்சிலிக்கிழங்கு என்னும் ஒருசெடி இந்தியாவில் பற்பல இடங்களில் பயிராகிறது. இது இந்தியாவிலேயன்றி, மேல் இந்தியத்தீவுகள், ந்யூஸிலண்ட், ப்ரேஜில் முதலிய இடங்களிலும் வளருகிறது. இதில் உண்டாகும் நார் கடுதாசிசெய்ய ரொம்ப உபயோகமாம். இதிலிருந்து ரொம்ப உறுதியான கடுதாசி செய்யப்படுகிறதாம். இந்தச்செடியின் நாரிலுள்ள ஒருவகைப் பசையால் கடுதாசி தோற்கடுதாசி யென்று சொல்லப்படும் பார்ச்மெண்ட் கடுதாசியைப் போலிருக்கிறதாம். இந்தக் கடுதாசி செய்வதற்கு ப்ரத்யேகமாய்ப் பசையிட வேண்டியதில்லையாம். கடுதாசி செய்வதும் ஸுலபமாயிருக்கிறதாம்.

**Wood from Paper.**

கடுதாசியிலிருந்து 'மரம்' செய்தல்.—கடுதாசியை அரைத்துக் கூழாக்கிப் பெட்டிகளும், கூடைகளும், இன்னும் வீட்டுக்கு உதவக்கூடிய பல ஸாமான்களும் செய்யப்படுகின்றன. ஜெர்மனியில் ஒருவர் கடுதாசியிலிருந்து போலி 'மரம்' செய்யப்போவதாகத் தெரிகிறது.

இயற்கை மரத்துக்கு என்னென்ன நல்ல குணங்கள் இருக்கின்றனவோ அத்தனையும் இந்தச்செயற்கை மரத்துக்கு உண்டு. ஆனால் இது இயற்கைப் பொருளைவிட ரொம்ப விலைமலிவாயும் லேசாயுமிருக்கிறதாம்.

இயற்கைமரம் சில சீதோஷ்ண நிலைமைகளில் விரிந்தும் வளைந்தும் போகக்கூடும். ஆனால் இந்த செயற்கை 'மரம்' அப்படியொன்றும் கெட்டுப் போகாது. கரையானும், பூச்சிகளும் இதற்கு ஒரு தீங்கும் செய்யமுடியாதாம். இந்த 'மரம்' செய்வது ரொம்ப ஸுலபமாம். கடுதாசியைக் கூழாகச் செய்து, அதில் ஒருவித பசையைக்கலந்து யந்த்ரங்களில் அழுத்திவிட்டால் மரத்தைப்போல் கெட்டியாய் விடுகிறதாம். இந்தசெயற்கை 'மரத்தை' நமக்கு இஷ்டமான ஸாதாரண மரங்களைப்போலிருக்கவும் செய்யலாமாம். சாராயம், மீன், முதலிய ஸாதாரண ஸாமான்கள்வைக்க ஸாதாரண மரங்களைப்போலும், மோட்டார் வண்டிகளின்மேல் பாகங்கள், வண்டிக்கு வேண்டிய மரப்பாகங்கள் முதலியவைகளுக்கு உயர்ந்த மரங்களைப்போலவும் செய்யலாமாம். இதைக் கண்டுபிடித்த ஜெர்மானியர் முதலில் பீப்பாய்கள் செய்ய உத்தேசித்திருக்கிறாராம்.

# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Muscular Energy and Altitude.

தேகசக்தியும் பூமியின் உயரமும்.—மலைமேல் ஏறிப் போகிறவர்கள் மேலே ஏற ஏற தளர்ச்சியடைந்து ச்ரமப்படுகிறார்கள். இதற்குக் காரணம் கால் கடுக்க உயர ஏறிப்போகவேண்டி யிருக்கிறதென்பது மாத்ரமல்ல; வேறு காரணமும் இருக்கிறதென்று இரண்டு ப்ரெஞ்ச் சாஸ்த்ரிகள் சொல்லுகிறார்கள். நாம் ரொம்ப உயரமான இடத்தில் இருந்தால் நமக்கு வேலை செய்யக்கூடிய சக்தி குறைந்து போகிறதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் பின் வரும் பரீக்ஷையைச் செய்து பார்த்தார்கள். ஒரு அணில் சுற்றிச் சுற்றி வருவதற்கு உபாயம் அமைத்துள்ள ஒரு வட்டமான கூட்டில் ஒரு அணிலைவிட்டு ஸமுத்ர மட்டமுள்ள ஓர் ஊரில் வைத்துப் பார்க்கையில் அந்த அணில் தினம் 6700 தடவை சுற்றி வந்தது. இப்படி அநேக நாள் செய்து பார்த்ததில் அணில் இந்தக் கணக்குப்படியே சுற்றிக் கொண்டு வந்தது.

சில நாள் கழித்து அந்த அணிலை 15,000 அடி உயரத்துக்கு மேலுள்ள மாண்ட் ப்ளாங்க் என்னும் ஆல்ப்ஸ் மலை சிகரத்துக்குக் கொண்டுபோய் வைத்துப் பார்த்தார்கள். அங்கே அந்த அணில் தினம் 900 தடவை வீதந்தான் சுற்றிற்று. பிறகு அதை ஸமவெளிக்கு மறுபடியும் கொண்டு வந்ததில் 5000 தடவை சுற்றிற்று. இந்தப் பரீக்ஷையில் அணிலுக்கு மலை மேலேறவேண்டிய ச்ரமம் ஒன்றும் கிடையாது. ஆகையால் அவ் அணில் அதிக தடவை சுற்ற முடியாமல் போனதற்குக் காரணம் அது பூமி மட்டத்துக்கு மேல் ரொம்ப உயரத்தில் இருந்ததே. பூமி மட்டம் ரொம்ப உயரமாயிருந்தால் அங்கே ஆகாயம் நெருக்கமாயிருப்பதில்லை. ஜீவனுக்கு அவச்யமான ப்ராண வாயுவும் குறைந்திருக்கும். ப்ராணவாயு குறைந்தால் தசைநார்களின் சக்தி குறைந்துபோவது ஸகஜமாம்.

### Delhi.

டேல்லி.—டெல்லிப் பட்டணத்துக்கு அந்தப் பெயர் முதல் முதலில் எப்படி வந்தது என்பதற்கு ஒரு புராதன கதை வழங்கி வருகிறது. ஆதிகாலத்தில் டெல்லியின் அரசர் அந்தப் பட்டணத்தைக் கட்டும்போது, ஸமஸ்தானத்துப் பண்டிதர்கள் அஸ்திவாரத்தில் அஸ்திவார இரும்பை நாட்டி, அந்த இரும்பானது பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆதி சேஷனுடைய படம் வரையில் போயிருந்ததென்று சொன்னார்கள்.

ராஜா அதில் நம்பிக்கை கொள்ளாமல் பண்டிதர்கள் தாங்கள் சொல்லுவதை ருபிக்க வேண்டுமென்று சொன்னார். அதன்மேல் அவர்கள் அந்த இரும்பைப் பெயர்த்தெடுக்கச் சொல்லிப் பார்க்கையில் அந்த இரும்பில் பூமிக்குள் போயிருந்த பாகத்தின் நுனியானது முழுவதும் ரத்தமயமாயிருந்தது. எல்லாரும் ஆச்சர்ய மடைந்தார்கள். ராஜா தாம் அவநம்பிக்கையடைந்ததற்காக வெட்கமடைந்து, அந்த இரும்பை மறுபடியும் அதே இடத்தில் வைத்துவிடும்படி பண்டிதர்களைக் கேட்டுக்கொண்டார். அவர்கள் என்ன ப்ரயாஸப்பட்டும் அந்த இரும்பை சரியாக வைக்க முடியாமல் போய் அது 'டிலி' அதாவது தளர்ச்சியாகவே யிருந்தது. அது முதல் அந்தப் பட்டணம் டிலி, அல்லது டில்லி யென்றும் டெல்லி யென்றும் பெயரடையலாயிற்று.

### Panama Canal.

பனமா கால்வாய்.—அமெரிக்காவின் மத்தியில் மத்ய அமெரிக்காவுக்கும் தென்னமெரிக்காவுக்கும் இடையிலுள்ள பனமா பூஸந்தியில் ஒரு கால்வாய் வெட்டி அதன் மூலமாய் அட்லாண்டிக் மகா ஸமுத்ரத்தையும் பஸிபிக் மகா ஸமுத்ரத்தையும் ஒன்று சேர்த்திருக்கிறார்கள். அந்தக் கால்வாய் சென்ற ஆகஸ்டு மாஸம் 16-தேதி யன்று திறந்துவிடப்பட்டது. அன்றையதினம் அதன் வழியாக அமெரிக்கா ஐக்ய மாகாணங்களின் யுத்த டிபார்ட் மெண்டைச் சேர்ந்த 'ஆன்கன்' என்னும் கப்பல் முதல் முதலில் போயிற்று. அது அந்தக் கால்வாயை 11 மணி நேரத்தில் கடந்துவிட்டது. அது புறப்படும்போது அதை வெட்டுவித்த கர்னல் கோதல்ஸ் என்பவரும், பனமா குடியரசின் ப்ரெஸிடெண்டும் அது புறப்படுவதைப் பார்க்க வந்தார்களாம்.

இப்போது அந்தக் கால்வாயின் வழியாக சிறு கப்பல்கள்தான் போகலாமாம்.

# LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்

### Deepagni Sanjeevi Lehya.

தீபாக்னி ஸஞ்சீவி லேஹ்யம்.—சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், எலம், வகைக்கு பலம்-1; இவைகளை இளம் வறப்பாகவறுத்து சூர்ணித்து பசும்பால் படி 2, பனவெல்லம் பலம் 10, ஆகிய இவைகளைச்சேர்த்து பாகுசெய்து, அப்பாகில் சூர்ணத்தைத்தூவி கிண்டி வரும்போது, தேன் பலம் 10, நெய் பலம் 10, விட்டு மெழுகு பதமாகக் கிளறி பரணியில் அடைத்து கழற்சிக்காய் ப்ரமாணம் காலை மாலை இருவேளையும் 10, 5, அல்லது 7 நாள் சாப்பிடவும். வாயு, வாதம், பித்தவாயு, உஷ்ணங்கள், வயிறு உளைவு, குத்து, ஸர்வாங்கவலி, ஆஸனக்கடுப்பு, எரிச்சல பேதி, பொருமல, வாதக்கிராணி, அஸ்திஜ்வரம், அஸ்திவெட்டை, வாந்தி முதலிய வ்யாதிகள்தீரும். இச்சாபத்யம்.— விச்வகர்ம குலோபகாரி.

### Police Women in Manchester.

மான்சஸ்டரில் போலீஸ் ஸ்த்ரீகள்.—அமெரிக்காவில் அநேக பட்டணங்களில் ஸ்த்ரீகள் போலீஸ் காரர்களாக இருக்கிறார்களாம். இவர்கள் சிலவேளைகளில் ஸாதாரண போலீஸைப்போல் 'யூனிபார்ம்' என்று சட்டை, ட்ரௌஸர்கள் போட்டுக்கொண்டும், சில வேளைகளில் இவைகள்போட்டுக் கொள்ளாமலுமிருக்கிறார்களாம்.

இப்போது இங்கலண்டிலுள்ள மான்சஸ்டர் பட்டணத்திலும் ஸ்த்ரீகளை போலீஸில் சேர்த்துக்கொள்ளப் போகிறார்களாம். இந்த ஏற்பாடு சாச்வதமான ஏற்பாடல்ல. வேண்டும்போது ஸ்த்ரீகளை 'டெம்பரரியாக' போலீஸில் சேர்த்துக்கொள்ளும்படி அந்தப் பட்டணத்து முக்ய கான்ஸ்டபிளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### A Strange Marriage Custom.

ஒரு விநோதமான கல்யாணச் சடங்கு.—ஸ்பெய்ன் தேசத்தில் கல்யாணச் சடங்குகளில் முக்யமான பாகம் என்னவென்றால், மாப்பிள்ளை ஒரு புஷ்பத்தை பெண்ணிடம் கொடுப்பார். பெண் அதை வாங்கிக்கொண்டு தனது வலது காதுக்குமேல் அணிந்து கொள்வதாக ப்ரதிக்ஞை செய்வாள். அப்படியே காதில் அணிந்து கொண்டால் கல்யாணம் முடிந்ததாகிறது.

### A Children Show.

ஒரு குழந்தைக் காட்சி.—மாடுகளை நன்றாய் வளர்க்கும் விஷயத்தில் ஜனங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவதற்காக நம்முடைய நாட்டில் பல விடங்களில் அடிக்கடி கால்நடைக் காட்சிகள் ஏற்படுத்தி, அந்தக்காட்சிக்குக் கொண்டுவரப்படும் மாடுகளில் எவருடைய மாடு நன்றாய் வளர்க்கப்பட்டிருக்கிறதோ அவருக்கு இனும் கொடுக்கிறார்க ளென்பதைப் பார்த்திருக்கிறோம். அது போல இப்போது நம்முடைய தேசத்தில் வரவர அதிகரித்து வரும் சிசு மரணத்தை ஒருவாறு குறைப்பதற்காக நம்முடைய தேசத்தில் மத்ய மாகாணத்தில் காண்ட்வா என்னும் பட்டணத்தில் முனிஸிபாலிடியார் குழந்தைக் காட்சி ஒன்று ஏற்பாடு செய்து, ஸுகாதார விதிகளின்படி நன்றாய் வளர்த்த குழந்தை கொண்டு வந்தவனுக்கு இனும் கொடுத்தார்களாம். இது போல ஒவ்வொரு வருஷத்திலும் நடத்துவதாயும் தீர்மானித்திருக்கிறார்களாம்.

### Turkish Women.

துருக்கி தேசத்து ஸ்த்ரீகள்.—துருக்கி தேசத்து ஸ்த்ரீகள் இப்போது சில காலமாக தங்களுடைய ஸ்வதந்த்ரங்களை அறிந்து, படிக்கவும், ப்ரஸங்கம் செய்யவும், உத்யோகங்களில் அமரவும் தலைப்பட்டு வருகிறார்கள். "ஸ்த்ரீ ஸ்வதந்த்ரங்களை பாதுகாத்துக் கொள்ளும் ஸங்கம்" என்ற ஒரு ஸங்கத்தை ஸ்தாபித்து அதன் ஆதரவில் ஒரு பத்ரிகை நடத்திவருகிறார்கள்.

அந்தப் பத்ரிகையின் நோக்கங்கள் பின்வருமாறு.—

(1) கோஷா முறையை விலக்குவது; (2) கால தேசவர்த்தமானத்தை யறிந்து விவாகவிதிகளை உயர்த்திக்கொள்ளுவது; (3) ஸ்த்ரீகளை தகுந்தபடி குடும்பக் கார்யங்களை யறிந்து நடக்கும்படி செய்வது; (4) பெண்களை உபாத்தினி மார்களாகவும், தாதிமார்களாகவும் பழகும்படி செய்வது; (5) பெண்களுக்கு வேண்டிய பாடசாலைகள் ஸ்தாபித்து, ஏற்கனவே யுள்ள பாடசாலைகளை வ்ருத்தி செய்வது; (6) பள்ளிக்கூடங்களில் தங்கள் தேசத்துக்கு தேவையான தொழில்களைக் கற்றுக்கொடுப்பது.—பெண்கல்வி.

# INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Emigration to the Straits.

பினாங்கு, சிங்கப்பூருக்குக் கூலியாட்கள் போதல்.—பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா ஆகிய இந்த இடங்களுக்கு சென்னைத் துறைமுகங்களிலிருந்து மூன்றாவது வகுப்பு ப்ரயாணிகள் வரக்கூடாதென்று அந்தவிடங்களின் கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஏனென்றால் இப்போது யுத்தம் நடந்து வருவதில் ஏற்கனவே அநேகம் பேர்களுக்கு வேலை கிடைக்காமல் கஷ்டமாயிருக்கிறதாம். அவர்களில் ஸொந்த தேசத்துக்குப்போக இஷ்டப்படுபவர்களை கவர்ன்மெண்டார் தங்கள் செலவில் அவர்களுடைய தேசத்துக்கு அனுப்ப முன் வந்திருக்கிறார்களாம். மேலும், நாகப்பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வரும் கப்பல்களில் அதிக ஜனங்கள் ஏறி வருவதாலும், அவர்களுக்குள் தொத்து வ்யாதிகள் இருக்கக்கூடுமாகையாலும், அந்தக் கப்பல்களைத் தனியே நிறுத்திவைத்து வரும் ஜனங்களுக்கு வ்யாதிகள் ஏதாவது இருக்கின்றனவா என்று பார்த்துப் பிறகு அவர்களை கரையில் இறக்குவார்கள். ஆனால் இப்போது யுத்த மும்மரத்தில் கப்பல் நிற்குமிடங்கள் யுத்த ஸம்பந்தமாய் தேவையாயிருப்பதால் சென்னையிலிருந்து வரும் கப்பல்களை நிறுத்துவதற்குத் தக்க இடம் இல்லாமலிருக்கிறதாம். ஆனால் இந்த ஏற்பாடு கொஞ்ச காலத்துக்கு இருந்து வருமே யொழிய சாச்வதமான ஏற்பாடல்லவென்றும், வ்யாபார நிலைமை பழைய ஸ்திதியடைந்தவுடன் கூலியாட்கள் அங்கே போகலாமென்றும் சொல்லப்படுகிறது.

### Regulation of Emigration.

வேறு தேசங்களுக்குக் குடிப்போவதை ஒழுங்குபடுத்துதல்.—ஸமீபத்தில் ஆசியாவிலுள்ள தேசங்களில் சுற்றுப்ப்ரயாணம் செய்து வந்த ஒரு அமெரிக்கர் ஆசியாவாஸிகள் வேறு தேசங்களுக்குக் குடியேறிப் போவதைப்பற்றி சில விஷயங்கள் தெரிவித்திருக்கிறார். "கீழ் தேசத்து கவர்ன்மெண்டுகள் தங்கள் தேசத்தார்கள் வெளிநாடுகளுக்குப் போவதைப்பற்றியும், வெளி நாட்டார் தங்கள் தேசத்துக்கு வந்து குடியேறுவதைப்பற்றியும் ரொம்ப ஜாக்ரதையாயிருக்க வேண்டும். வேறு தேசங்களுக்குக் குடியேறிப் போகிறவர்களுடைய நிலைமையானது அவர்களுக்கு ஸன்மார்க்கக் குறைவும், தேக பலக்குறைவும், பொருளாதார நஷ்டமும் உண்டாக்கக் கூடியதாயிருந்தால் அவர்களை வெளி தேசங்களுக்குப் போக விடாமல் தடுக்க வேண்டும். கல்யாணமாகாத ஜனங்கள் தங்களுக்கு இப்படியிருக்குமென்று செவ்வையாய்த் தெரியாத விடங்களில் வேலை ஸம்பாதிக்கப்போனால் அவர்கள் அநேகமாய் தனிமையான தோட்டங்களிலோ, சுரங்கங்களின் ஸமீபத்திலோ, தொழில் சாலைக்கு அருகிலோ வஸிக்கும்படி நேரிடும். அவர்கள் குடும்ப வாழ்க்கை நடத்துவதென்பது முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில் அவர்கள் ஸன்மார்க்கத்திலும், தேக ஸௌக்யத்திலும் குறைவடைந்து போவார்கள். அவர்கள் ரொம்ப ஹீனஸ்திதியிலிருப்பதனால் பரஸ்பரதேச விவாதங்களும், பரஸ் பரஜாதி விவாதங்களும், குடியேற்ற நாட்டு விவாதமும் ஏற்படுகின்றன" என்று சொல்லுகிறார்.

### A Hindu as an American Citizen.

ஒரு ஹிந்து அமெரிக்கா வாஸியானது.—ஸகாராம் கணேச பண்டிதர் என்னும் மகாராஷ்ட்ர ப்ராமணர் சில வர்ஷங்களுக்கு முன் கல்வி அபிவ்ருத்தியின் பொருட்டு அமெரிக்கா ஐக்ய மாகாணங்களுக்குப் போனார். அந்த மாகாணங்களில் ஒன்றாகிய காலிபோர்னியா (California) மாகாணத்தில் அமெரிக்கா வாஸியாக (American Citizen) தன்னை ஏற்றுக் கொள்ளும்படி அவர் முயற்சி செய்து வந்தார்.

அவருடைய பலமான ப்ரயத்தனத்தின்பேரில் அவரை கவர்ன்மெண்டார் அமெரிக்கா வாஸியாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஐக்ய மாகாணங்களின் வாஸியாக அங்கீகரிக்கப் படுவதற்கு அதைச் சேர்ந்த சட்டப்ரகாரம் ஒருவன் 'ஸ்வாதந்த்ரியமுள்ள வெண்மையான மனிதனாக' (Free white person) இருக்கவேண்டும். காலிபோர்னியா மாகாணத்தின் கோர்ட்டில், அவ்வார்த்தைகளுக்குத் தாத்பர்யம் என்னவென்றால் அம்மாகாணங்களின் நகரவாஸியாக அங்கீகரிக்கப்பட விரும்புகிற மனிதன் காகேஸியன் ஜாதியென்ற ஆரிய வகுப்பில் ஜனித்திருந்தால் போதும்; அவன் சரீரத்தின் வர்ணம் வெண்மையாயிருந்தாலும் அல்லது கறுப்பாயிருந்தாலும் பாதகமில்லையென்று தீர்மானமாயிருக்கிறது.—பூர்ணசந்திரோதயம்.

# FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

**A Good Reply.**

சாயான பதில்.—வக்கீல்:-உன் தகப்பனார் சாகும் போது உன்னிடம் என்ன சொல்லிவிட்டு இறந்தார்.

ஸாக்ஷி.—என்னவெல்லாமோ சொன்னார்.

வக்கீல்.—அவர் கடைசி வார்த்தை என்ன?

ஸாக்ஷி.—அது தங்களுக்கு யாதொரு ஸம்பந்தமும் கிடையாதே.

வக்கீல்.—எனக்கா ஸம்பந்தம் கிடையாது. இந்த கோர்ட்டிலிருக்கிற ஜனங்களுக்கெல்லாம் ஸம்பந்தம் உண்டு. சொல்.

ஸாக்ஷி.—'உனக்கு ஏதாவது வழக்கு தீரவேண்டுமானால் பஞ்சாயத்தாரிடம் தீர்த்துக்கொள். கோர்ட் வழி போகவே போகாதே.' என்றார்.

**The Clever Grandson.**

ஒரு கெட்டிக்காரப்பேரன்.—ஸ்காட்லண்டிலுள்ள க்ளாஸ்கோ பட்டணத்தில் ஒரு ப்ரபல வ்யாபாரி தமது பேரனுக்கு மோட்டார்ஸைகிள் வாங்குவதற்காக பணம் கடன்கொடுத்தார். பையன் பணத்தை மாஸாமாஸம் கொஞ்சம் தொகையாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், முழுத்தொகையும் கொடுத்தாகிற வரையில் மோட்டார்ஸைக்கிள் அந்த வ்யாபாரியின் ஸொத்தாக இருக்கவேண்டுமென்றும் ஒப்பந்தம் பேசியிருந்தார்கள். ஒருநாள் பையன்வெளியில் ஸைக்கிளேறிப் போய்க்கொண்டிருக்கையில் தனது பாட்டனார் எதிரே வரக்கண்டு ஸைக்கிளிலிருந்து கீழே இறங்கி, அவரைப்பார்த்து, "தாத்தா, இந்த ஸைக்கிள் யாருக்கு ஸொந்தம், சொல்லுங்கள்," என்றுகேட்டான்.

தாத்தா:—"நான் இதற்குக்கொடுத்த எல்லாத் தொகையும் நீ எனக்கு திருப்பிக் கொடுக்குமவரையில் ஸைக்கிள் என்னுடையது ; அப்படித்தானே நமக்குள் பேச்சு ? ஏன் கேட்கிறாய் ?"

பையன்:—"இல்லே, இது யாருடையதென்று நிச்சயம்செய்து கொள்வதற்காகக் கேட்டேன். உங்களுடைய மோட்டார் ஸைக்கிளுக்கு ஒரு புதிய 'டையர்' போடவேண்டியிருக்கிறது."

**Going to His Village.**

கிராமத்துக்கு ஓடிப்போதல்.—'எம்டன்' சென்னைக்குவந்து சென்னையைத் தாக்கினதும் அநேகர் தம்மேல் குண்டுகள்விழுமோ என்று பயந்தும், வேறு அநேகர் மறுபடியும் 'எம்டன்' சென்னையைத் தாக்குமோ என்று பயந்தும் தங்களுடைய க்ராமங்களுக்கு ஓடிப்போய், அங்கே திருடர்களால் தொந்தரையடைந்தும், காலரா முதலிய வ்யாதிகளால் இறந்தும், கஷ்டமடைந்தும் போனார்கள். 'எம்டன்'னால் சென்னையில்நேர்ந்த கஷ்டங்களைவிட வெளியூர்களுக்கு ஓடிப்போனவர்களுடைய கஷ்டங்கள்தான் அதிகமென்று தோன்றுகிறது. இது ஸம்பந்தமாக ஒருகதை சொல்லப்படுகிறது. முன் ஒரு காலத்தில் ஆசியாதுருக்கியிலுள்ள ஜெருஸலம் என்னும் பட்டணத்தில் ப்ளேக் வ்யாதி மும்மரமாய் இருந்தது. ஆயிரக்கணக்காய் ஜனங்கள் இறந்துபோனார்கள். ஒருநாள் ஒருபக்தன் யமனைக்கண்டு அன்றையதினம் அவர் எத்தனைபேரைக் கொன்றாரென்று கேட்டார். அதற்கு யமன் தாம் அன்றையதினம் 10-பேரைக் கொன்றதாகச் சொன்னார்.

இதைக்கேட்டதும் பக்தன் ஆச்சர்யமடைந்து, அன்றையதினம் ஆயிரத்துக்குமேல் ஜனங்கள் இறந்து போனதாய்த் தெரிய வந்ததாகச் சொல்லவே, யமன், "ஏ, நரனே, நான் கொன்றது பத்துப்பேர்தான்; என்னுடன்கூட வந்த 'பயம்' என்பவர்தான் மற்றவர்களைக்கொன்றார்" என்றாராம்.

**A Lawyer and a Guard.**

ஒரு வக்கீலும் ரெயில்வே கார்டும்.—வடக்கே லார்க்கானு என்னும் ஊரிலுள்ள ஒரு வக்கீல் ஏதோ ஒரு ஊருக்குப்போகப் புறப்பட்டு, வண்டி புறப்படும் ஸமயத்தில் ஸ்டேஷனுக்குவந்து, வண்டியில் ஏற ஓடினார். ஆனால் கார்டானவர் அவரை ஏறவிடாமல் தடுத்துவிட்டார். இரண்டொரு ஸெகண்டுகளுக்குப் பிறகு கார்டு வண்டியிலேறப்போனார். அப்போது வக்கீல் சட்டப்படி வண்டி போய்க்கொண்டிருக்கும் போது ஒருவரும் ஏறக்கூடாதென்று சொல்லி கார்டைப்பிடித்து நிறுத்திவிட்டார். அதற்குள்வண்டி கொஞ்சதூரம் போய்விட்டது. கார்டு ஏறுவதற்காக வண்டி நின்றது. கார்டு வண்டியிலேறும்போது, வக்கீலும் சட்டத்துக்கு விரோதமில்லாமல், வண்டி நின்று கொண்டிருக்கையில் அதில் ஏறிக்கொண்டார்,

# CURIOSITIES.
# விநோதங்கள்.

### Spectacles for Cows.

பசுக்களுக்கு மூக்குக் கண்ணாடிகள்.—ரஷ்யாவைச் சேர்ந்த ஸைபீரியா ரொம்ப குளிர்ந்த தேசம். பசுக்கள் பனிமேல் நடந்து போகும்பொழுது வெய்யில் காய்ந்துகொண்டிருந்தால், சூரிய கிரணங்கள் பனி மீது வீழ்ந்து ப்ரதிபலித்து பசுக்களின் கண்களுக்குக் கெடுதல்கள் விளைக்கின்றனவாம். இப்படிப் பசுக்களின் கண்களுக்கு கெடுதலுண்டாகமலிருக்க கறுப்பு மூக்குக்கண்ணாடிகளை பசுக்களுக்கு ஸைபீரியாவில் உபயோகிக்கிறார்களாம். இதே மாதிரி கனடாவிலும் உபயோகிக்கிறார்களாம். பசுக்களுக்கு மூக்குக்கண்ணாடி செய்ய இங்கிலண்டிலும் பர்மிங்ஹாமிலும் கம்பெனிகள் இரவு பகலாய் வேலை செய்கின்றனவாம். இந்த வ்யாபாரம் செய்கிறவர்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கிறதாம்.

### A Coachwoman.

கோச்வண்டியோட்டும் ஸ்த்ரீ.—இங்கிலண்டில் ஸ்த்ரீகளுக்குள் கோச்வண்டி யோட்டும் தொழிலுடையவள் ஒருத்திதான் இருக்கிறாள் என்று ஸென்ஸஸ் கணக்குகளால் தெரிகிறது. அவள் இங்கிலண்டுக்குப் பக்கத்திலுள்ள வைட் என்னும் தீவில் பெம்ப்ரிட்ஜ் என்னும் ஊரில் இருக்கிறாள். இவள் பெயர் மிஸ்ஸஸ் ஜான் புல். இவள் சென்ற 26-வர்ஷகாலமாக இந்தத் தொழில் செய்து காலக்ஷேபம் செய்து வருகிறாளாம். இவள் முதலில் ஒரு சிறிய குதிரையும் வண்டியும் வைத்து ஓட்டிக்கொண்டிருந்தாள். செட்டாய் ஜீவனம் செய்து வந்து பெரிய வண்டி வாங்கி ஸவாரிக்கு விட்டுக்கொண்டிருக்கிறாள். இவள் பன்றிகள் வளர்த்து விற்றும் லாப மடைகிறாளாம்.

### Income of European Kings.

ஐரோப்பாவிலுள்ள அரசர்களின் வரும்படி.—ஒரு ப்ரான்ஸ் கணித சாஸ்த்ரி ஐரோப்பாவிலுள்ள ப்ரதான அரசர்களின் ஒவ்வொரு நிமிஷ வருமானத்தைப் பின்வருமாறு கணக்கெடுத்திருக்கிறாராம்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ரஷ்ய தேசத்துச் சக்ரவர்த்திக்கு நிமி 1-க்கு | | 213 | 0 |
| ஆஸ்ட்ரியா சக்ரவர்த்திக்கு | ,, | 105 | 12 |
| இட்டலி தேசத்தரசருக்கு | ,, | 65 | 4 |
| ஜெர்மன் சக்ரவர்த்திக்கு | ,, | 52 | 8 |
| இங்கிலீஷ் அரசருக்கு | ,, | 45 | 12 |
| ஸ்பெயின் தேசத்தரசருக்கு | ,, | 42 | 12 |
| ஸ்வீடன் தேசத்தரசருக்கு | ,, | 28 | 8 |
| பவேரியா தேசத்தரசருக்கு | ,, | 26 | 4 |
| ரொமேனியா அரசருக்கு | ,, | 4 | 8 |

இவர்களுடைய நிமிஷ வரும்படியைக் கொண்டு இவர்களுக்கு மாஸத்துக்கு அல்லது வர்ஷத்துக்கு இவ்வளவு வரும்படி யென்று கணக்கிட்டுக் கொள்ளலாம்.

### A Child with Dog's Face.

நாய்முகக் குழந்தை.—ஸமீபத்தில் லண்டனைச் சேர்ந்த பிக்காடெல்லி யென்னுமிடத்தில் ஓர் ஐரோப்பிய ஸ்த்ரீ நாய் முகத்தோடு கூடிய ஒரு குழந்தையைப் பெற்றாளாம். அப்படிப் பெற்றதற்குக் காரணம் அவள் கர்ப்பமா யிருந்தபொழுது ஒரு நாய்க்குட்டியை ப்ரியமாகவளர்த்து, அதை விட்டு எப்பொழுதும் பிரியாமலிருந்ததேயாம்.

### A Big Child.

ராக்ஷஸக் குழந்தை.—அமெரிக்காவிலுள்ள கனடா தேசத்தில் ஒரு குழந்தை பிறந்து 26 மாதமாகிறது. இதற்குள் அதன் நிறை 127 ராத்தலிகளும் மார்பகலம் 40 அங்குலமும் இருக்கின்றனவாம். ஸாதாரண மனிதர்களே 120 ராத்தல் நிறைக்குமேலிருப்பதில்லை. 2 வயதிலேயே 127 ராத்தல் கனமிருக்கிறதென்றால், இதென்ன ராக்ஷஸக் குழந்தையோ!

### The Largest Safe in the World.

உலகத்தில் மிகப் பெரியதான இரும்புப் பெட்டி.—உலகத்திலுள்ள இரும்புப் பெட்டிகள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது அமெரிக்காவில் ந்யூயார்க் பட்டணத்தில் உள்ள ஒரு கம்பெனிக்காகச் செய்யப்பட்டிருக்கிறது. இதன் கதவுகள் ஒவ்வொன்றும் 40 டன் நிறையுள்ளது. 3-அங்குலம் கனமுள்ளது. இந்தப் பெட்டியில் 900 கோடி ரூபாய் வைத்துப் பூட்டியிருக்கிறார்கள். இதைத் திருடர்கள் திறப்பதென்பது முடியாத கார்யமாம். இதன் பூட்டுகள் ரொம்ப சிக்கலான வேலைப்பாடுள்ளவை. இரண்டு பேராகச் சேர்ந்துதான் பூட்டுகளைத் திறக்கலாமாம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

*அக்டோபர்மீ" 12-தேதி.*

ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப் பட்டணத்தின் மேல் 30 கோடி ரூபாய் யுத்த அபராதம் போட்டிருக்கிருர்களாம்,

13-தேதி.

ஜெர்மானியர்கள் பெல்ஜியத்திலுள்ள கெண்ட் என்னும் பட்டணத்தைப் பிடித்திருக்கிருர்கள்.

14-தேதி.

ஜெர்மானியர்கள் ப்ரூஸ் என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

ஜெர்மானியர்கள் இன்று காலையில் ஆஸ்டண்டைப் பிடித்துக்கொண்டார்கள்.

15-தேதி.

ஜெர்மானியர்கள் கலேயைப் பிடிப்பதற்காக அதிக சேனபலத்துடன் எதிர்த்துப்போனுர்கள். ஆனல் கூட்டு'ஸைன்யங்கள் ஜெர்மானியர்களை பீரங்கிகளால் எதிர்த்து பின்னுக்குப் போகும்படி செய்துவிட்டன.

ஏன் நதிச்சண்டை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது.

18-தேதி.

ப்ரிட்டிஷ் ஸைன்யம் வடபாகத்தில் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஜெர்மானியர்களைமுப்பது மைல் தூரம் துரத்திவிட்டது.

19-தேதி.

பெல்ஜியத்தின் கடற்கரை யோரமாய் பெல்ஜியர்களுக்கும் ஜெமானியர்களுக்கும் யுத்தம் நடக்கும்போது ப்ரிட்டிஷ் கப்பல் படையின் ஒருபாகம் பெல்ஜியர்களுக்கு ஸாதகமாயிருந்து ஜெர்மானியர்களைத் தாக்கிற்று. ஜெர்மானியர்களுக்கு ரொம்ப சேதமாம்.

20-தேதி.

கெய்ஸர் பெல்ஜியத்தைப் பிடித்துவிட்டதால், யுத்தத்தில் சேராத அரசுகள் அவரை பெல்ஜியத்தின் அரசராக ஒப்புக்கொள்ளுமா என்று விசாரித்துக் கொண்டிருக்கிருராம்,

21-தேதி.

இடதுபாகத்தில் லா பாஸ்ஸி என்னுமிடத்துக்கும் வடகடலுக்கும் நடுவில் யுத்தம் கடுமையாய் நடக்கிறது. ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் ஜெர்மன் ஸைன்யங்களை இன்னும் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

23-தேதி.

ஜெர்மன் ஸேஞதியாகிய ஜெனரல் வான்மால்ட்க் என்பவருடைய புத்ரர் யுத்தத்தில் இறந்துவிட்டாராம்.

பெல்ஜியத்தில் டிக்ஸ்மூட் என்னுமிடத்தில் ஜெர்மானியர்களுக்கும் பெல்ஜியர்களுக்கும் யுத்தம் பலமாக நடக்கிறது. ந்யூபோர்ட் என்னுமிடத்தில் ஜெர்மானியர்கள் தோற்ருேடினுர்கள்.

25-தேதி.

ஜெர்மானியர்கள் யிஸர் கால்வாயைக்கடக்க முயலுகையில் பெல்ஜியர்கள் அவர்களை எதிர்த்தார்கள். கடைசியில் ஜெர்மானியர்கள் அந்தக் கால்வாயைக் கடந்துவிட்டார்கள்.

29-தேதி.

இந்திய ஸைன்யத்தைச்சேர்ந்த ஒரு குதிரைப்படை ஜெர்மானிய காலாள்படையைத் தாக்கி ஒரு மைல் தூரம் துரத்தியடித்தது. இந்தக் குதிரைப்படையின் பெயர் 'பெங்கால் லான்ஸர்ஸ்.'

ஜெர்மானியர்கள் ஸீப்ரூஜ் என்னுமிடத்தில் ஸப்மரீன் கப்பல்கள் கட்டுவதற்காக ஸப்மரீன் கப்பல்களின் பாகங்களை அந்த ஊருக்கு அனுப்பிக்கொண்டிருக்கிருர்கள், அந்தபாகங்களை ஒன்றுசேர்த்து கப்பல்களாகக்கட்டி ப்ரிட்டிஷ் போர்க்கப்பல்களைத் தாக்கப்போகிருர்களாம்.

31-தேதி.

ஜெர்மன் துருப்புகள் இந்திய துருப்புகளால் தோற்கடிக்கப் பட்டதைப் பற்றி ஜெர்மானியர்கள் ரொம்ப விசாரப்படுகிருர்களாம். இந்தியர்கள் ரொம்ப பலசாலிகளாயும் சுறுசுறுப்புள்ளவர்களாயும் இருப்பதால் அவர்களோடு கைகலந்து சண்டைசெய்வது ரொம்ப சிரம ஸாத்யமாயிருக்கிறதென்று ஜெர்மானியர்கள் சொல்லுகிருர்களாம். கைகலந்து சண்டைசெய்ய ஸமயம் ஏற்படும்வரையில் ப்ரிட்டிஷார் இந்திய துருப்புகளை தனியாக வைத்திருந்து, பிற்பாடு ஸமயம் வந்தவுடன் அவர்களை அனுப்புகிருர்களென்று சொல்லு

கிறார்களாம். இன்னும் இந்தியாவிலிருந்து 2 லக்ஷம் இந்தியர்கள் யுத்தத்துக்கு வருவார்கள் என்று பெர்லினிலுள்ளவர்கள் எண்ணியிருக்கிறார்களாம்.

நவம்பர்மீ 1-தேதி.

ஒரு ப்ரிட்டிஷ் ஆகாயக்கப்பல்காரர் கெய்ஸர் தங்கியிருந்த வீட்டில் ஆறு வெடிகுண்டுகள் (பாம்ப்) போட்டாராம். அப்போது கெய்ஸர் வெளியில் போயிருந்ததால் அவருக்கு ஒரு ஆபத்தும் நேரவில்லையாம். அங்கிருந்த இரண்டு எ-டி- காங்குகள் வெடிகுண்டுகளால் இறந்துபோனார்களாம்.

ப்ரிட்டிஷ் கப்பல்கள் இன்னும் பெல்ஜியத்தின் கரையோரமாக நின்று ஜெர்மானியர்களைத் தாக்குகின்றன.

2-தேதி.

கூட்டுஸைன்யங்கள் பெல்ஜியத்திலுள்ள பெரோன் என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டதோடு, ராம்ஸகாபல் என்னுமிடத்தில் இருந்த ஜெர்மானியர்களைத் தாக்கி, அவர்களை அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டன. ப்ரஞ்சு ஸைன்யங்கள் ஆராஸுக்கும் ஆல்பட்டுக்கும் மத்தியிலும், ஸ்வாஸோனுக்குப் பக்கத்திலும் முன்சென்று கொண்டிருக்கின்றன.

4-தேதி.

ஜெர்மானியர்கள் யிஸர் நதிக்கரையிலிருந்து பின்வாங்கிபோய்விட்டார்கள். ஜெர்மானியர்கள் ரீம்ஸுக்குப் பக்கத்தில் கூட்டு ஸைன்யங்களைத் தாக்கினார்கள். ஆனால் கடைசியில் பின் தள்ளப்பட்டார்கள்.

இந்திய துருப்புகள் ப்ரிட்டிஷ் படையெடுப்பு ஸைன்யங்களுடன் சேர்ந்து யுத்தம்செய்ய ஆரம்பித்து விட்டனவென்று தெரிவிக்கப்படுகிறது.

8-தேதி.

ஜெர்மானியர்கள் ஆராஸ்பட்டணத்தை ரொம்பவும் மும்மரமாய்த் தாக்குகிறார்கள்.

8-தேதி.

வடபாகத்தில் ஜெர்மானியர்கள் கூட்டு ஸைன்யங்களை யிப்ரஸுக்கு பக்கத்தில் ரொம்பவும் பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

9-தேதி.

டிக்ஸ்மூடிலும், யிப்ரஸ்ஸுக்குத் தென் கிழக்கிலும் ஜெர்மானியர்கள் பலமாய் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எவ்விடத்திலும் பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

10-தேதி.

ஆர்மண்டியர்ஸுக்கும் வடகடலுக்கும் நடுவில் யுத்தம் பலமாக நடந்து வருகிறது.

11-தேதி.

கூட்டு ஸைன்யங்களின் இடது பாகத்தில் ந்யூபோர்ட்டுக்கும் விஸ்நதிக்கும் இடையில் யுத்தம் பலமாக நடக்கிறது. கூட்டு ஸைன்யங்கள் லம்பார்ட்ஸைட் என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன. ஜெர்மானியர்கள் டிக்ஸ்மூட் என்னும் இடத்தை மறுபடியும் பிடித்துக்கொண்டார்கள்.

## ரஷ்யாவுக்கும், ஜெர்மனி ஆஸ்ட்ரியா ஆகிய இவைகளுக்கும் நடக்கும் யுத்தம்.

அக்டோபர்மீ 19-தேதி.

ஜெர்மானியர்கள் விஸ்டுலா என்னும் நதியைக் கடக்க முயலுகையில் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஜெர்மானியர்களுக்கு ரொம்ப ஜனங்கள் சேதமாம்.

22-தேதி.

வார்ஸாவைப் பிடிக்கப்போன ஜெர்மானியர்கள் ரஷ்யர்களால் துரத்தப்பட்டுப் பின்வாங்கி யோடுகிறார்கள்.

ப்ரஸிமிஸல் பட்டணத்துக்குத் தேற்கே ரஷ்யர்களுக்கும் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் ஸைன்யங்களுக்கும் சென்ற பத்துநாள்களாக பலமான யுத்தம் நடந்துவருகிறது.

23-தேதி.

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் வார்ஸாவிலிருந்து பின்வாங்கிப் போகிறார்கள். காலிஷியாவில் ரஷ்யர்களுக்கும் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் ஸைன்யங்களுக்கும் யுத்தம் பலமாக நடக்கிறது.

28-தேதி.

ஒரு ரஷ்ய குதிரைப்படை வாட்ஸ் என்னும் பட்டணத்தை பிடித்திருக்கின்றது.

29-தேதி.

ரஷ்யர்கள் இன்றுடாலோ என்னுமிடத்தில் ஆஸ்ட்ரியர்களைத்தாக்கி 1,000 பேர் வீரர்களைக் கைதுசெய்தார்கள்.

30-தேதி.

ஆஸ்ட்ரியாவைச்சேர்ந்த வடமேற்கு ஹங்கேரியிலும் தென்மேற்கு காலீஷ்யாவிலும் காலரா ரொம்ப கடுமையாயிருக்கிறதாம்.

நவம்பர்மீ 5-தேதி.

கிழக்கே ரஷ்யர்கள் ஜயமடைந்து வருகிருர்கள். கிழக்கு ப்ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் பின்வாங்கிப்போகிருர்கள். ரஷ்யர்கள் பாகலார்ஜிவோவைப் பிடித்திருக்கிருர்கள். சென்றவாரத்தில் ரஷ்யர்கள் 15,000 பேரைக் கைதுசெய்திருக்கிருர்கள்.

6-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் பிடித்திருந்த ஜாரஸ்லாவ் பட்டணத்தை ரஷ்யர்கள் மறுபடியும் பிடித்திருக்கிருர்கள்.

7-தேதி.

வார்ட்டாநதிக்குப் பக்கத்தில் ரஷ்யர்களுக்கும் ஜெர்மானியார்களுக்கும் சிறு சண்டைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிருர்கள்.

9-தேதி.

ஆஸ்ட்ரோ - ஜெர்மன் துருப்புகள் தோல்வியடைந்து அவைகளில் ஒரு பாகம் க்ராகோவை நோக்கியும், இன்னொரு பாகம் போஸனை நோக்கியும் போய்க்கொண்டிருக்கின்றன,

10-தேதி.

ரஷ்யர்கள் ஸோல்டா என்னுமிடத்தைப் பிடித்திருக்கிருர்கள். விஸ்டுலா நதிக்கு மேற்கே யுள்ள ஜெர்மானியர்கள் இன்னும் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிருர்கள்.

11-தேதி.

லிக் என்னுமிடத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்துத் துரத்திஞர்கள்.

### கயாச்செளவில் நடந்த யுத்தம்.

அக்டோபர்மீ 16-தேதி.

ட்ஸிங்டோவிலுள்ள இரண்டு கோட்டைகளை ஜப்பானிய கப்பல்கள் சேதப்படுத்திவிட்டன.

17-தேதி.

இன்று இரவு 'டகாசிஹோ' என்னும் ஜப்பான் க்ரூஸர் கப்பல் கயாசௌ விரிகுடாவில் கடல் வெடிகுண்டுகளில் தாக்கி மூழ்கிப்போயிற்று. பத்துபேர் தப்பிஞர்கள். 254 பேர் இறந்துபோனுர்கள்.

81-தேதி.

ஒரு இந்திய ஸைன்யம் ட்ஸிங்டோவுக்குப்போய் ஜப்பானியர்களுடன் சேர்ந்துகொண்டிருக்கிறது.

இன்று ஜப்பானியர்கள் ட்ஸிங்டோ கோட்டைகளை கடலிலிருந்தும் தரையிலிருந்தும் தாக்க ஆரம்பித்திருக்கிருர்கள்.

நவம்பர்மீ 4-தேதி.

ட்ஸிங்டோவைச்சேர்ந்த இல்டிஸ் கோட்டையை கூட்டு ஸைன்யங்கள் (ஜப்பானியர்கள், ப்ரிட்டிஷார் முதலியவர்கள்) தாக்க ஆரம்பித்திருக்கின்றன.

7-தேதி.

கயாசௌ ப்ரதேசத்திலுள்ள ட்ஸிங்டோ பட்டணம் கூட்டு ஸைன்யங்களிடம் சரணடைந்துவிட்டது. ஆகாரப்பொருள்கள் குறைந்துபோய் அவை வெளியிலிருந்து வருவதற்கு முடியாமல் போனதே இதற்குக் காரணமாம்.

ட்ஸிங்டோ பட்டணம் யுத்தம் முடியும்வரையில் ஜப்பான் வசமிருக்குமாம். பிறகு ஜப்பான் அதை விட்டுவிடுவதைப்பற்றி சீனுவுடன் கலந்து பேசுமாம்.

### ஆஸ்ட்ரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் யுத்தம்.

அக்டோபர்மீ 11-தேதி.

மாண்டிநிக்ரர்கள் 20,000 ஆஸ்ட்ரியர்களை ஸராஜிவோ என்னுமிடத்துக்குப் பக்கத்தில் தோற்கடித்தார்கள்.

15-தேதி.

ஸெர்வியர்களும் மாண்டிநிக்ரர்களும் ஆஸ்ட்ரியர்களை குல்ஸா என்னும் இடத்தில் தோற்கடித்தார்கள்.

### துருக்கியோடு யுத்தம்.

அக்டோபர்மீ 14-தேதி.

(ஸமீபத்தில் 'கோபன்', 'ப்ரஸ்லா' என்னும் இரண்டு ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் மத்யதரைக்கடலில் ப்ரிட்டிஷ் கப்பல் படையால் துரத்தப்பட்டு துருக்கியைச்சேர்ந்த டார்டனல்ஸ் ஜலஸந்திக்கு ஓடிப்போயின. துருக்கி அவைகளைத்தான் வாங்கிவிட்டதாகத் தெரிவித்திருக்கிறது. ஆயினும் அந்தக் கப்பல்களில் ஜெர்மானியர்களே கப்பல் வேலைக்காரர்களாகவும் உத்யோகஸ்தர்களாகவும் இருந்துவருகிருர்கள். மற்ற ராஜாங்கங்கள் இதைப்பற்றி ஆக்ஷேபித்திருக்கின்றன.) இப்போது 'கோபனி'ன் தலைவர் துருக்கியின் கப்பல்படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிருர். அவர் ப்ளாக்ஸீ என்னும் கடலில் உள்ள ரஷ்யக்கப்பல் படையை தாக்க உத்தேசிக்கிருராம்.

30-தேதி.

கொஞ்சகாலமாய் துருக்கி ஜெர்மனிக்கு ஸாதகமாயும நேச அரசுகளுக்கு அதாவது இங்க்லண்ட், ப்ரான்ஸ், ரஷ்யா ஆகிய இவைகளுக்கு விரோதமாயும் செய்துவந்த செய்கைகளைப்பற்றி ஒரு விவரமான அறிக்கைப் பத்ரம் இந்தியா கவர்ன்மெண்டாரால்

வெளியிடப்பட்டிருக்கிறது. (இதன் ஸாராம்சத்தை 'துருக்கியோடு யுத்தம்' என்னும் வ்யாஸத்தில் பார்க்கவும்.)

31-தேதி.

துருக்கியின் ஸைன்யங்களில் சில ஜெர்மனிக்கு விரோதமாக இருக்கின்றனவாம். சில நாள்களுக்கு முன் நான்கு ஜெர்மன் ராணுவ ஆபீஸர்களை துருக்கிய துருப்புகள் சுட்டுக் கொன்றுவிட்டனவாம்.

நவம்பர்ீ 1-தேதி.

இங்கலண்டுக்கும் துருக்கிக்கும் யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

2-தேதி.

நேச அரசுகள் துருகிய யுத்தக்கப்பல்கள் ப்ளாக்ஸீ (கருங்கடல்)யில் சில பட்டணங்களையும், கப்பல்களையும் தாக்கினதற்குக் காரணமென்னவென்றும், துருக்கிய போர்க்கப்பல்களில் உள்ள ஜெர்மானிய ஆபீஸர்களை அப்புறப்படுத்த முடியுமாவெனறும் 'கோபன்', 'ப்ரஸ்லா' என்னும் கப்பல்களிலுள்ள பீரங்கிகளை எடுத்துவிட முடியுமாவென்றும் துருக்கியைக் கேட்டிருக்கின்றன.

இப்போது நடக்கும் இங்க்லீஷ் துருக்கிய யுத்தத்தில் அரேபியாவிலும் மெஸபடோமியாவிலுமுள்ள மகம்மதிய புண்ய ஸ்தலங்களையும், ஜெட்டா துறைமுகத்தையும் பரிட்டிஷ ஸைன்யங்களும, ப்ரெஞ்ச் ரஷ்ய ஸைன்யங்களும கப்பல்படைகளும தாக்கமாட்டாவென்று இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

3-தேதி.

'மினர்வா' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் ரெட்ஸீ ஓரமாக உள்ள அகாபா என்னும் ஊரைத் தாக்கிற்று.

4-தேதி.

கோஜா மகமதியர்களின் தலைவராகிய ஆகாகான் துருக்கி இங்க்லண்டுக்கு விரோதமாக யுத்தத்தில் சேர்ந்திருப்பதைப்பற்றி வருத்தப்படுவதாயும், மகமதியர்கள் எல்லாரும இந்த யுத்ததில் சேராமல் ப்ரிட்டிஷாருக்கு விச்வாஸமாக இருக்கவேண்டுமென்றும் ஒரு கடிதம எழுதி வெளியிட்டிருக்கிறார்.

ஒரு கூட்டுக்கப்பல்படை 'துருக்கிக்கு ஸொந்தமான டார்டனல்ஸ் ஜல ஸந்தியிலுள்ள கோட்டைகளைத்தாக்கிக்கொண்டிருககிறது.

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஸிரியாவுக்குத் தெற்கே மத்யதரைக்கடலில் உள்ள ஸைப்ரஸ் என்னும் தீவை தங்கள் ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள்.

5-தேதி.

இங்க்லீஷ்-ப்ரெஞ்ச் கப்பல்படையொன்று டார்டனல்ஸ் ஜலஸந்தியிலுள்ள கோட்டைகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறது.

காக்கஸஸ் ப்ரதேசத்திலுள்ள ரஷ்ய ஸைன்யமொன்று மைமௌளன், டையாடின் என்னுமிடங்களில் துருக்கியர்களைத் தோற்கடித்து ஆர்மீனியாவிலுள்ள பேயாஸிட் என்னுமிடத்தை பிடித்துக்கொண்டது.

6-தேதி.

துருக்கியர்கள் ப்ளாக்ஸீயில் (கருங்கடல்) 'ஸைனோப்' என்னும் ரஷ்ய யுத்தக்கப்பலை மூழ்கடித்துவிட்டார்கள்.

யுத்தவிஷயமாய் துருக்கியில் மந்த்ரிகளுக்குள்ளே அபிப்ராய பேதங்கள் இருக்கின்றனவென்று தோன்றுகிறது. மந்த்ரிகளில் பாதிப்பேர் ராஜிநாமா செய்துவிட்டார்களாம்.

ப்ரான்ஸுக்கும் துருக்கிக்கும் யுத்தம் ஆரம்பித்திருக்கிறது.

7-தேதி.

துருக்கியிலுள்ள அநேக ஜனத்தலைவர்கள் கவர்ன்மெண்டார் யுத்தத்தில் சேர்ந்துகொண்டதைப்பற்றிக் கண்டித்திருக்கிறார்களாம்.

8-தேதி.

ரஷ்யர்கள் ஆசியா துருக்கியிலுள்ள கோப்ரிகாய் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள். ப்ளாக்ஸீ (கருங்கடல்)யிலுள்ள ரஷ்யக் கப்பல்படை ஸாங்குலாக் என்னும் துறைமுகத்தைத் தாக்கிற்று.

9-தேதி.

இந்திய ஸைன்யத்தின் ஒரு பாகமும், ப்ரிட்டிஷ் கடல் படையைச் சேர்ந்த ஒரு ஸைன்யமும், பர்ஸியன் வளைகுடாவில் ஷாடல் ஆரப் என்னும் நதியின் முகதவாரத்திலுள்ள பாவோ என்னுமிடத்தைப் பிடித்துக் கொண்டன.

12-தேதி.

ரஷ்யர்கள் ஆர்மீனியாவிலுள்ள கோப்ரிக்காய் என்னும் இடததில் துருக்கியர்களைத் தோற்கடித்துத் துரத்தினார்கள்.

## பொது விஷயங்கள்.

அக்டோபர்மீ 10-தேதி.

ரொமானியாவின் அரசர் இறந்துபோய்விட்டார்.

13-தேதி.

பெல்ஜியம் கவர்ன்மெண்டார் யுத்தத்தினுல் பெல்ஜியத்தில் தங்கியிருப்பது முடியாமல் ப்ரான்ஸிலுள்ள ஹாவர் என்னும் பட்டணத்துக்குப் போயிருக்கிறார்கள்.

14-தேதி.

ஆஸ்ட்ரியா இளவரசரின் கொலையில் ஸம்பந்தப்பட்ட ஸெர்வியர்களின் விசாரணை இன்று ஸராஜிவோவில் ஆரம்பமாயிற்று.

15-தேதி.

'ஹாக்' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் இன்று வடகடலில் ஒரு ஸப்மரின் படகால் மூழ்கடிக்கப்பட்டது.

'யார்மத்' என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் 'எம்டன்' என்னும் ஜெர்மன் க்ரூஸர் கப்பலோடு போய்க்கொண்டிருந்த மார்க்கமோனியா என்னும கப்பலை மூழ்கடித்து 'பாண்டபாரஸ் என்னும் க்ரீக் கப்பலைப் பிடித்துக்கொண்டது.

17-தேதி.

சில ப்ரிட்டிஷ் யுததக்கப்பல்கள் ஹாலண்டின் கடற்கரையோரமாக ஜெர்மனிக்கு ஸொந்தமான டெஸ்ட்ராயர் என்னும் யுததக்கப்பல்களில நான்கை மூழ்கடித்துவிட்டன.

19-தேதி.

தென்னுப்ரிக்காவில் கர்னல் மாரிடஸ் என்னும் ராணுவ ஆபீஸரும அவரைச்சேர்ந்த 500 பேரும கலகம செயது ஜெர்மானியாகளோடு சேர்ந்துகொணடார்கள்.

22-தேதி.

இந்த வருஷம் க்ரிஸ்ட்மஸ் பண்டிகைக்குள் (டிஸம்பர் மாஸம 25-தேதிக்குள்) இங்க்லீஷ்காரர்களுக்கு 20 லக்ஷம் ஸோல்ஜர்கள் யுததத்துககுத் தயாராயிருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது.

24-தேதி.

இந்தியாவிலிருந்து யுத்தத்துக்கு அனுப்பப்பட்டிருக்கும் லாகூர டிவிஷன் ஸைனயம 'மீரட்'டிவிஷன ஸைன்யம ஆகிய இரணடும் சேர்ந்த ஆர்மிகாருக்கு ஸர் ஜேமஸ் விலகாக்ஸ என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

26-தேதி.

மேற்கு ஆப்ரிக்காவில் ஜெர்மனிக்கு ஸொந்தமான காமரூன்ஸ் ப்ரதேசத்திலுள்ள இடியா என்னும் பட்டணத்தை இங்க்லீஷ் ப்ரெஞ்ச் ஸைன்யமொன்று கைவசப்படுத்தியிருக்கிறது.

ஸராஜிவோவில் ஆஸ்ட்ரியா இளவரசரின் கொலையில் ஸம்பந்தப்பட்ட ஸெர்வியர்களின் விசாரணை இன்று முடிவாயிற்று. முக்ய கொலையாளியும் வேறு 23-பேரும் குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டார்கள்.

28-தேதி.

இந்திய படையெடுப்பு ஸைன்யத்துடன் போயிருந்த பாடியாலா மகாராஜா உடம்பு அஸௌக்ய மடைந்து விட்டதால் அவர் இந்தியாவுக்கு வரப்புறப்பட்டு விட்டார்.

30-தேதி.

ஆஸட்ரியா இளவரசரின் கொலைக்கேஸை விசாரித்த ஸராஜிவோ கோர்ட்டார், அந்தக் கேஸில் ஸம்பந்தப்பட்ட ஐந்து பேருக்கு மரணதண்டனையும், இளவரசரைச் சுட்டும், வெடிகுண்டெறிந்தும் கொன்ற இரண்டு பேருக்கு 20-வர்ஷம் கடுங்காவலும், மற்றவர்களுக்கு வெவ்வேறுகாலம் கடுங்காவல் தண்டனையும் விதிததிருக்கிறார்கள்.

பெல்ஜியத்திலுள்ள காயம்பட்டவர்களைக் கொண்டுவருவதற்குப்போன 'ரோஹில்லா' என்னும் இங்க்லீஷ் ஹாஸ்பிடல் கப்பல் புயல்காற்றினுல் விட்பி என்னுமிடத்தில் பாறைகளில் மோதி உடைந்து போய்விட்டது.

'எம்டன்' கப்பல் பினங்குத்துறைமுகத்தில் 'ஜெம்ட்செளக்' என்னும ருஷ்ய க்ரூஸரையும் ஒரு ப்ரெஞ்ச் பீரங்கிக்கப்பலையும் தாக்கி மூழ்கடித்துவிட்டது. 85 ஜனங்கள் மூழ்கிப்போனுர்கள். எம்டன் ஒரு ருஷ்யக்கொடியுடன்போய் அங்கிருந்தவர்களை ஏமாற்றி கப்பல்களைத்தாக்கிற்றும்.

நவம்பர்மீ 1-தேதி.

இன்றையதினம தென் அமெரிக்காவிலுள்ள சில்லி தேசத்தின் கரையோரமாய் வா[illegible]பரைஸோவுக்குப் பக்கத்தில் 5 ஜெர்மன் யுத்தக்கப்பல்களுக்கும், சில ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்களுககும் யுத்தம நடந்தது. ஒரு ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல மூழ்கிப்போயிற்று. இன்னென்று ரொமப சேதமடைந்தது.

ஒரு ப்ரிட்டிஷ் க்ரூஸர் டோவர் ஜலஸந்தியில் ஒரு ஜெர்மன் ஸப்மரின் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டது.

2-தேதி.

கவர்ன்மெண்டு துருப்புகள் கர்னல் மாரிட்ஸ் என்பவருடைய ஸைன்யங்களை விடன்பர்க் ஜில்லாவில் தோற்கடித்து 240 பேர்களைக் கைதுசெய்தன.

ஹைதராபாத்தின் நிஜாம் அரசர் எல்லா மகமதியர்களும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டினிடம் ராஜபக்தியுடனிருக்க வேண்டுமென்றும், தாம் நேரில் யுத்தத்துக்குப் போகவும், தமது வரும்படி முழுவதையும் யுத்தத்துக்குக் கொடுக்கவும் தயாராயிருப்பதாகவும்,தமது ப்ரஜைகளும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டினிடம் விச்வாஸமாயிருக்க வேண்டுமென்றும் ஒரு விளம்பரம் ப்ரசுரித்திருக்கிறார்.

3-தேதி.

வடகடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் படகுசுரங்கங்களில் பட்டு மூழ்கிப்போய்விட்டது.

5-தேதி.

'யார்க்' என்னும் ஜெர்மன் க்ரூஸர் ஜெர்மனியின் வடகரையில் ஜாடே விரிகுடாவுக்குப் பக்கத்தில் சுரங்கங்களில் பட்டு மூழ்கிப்போயிற்று.

10-தேதி.

ஜெர்மன் க்ரூஸர் கப்பலாகிய 'கானிக்ஸ்பர்க்'கை 'சாதாம்' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் கப்பல் ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ரூபிஜி என்னும் நதியின் முகத்வாரத்தில் கண்டு நதியின் முகத்துவாரத்தில் சில நிலக்கரிக் கப்பல்களை மூழ்கடித்து 'கானிக்ஸ் பர்க்'கை வெளியில் வராதபடி தடுத்து விட்டது. இரண்டு கப்பல்களுக்கும் சிறிதுநேரம் யுத்தம் நடந்ததாம்.

10-தேதி.

ஜாவாதீவுக்கு 700 மைல் தென்மேற்கேயுள்ள காகாஸ் தீவிற்குப் பக்கத்தில் 'எம்டன்' என்னும் ஜெர்மன் கப்பலை 'ஸிட்னி' என்னும்ப்ரிட்டிஷ் (ஆஸ்ட்ரேலியா) யுத்தக் கப்பல் தாக்கிற்று. 'எம்டன் நெருப்புப் பிடித்து எரிந்துபோயிற்று. அப்போது நடந்த யுத்தத்தில் 200 ஜெர்மானியர்கள் சேதமாம். 'எம்டனி'ன் தலைவரும், அதில் இருந்த ஜெர்மன் ராஜவம்சத்தைச் சேர்ந்த ப்ரான்ஸ் ஜோஸப் ராஜகுமாரரும் மற்ற ஆபீஸர்களும் கைது செய்யப்பட்டார்கள். 'எம்டன்' அந்தத் தீவிலுள்ள தந்திக்கம்பிகளை அறுப்பதற்காக அந்த விடத்துக்குப்போயிற்றாம்

12-தேதி.

டோவர் ஜலஸந்தியில் டீல் என்னும் ஊருக்கு பக்கத்தில் இருந்தஹைஜர் என்னும் ப்ரிட்டிஷ் டார்பிடோக் கப்பல் ஒரு ஜெர்மன் ஸப்மரீன் கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கிவிட்டது.

## SEASON.

## காலஸ்திதி.

### Rainfall.

மழை.—1914ஞு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஞு நவம்பர்மீ 10உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் கணக்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 53·59 | 41·41 |
| வால்டேர் | 39·48 | 33·14 |
| காக்கிநாடா | 29·95 | 35·08 |
| மஸூலிப்பட்டணம் | 29·63 | 36·71 |
| நெல்லூர் | 31·32 | 25·20 |
| மதராஸ் | 52·05 | 34·16 |
| கடலூர் | 53·20 | 34·20 |
| நாகப்பட்டணம் | 39·31 | 29·96 |
| பாம்பன் | 29·00 | 18·71 |
| கொழும்பு | 55·71 | 61·54 |
| திருவனந்தபுரம் | 54·78 | 54·75 |
| கொச்சி | 103·58 | 105·80 |
| கள்ளிக்கோட்டை | 116·50 | 112·65 |
| மங்களூர் | 146·09 | 125·20 |
| மெர்க்காரா | 127·94 | 123·85 |
| ஐதராபாத் | 41·73 | 29·92 |
| பல்லாரி | 18·97 | 18·74 |
| கர்னூல் | 26·08 | 25·74 |
| கடப்பை | 25·84 | 28·25 |
| ஹாஸ்ஸான் | 26·85 | 33 06 |
| பெங்களூர் | 28·54 | 33·12 |
| கொடைக்கானல் | 59·37 | 46·10 |
| உதகமண்டலம் | 43·80 | 48·24 |
| கோயம்புத்தூர் | 13·40 | 17·70 |
| வேலூர் | 32·52 | 37·16 |
| சேலம் | 34·68 | 36·32 |
| திருசிநாப்பள்ளி | 76·86 | 25·52 |
| புதுக்கோட்டை | 28·65 | 27·54 |
| மதுரை | 23·06 | 28·84 |
| திருநெல்வேலி | 24·71 | 15·66 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | லக்னபாக்கி | | அகாமாந | துலுக்கு | இங் | தமி | வாரம் | 48-ஆனந்தஹூ கார்த்திகைமீ-தக்ஷிணாயனம்-சரத்ருது { கார்த்திகம் மார்க்கசிரம் } கொல்லம்-1090 பஸலி-1324 { இங்கிலீஷ்-1914 நவம்பர்-டிசம்பர்மீ } ஹிஜரி-1332-33 ஜில்ஹேஜ்-மொஹரம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா | வி | நா வி | உ | உ | உ | | |
| | | | | | | | | சிதி, (ரங்கூன் அவம) |
| அம | 5 | 23 | 2846 | 27 | 16 | 1 | தி | சசி-48-1,சுவா-51-23-ஆயு-10-6,உப-49-7,பத்-22-47,தி-11-13,மாஸசிவரா,கரிநாள்,ஸமார்க்கம்,விருச்சிகசதுர்த்த |
| மசி | | 12 | 45 | 28 | 17 | 2 | செ | ●-38-19,விசா-43-37,சோ-48-14,சது-13-10,தி-3-33,ரா-23-37,ஸர்வஅமா,பிண்டபிதிரு,புஷ்களா,அலப்யம் |
| அசி | | 1 | 44 | 29 | 18 | 3 | பு | பர-23-52,அனு-36-6,அதி-37-27,கிம்-3-31,பால-54-23,ரா-19-43, மார்க்கசிரசுத்த, இஷ்டி,சந்திராஸ்தம் இரவு 1-38 இன்று சந்திரதர்சனமாகாது |
| பிசி | 4 | 50 | 43 | 30 | 19 | 4 | வி | த்வி-20-7,கேட்-29-25,சுக-27-26,தை-46-11,ரா-18-44,சந்திரதர்சனம்-திதிதுவயம்,(ரங்கூன்த்விதியாதி) |
| அபி | | 39 | 42 | 1 1333-மொஹரம் | 20 | 5 விருச்சிகம் | வெ | த்ரி-12-35,மூல-23-59,திரு-18-23,வணி-39-25,தி-20-18,ரா-17-34,சதுர்த்திதி,சதுர்த்திவிரு,மூர்க்கநாய, (ரங்கூன்திதிதுவயம்) |
| சி | | 28 | 41 | 2 | 21 | 6 | ச | சது-6-40,பூரா-20-14,சுல-10-42,பவ-34-26,ரா-10-45,நாகபஞ்சமீ-சிறப்புலிநாயனூர் |
| அ | | 17 | 40 | 3 | 22 | 7 | ஞா | பஞ்-2-41,உரா-18-28,கண்-4-35,கவு-31-31,தி-28-23-சிரவணஉப,ஷஷ்டியுப,சம்பாஷஷ்டி |
| அசி | | 6 | 39 | 4 | 23 | 8 | தி | ஷஷ்-0-51,திரு-18-49,விரு-0-8,உப-57-19,கர-30-47,ரா-0-27,சாபாயன-6-8,ஞர்யவிரு |
| சிம | 3 | 55 | 38 | 5 | 24 | 9 | செ | ஸப்-1-14,அவி-21-17,விபா-56-20,பத்-32-13,ரா-11-48, |
| சிஅ | | 44 | 37 | 6 | 25 | 10 | பு | அஷ்-3-40,சத-25-39,ஹர-56-33,பால-35-34,ரா-14-30, கரிநாள், |
| சி | | 33 | 37 | 7 | 26 | 11 | வி | நவ-7-49,பூட்-31-30,வஜ 57-46,தை-40-25,ரா-29 35 |
| சிஅ | | 22 | 36 | 8 | 27 | 12 | வெ | தச-13-16,உட்-38-25,ஸித் 59-40,வணி-46-19,சே-2-11,ஏகாதசிதி |
| பிசி | | 11 | 35 | 9 | 28 | 13 | ச | ஏகா-19-29,ரே-45-53,விப-60-0,பவ-52-44,தி 12-7,அதிதி,விபசிரா, ஸர்வகைசிஏகா |
| சிபி | | 0 | 34 | 10 | 29 | 14 | ஞா | த்வா-25-59,அசு-53-27,விப-1-53,கவு-59-11,ரா-13-37,துவாதசிதி,பிரதோஷம் |
| சி | 2 | 49 | 33 | 11 | 30 | 15 | தி | த்ர-32-22,பர-60 0,வரீ-4-5,தை-32-22,தி-20-24,பரணிதீபம் |
| சி | | 38 | 32 | 12 | 1 டிஸெம்பர் | 16 | செ | சசி-38-22,பர-0-45,பரி-6-6,கர-5-25,ரா-5-44 கிருத்திகை, அருணாசலதீபம, ப்ரத்யவரோஹணம்,கணம்புல்லர் |
| அசி | | 27 | 32 | 13 | 2 | 17 | பு | ○-43-47,கிரு-7-38,சிவ-7-44,பத் 11-8,ரா-23-24,தத்தஜயந்தி,சிவ-விஷ்ணுவாலயதீப,கரிநாள் |
| உம | | 16 | 31 | 14 | 3 | 18 | வி | ப்ர-48-34,ரோ-13-56,சித்-8-54,பால-16-15,ரா-0-49,மார்க்கசிரபகுள,இஷ்டி,இராமா |
| சி | | 5 | 31 | 15 | 4 | 19 | வெ | த்வி-52-37,மிரு-19-34,சாத்-9-34,தை-20-41,ரா-13-53,திவாமா |
| சி | 1 | 53 | 30 | 16 | 5 | 20 | ச | த்ரி-55-49,திரு-24-27,சுப-9-39,வணி-24-19,ரா-28-7, |
| சி | | 42 | 29 | 17 | 6 | 21 | ஞா | சது-58-6,புன-28-31,சுப்-9-5,பவ-27-5,சே-0-36,ரா-21-12,சங்கடசதுர்த்தி |
| சி | | 31 | 28 | 18 | 7 | 22 | தி | பஞ்-59-18,பூச,31-37,பிரா-7-49,கவு-28-52, |
| சி | | 20 | 28 | 19 | 8 | 23 | செ | ஷஷ்-59-16,ஆயி-33-35,மா-5-40,கர-29-27,தி-4-48,வைசிரா |
| சிஅ | | 9 | 27 | 20 | 9 | 24 | பு | ஸப்-57-50,மக-34-16,ஸை-2-34,உப-55-49,பத்-28-45,தி-4-5,ரா-25-45-இராமா |
| சிம | 0 | 58 | 27 | 21 | 10 | 25 | வி | அஷ்-54-55,பூர-33-31,பிரீ-53-1,பால-26-34,ரா-22-31,காலாஷ்டமி, அஷ்டகா,திவாமா |
| சிஅ | | 47 | 27 | 22 | 11 | 26 | வெ | நவ-50-31,உத்-31-17,ஆயு-46-28,தை-22-53,ரா-22-45,மெய்ப்பொருநாயனூர் |
| ம | | 36 | 26 | 23 | 12 | 27 | ச | தச-44-41,ஹஸ-27-38,ஸவு-38-46,வணி-17-45,ரா-17-42,ஆநாயனூர் |
| சி | | 25 | 26 | 24 | 13 | 28 | ஞா | ஏகா-37-38,சித்-22-41,சோ-30-2,பவ-11-16,ரா-6-59,ஸர்வஏகா |
| அம | 0 | 14 | 2826 | 25 | 14 | 29 | தி | த்வா-29-40,சுவா,16-45,அதி-20-32,கவு-3-44,கர-55-33,ரா-0-51,ப்ரதோஷம்,விருச்சிகத்வாதசிதி |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| ரா | 18-விரு-பு 27-த-செ | | |
| குரு | | | கே |
| | ராசெ சு | பு | |